
கல்கி
KALKI 8-8-1976 75 காசு


சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்
B
R
I
T
A
N
N
I
A
Glaxo
BISCUITS
BRITANNIA
Glaxo
BISCUITS
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்-BBC.GLX 6-140 TM
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.

அநல ஆடி 24
ஆகஸ்டு 8, 1976




கல்கி


போடு புதிர்!



அது ஒரு புதுமையான குதிரைப் பந்தயம். ஓடக்கூடிய குதிரைகளில் எந்தக் குதிரை பின்னால் வருகிறதோ அந்தக் குதிரைக்குத் தான் முதல் பரிசு என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பந்தயம் ஆரம்பமானதும் குதிரைகள் ஓர் அங்குலம்கூட நகரவேயில்லை. பிறகு நடுவர் ஓர் அறிவிப்புச் செய்தார். அடுத்த கணம் குதிரைகள் ஓடத் தொடங்கின. ஆனாலும் கடைசியில் வரக் கூடிய குதிரைக்குத் தான் முதல் பரிசு என்ற அறிவிப்பை மாற்றவில்லை. அப்படியானால் நடுவர் புதிதாக என்ன அறிவித்திருப்பார்? -எம். எஸ். பாண்டியன்

விடை: குதிரைகளின் மீதிருந்த ஆட்களை வெவ்வேறு குதிரைகளுக்கு மாற்றினார். ஒவ்வொருவரும் தங்களது குதிரை கடைசியில் வரவேண்டும் என்ற நோக்கத்தோடு, தாங்கள் ஏறியிருந்த குதிரையை வேகமாகத்தானே ஓட்டுவார்கள்?




சிரிப்பு 100 வகை!
சிரிப்போ சிரிப்பு!
சிரிப்பது எப்படி?
சிரிப்பது எப்படி ?
இன்றுடன் உங்கள் கடன் தீர்ந்தது!
30-7-71
விவசாயிகள்
30-7-71
உடன்பிறப்பே!
எங்களிடையே வேற்றுமை இல்லை!
இல்லவே இல்லை!

மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது!

கல்கி மலர் 36 இதழ் 2

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா ,-பாரதியார்

மணலைக் கயிறாகத் திரிக்க வேண்டுமா? ஜப்பானியரால் அது முடியாமல் போகலாம்; ஆனால் அவர்கள் கடலைத் தூர்த்துத் தங்கள் சிறிய நாட்டின் நிலப் பரப்பை அதிகரித்துக் கொண்டவர்கள்!

வானத்தை வில்லாக வளைக்க வேண்டுமா? ஜப்பானியரால் அது முடியாமல் போகலாம்; ஆனால் அவர்கள் அனுப்பிய பல செயற்கைச் சந்திரன்கள் இன்று விண்வெளியில் உலகைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.

இவை மட்டுமா? அவர்கள் பூமியைக் குடைந்து கடைத் தெருக்களை, பூங்காக்களை, ஏன், சிறிய நகரங்களையே அமைத்திருக்கிறார்கள். உலகத்திலேயே செல்வச் செழிப்பு மிகுந்த நாடான அமெரிக்கா கூடத் தங்களுக்குக் கடன்பட்டு நிற்கும் அளவில் ஏற்றுமதியைப் பெருக்கி யிருக்கிறார்கள். உலகிலேயே மிக வேகமான ரயிலை மிக அதிகமான வசதிகளோடு செலுத்துவதுடன் நேரம் பிசகாமைக்கும் பெயர் எடுத்திருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ அடுக்கிக்கொண்டே போகலாம்.

மிகக் குறுகிய காலத்தில் மிக அதிகமான முன்னேற்றம் ஜப்பானில் ஏற்படக் காரணங்கள்: (1) உழைப்பார்வம் (2) சுதந்திரப் பொருளாதாரம் (3) அறிவாற்றலுக்குத் தலைவணங்கும் பண்பு.

'ஜப்பான் மிகச் சிறிய நாடு, அதனால் அதன் முன்னேற்றம் எளிதாவதுடன், பளிச்சென்று உணரும்படியாகவும் இருக்கிறது' என்று கூறுவோர் உண்டு. இது அபத்த வாதம். ஜப்பானை விடச் சிறிதாக இருந்துகொண்டு முன்னேற வழி தெரியாமல் தவிக்கும் நாடுகள் பல வற்றை நாம் பார்க்கிறோம்.

ஜப்பான் என்றதுமே இதுவரையில் சுறுசுறுப்பும் தேசபக்தியும் உடன் நினைவுகளாக எழுந்தது போல் இனி அவர்களது நெஞ்சின் உரமும் நேர்மைத் திறனும் கூடவே நினைவு வரும்.

அவர்களது இந்தப் பண்புகளை, ''டனகா கைதானார்'' என்ற செய்தி நமக்கு உணர்த்துகிறது.

லாக்ஹீட் ஊழல் பற்றி அண்மைக் காலமாக நாம் அடிக்கடி படித்து வருகிறோம். அந்த அமெரிக்க விமானத் தயாரிப்பு நிறுவனம் தனது விமானங்களை ஏராளமாக விற்று லாபம் சம்பாதிக்க ஒரு குறுக்கு வழியைக் கையாண்டது. உலகின் பல்வேறு நாட்டு அரசாங்கங்களில் உயர் பதவியில் இருப்போருக்கு லஞ்சம் கொடுத்தால் அந்த அரசுகளுக்குத் தங்கள் விமானங்களைப் பெருவாரியாக விற்று விடலாம் என்பதே அவர்கள் கண்ட குறுக்கு வழி.

இவர்கள் காட்டிய ஆசைக்குப் பலியானவர்களில் மன்னர்களும் உண்டு, உயர் அதிகாரிகளும் உண்டு. இந்த ஊழலை அம்பலப்படுத்தியது ஓர் அமெரிக்க ஏடு. இதன் எதிரொலியாகப் பல்வேறு நாடுகளில் ஆன்மப் பரிசோதனைகள் நிகழ்ந்ததில் வியப்பில்லை.

ஆனால் ஜப்பான் ஆன்மப் பரிசோதனையுடன் நிற்கவில்லை. எதையும் மழுப்பப் பார்க்கவில்லை. லஞ்ச ஊழலின் ஆணி வேரையே கெல்லி எறிய முற்பட்டிருக்கிறது. முன்னாள் பிரதமர் டனகாவையே கைது செய்தது போலீஸ். தேசத்துக்கே ஓர் அதிர்ச்சி வைத்தியம்.

முன்னாள் பிரதமராயிற்றே என்று தயங்கவில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்தவராயிற்றே என்று பார்க்கவில்லை. சந்தேகம்தானே, எந்தக் குற்றமும் இன்னும் ஐயம் திரிபற ருசுவாகவில்லையே என்று யோசித்துக் கொண்டிருக்கவில்லை. 'எடுத்த எடுப்பிலேயே ஒரு பெரிய மனிதரைப் பிடிக்க வேண்டுமா? முதலில் அடிமட்டத்தில் யாராவது அகப்படுகிறார்களா, பார்க்கலாம்; பிறகு உயர் மட்டத்துக்கு வரலாம்' என்று கடமையை ஒத்திப் போடவில்லை. இதனால் ஆளும் கட்சிக்கு ஏற்படக் கூடிய அபகீர்த்தி, அரசுக்கு நேரக் கூடிய அகௌரவம் பற்றிக் கவலைப்படவில்லை. போலீஸ் யாருடைய குறுக்கீடும் இன்றிக் கடமையைச் செய்தது.

அரசாங்கம் எதையும் பூசி மெழுகிவிடாது; தண்டனைக்குரியவர்கள்

அதனைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டது.

'பாட்டாளியானாலும் சரி, பிரதமரானாலும் சரி ஜப்பானிய ஜனநாயகத்தில் சகலருக்கும் சம நீதிதான்' என்றுரைத்தார் பிரதமர் மிக்கி. 'ஆளும் கட்சியைத் தூய்மைப் படுத்துவோம்' என்றார்.

கைதான சில நிமிஷங்களில் டனகா, தாம் ஆளும் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாகக் கூறி ராஜிநாமாச் சமர்ப்பித்தார்.

லாக்ஹீட் ஊழலில் உயர் மட்டத்திலிருக்கும் ஜப்பானியர் பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி, ஜப்பானிடம் நமக்கிருந்த மதிப்பைச் சற்றே குறைத்தது, முன்பு.

ஆனால் இப்போது, டனகா கைதான விவரத்தைப் படித்ததும் ஜப்பானியரிடம் நமக்குள்ள மதிப்பு பன்மடங்காகப் பெருகிவிட்டது.

சாண் சறுக்கினாலும் முழம் ஏறிய கதை!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி—1976

அமரர் கல்கி எழுதிய பார்த்திபன் கனவு, வாசகர்களை மகிழ்விக்க மீண்டும் பிரசுரமாகத் தொடங்கும் இந்த இதழிலேயே அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ. 1000 முதல் பரிசு பெறும் சிறுகதையும் இடம் பெறுகிறது.

இந்த ஆண்டு இப்போட்டிக்கு வழக்கம் போலவே ஏராளமான சிறுகதைகள் வந்து குவிந்தன. ஆசிரியர் குழாத்தினர் தங்களிடையே கதைகளைப் பிரித்துக்கொண்டு முதல் பரிசீலனை செய்த பிறகு, துணை ஆசிரியரின் இரண்டாவது பரிசீலனையும் அதைத் தொடர்ந்து முழுமையாக இரண்டு நாட்கள் ஆசிரியர் குழாத்தின் விவாதங்களும் நடைபெற்றன. கடலில் முக்குளித்து நல் முத்துக்களைக் கண்டெடுப்பது போல் பரிசுக்குரிய கதைகளையும் பிரசுரத்துக்கு ஏற்றனவாகப் பல கதைகளையும் தேர்ந்தெடுத்தோம்.

பரிசு பெற்ற கதைகள் பற்றிய விவரங்களை இந்த இதழின் வேறொரு பக்கத்திலும் பிரசுரத்துக்கு ஏற்கப்பட்ட கதைகளின் விவரத்தை அடுத்த இதழிலும் நேயர்கள் காணலாம். பரிசு பெற்ற கதாசிரியர்களை அறிமுகப்படுத்தும் கட்டுரை விரைவில் கல்கியில் பிரசுரமாகும்.

போட்டியில் கலந்து கொண்டு எழுதிய அனைவருக்கும் நன்றியும் பரிசு பெற்றவர்களுக்கு நல்வாழ்த்துக்களும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் இந்த இதழில் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சிறுகதை இடம் பெறுவதில் உள்ள பொருத்தத்தைக் கருதி, முன்னமேயே அறிவித்த மர்மச் சிறுகதைப் போட்டியின் முடிவை அறிவிப்பதில் சற்றுக் கால தாமதம் செய்திருக்கிறோம். கூடிய சீக்கிரமே அந்தப் போட்டியின் முடிவையும் தெரிவிக்கிறோம்.

ராஜாஜி சிந்தனை

புதிய ஜாதியைச் சிருஷ்டிப்பதா?

ஒருவர் நம்முடைய கருத்துக்கு மாறான கருத்துடையவராக இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு ஜாதி ஒழிப்பிலும், திருமண சுதந்திரத்திலும் நம்பிக்கை இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். நாம் அவரை முட்டாள் என்று கருதலாம்; ஆனால் அதற்காக அவரை வெறுக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படியில்லையானால் நாம் சீர்திருத்தவாதிகள் என்ற பெயருடன் ஒரு புதிய ஜாதியைச் சிருஷ்டித்தவர்களாவோம். பலவந்த முறையைக் கையாள்வதானால் புதிய ஜாதியைச் சிருஷ்டிப்போமேயன்றி, பழைய ஜாதியை ஒழிக்க மாட்டோம். நம் எண்ணம் நிறைவேறாமல் போகும்.

மாவைச் சுடுதண்ணீரில் கரைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? மாவுமீது சுடுதண்ணீரை அப்படியே மொத்தமாக ஊற்றினால் மாவு கரையாது. கட்டியாகப் போய்விடும். அதனால் முதலில் குளிர்ந்த நீரில் கலந்துகொண்டு பிறகு மெதுவாகச் சிறிது சிறிதாகச் சுடு தண்ணீரைக் கலந்தால் மாவைச் சுடு தண்ணீரில் கரைத்து விடலாம். ஆகவே பலவந்த முறையால் எதையும் சாதிக்க முடியாது. அறிவு புகட்டும் முறையால்தான் முடியும். இந்த உவமை மாவுக்கும் சுடுதண்ணீருக்கும் பொருந்துவது போலவே மக்கள் மனத்துக்கும் பொருந்தும்.

அன்பு முறை விரைவாகப் பயன் தராது; பகைமை முறைதான் விரைவாகப் பயன் தரும் என்று எண்ண வேண்டாம். அன்பு முறையும் அறிவு புகட்டும் முறையும் தான் பலன் தரும் வழி. வேறு வழி கிடையாது. பகைமை வழியும் பலவந்த வழியும் தோல்வியுறுமே யன்றி வெற்றி பெறாது. நன்றாக ஆராய்ந்து பார்த்தால் அன்பு முறைதான் அதிவிரைவில் பலன் தருவதாகும்.

—ஜாதிகள் என்ற கட்டுரையில்.

ஜீவ காருண்யம்

15

ஜகத்குரு
ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்



நம்மில் ஒவ்வொருவர் ஒவ்வொரு மந்திரத்தை உபதேசம் வாங்கிக் கொள்கிறோம். சிலர் சிவபஞ்சாக்ஷரி எடுத்துக்கொள்கிறார்கள். சிலர் நாராயண அஷ்டாக்ஷரி எடுத்துக்கொள்கிறார்கள். இப்படியே முருகனுக்கான ஷடாக்ஷரி, ராம மந்திரம், கிருஷ்ண மந்திரம், அம்பாள் மந்திரங்கள் என்று பல இருக்கின்றன. இவற்றை அவரவர் தங்கள் இஷ்டப்படி எடுத்துக் கொள்கிறார்கள். ஆனாலும் நம் அத்தனை பேருக்கும், மநுஷ்ய ஜன்மா எடுத்த ஸகலருக்கும், வேத சிரஸான உபநிஷத்திலேயே உபதேசித்துள்ள மந்திரம் ''தத்த''— ''தானம் பண்ணு; நல்ல கொடையாளியாக இரு'' என்பதுதான். நம் இஷ்டம், இஷ்டமில்லை என்பதற்கெல்லாம் இடமில்லாமல், இது நமக்கு வேதம் போட்டிருக்கிற ஆக்ஞை. மற்ற மந்திரங்களை ஜபிக்க வேண்டும். இந்த ''தத்த'' மந்திரத்தைக் காரியத்தில் பண்ணிக் காட்ட வேண்டும்.

இந்த உபதேசம் வருகிற பிருஹதாரண்யக உபநிஷத் என்பது சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்தது. நாலு வேதங்களுக்குள் இன்று தேசம் முழுக்க ரொம்பவும் அநுஷ்டானத்திலிருப்பது யஜுர் வேதம்தான். அதில் சுக்லம் (வெள்ளை), கிருஷ்ணம் (கறுப்பு) என்று இரண்டு பிரிவு உண்டு. வட இந்தியா முழுவதிலும் பெரும்பாலும் அநுஷ்டானத்தில் இருப்பது சுக்ல யஜுஸ்; தென்னிந்தியாவில் ரொம்பவும் அநுசரிக்கப்படுவது கிருஷ்ண யஜுஸ். சுக்ல யஜுஸைச் சேர்ந்த பிருஹதாரண்யக உபநிஷத்திலிருந்து தானத்தைப் பற்றிச் சொன்னேன். இந்த மாதிரி கிருஷ்ண யஜுஸில் உள்ள தைத்திரீயோபநிஷத்திலும் தானத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது.

அது என்ன சொல்கிறது? ''ச்ரத்தையோடு தானம் கொடுக்க வேண்டும். அச்ரத்தையோடு கொடுக்கக் கூடாது'' என்கிறது. ஸ்ரீயை (அதாவது செல்வத்தை)க் கொடுக்கும்போதே மனஸை ஸ்ரீயாக (லக்ஷ்மீகரமாக, மங்களமாக, சந்தோஷமாக) வைத்துக் கொண்டு கொடுக்க வேண்டும் என்கிறது. முகத்தைச் சுளிக்காமல் கொடுக்க வேண்டும். ஸ்ரீயின் (செல்வத்தின்) நிறைவு தான் 'ச்ரேயஸ்' என்பது. மனஸில் ஸ்ரீயுடன், மனமலர்ச்சியுடன் கொடுத்தால் இந்தத் தானத்தின் பலனாக 'ச்ரேயஸ்' கிடைக்கிறது. இன்னம் ஜாஸ்தி கொடுப்பதற்கு நம்மால் முடியவில்லையே என்று வெட்கத்தோடு கொடுக்க வேண்டும். 'ஹ்ரீ'யுடன் கொடு என்கிறது உபநிஷத். 'ஹ்ரீ' என்றால் வெட்கம், லஜ்ஜை என்று அர்த்தம். புருஷஸூக்தத்தில் பகவானுக்கு 'ஹ்ரீ', லக்ஷ்மி (ஸ்ரீ) என்று இரண்டு பத்தினிகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறது. இங்கேயும் லக்ஷ்மியை அதாவது பொருளைத் தரும்போது ''ஸ்ரீயோடு கொடு'' ''ஹ்ரீயோடு கொடு'' என்று சொல்லியிருக்கிறது. வெட்கம் இரண்டு காரணத்துக்காக. ஒன்று, இன்னும் ஜாஸ்தி தர முடியவில்லையே என்று; இரண்டாவது, தானம் பண்ணுவது வெளியிலேயே தெரியக் கூடாது என்ற கௌரவமான கூச்சம். வெளியில் தெரிந்தால் மற்றவர்களும் 'தேஹி' என்று பிடுங்குவார்களோ என்பதால் அல்ல. இவன் தர்மிஷ்டன் என்று நாலு பேருக்குத் தெரிந்து நம்மை ஸ்தோத்திரம் பண்ண ஆரம்பித்தால் நமக்கு அகம்பாவம் வந்துவிடும். அது தானத்தின் பலனையெல்லாம் சாப்பிட்டு விட்டுப் போய்விடும்.

தானம் பண்ணிவிட்டு நாம் நம் பெயரைப் பேப்பரில் போட்டுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனாலும், 'எப்படியாவது நாலு பேருக்கு நாம் தானம் பண்ணினதை நைஸாகத் தெரியப்படுத்த வேண்டும்' என்கிற எண்ணம் உள்ளூற இருந்தால் அதுவும் தோஷம்தான். அந்த நாலு பேர் நாம் தானம் பண்ணினதற்காக ஒரு பங்கு கொண்டாடினால், அதோடு, ''பண்ணின தானத்தை வெளியிலேயே தெரிவிக்காமல் எத்தனை உத்தமமான குணம்!'' என்று பத்து பங்கு ஸ்தோத்திரம் பண்ணுவார்கள். மனசுக்குள் நாம் இந்த ஸ்தோத்திரத்துக்கு ஆசைப்பட்டு விட்டால் பேப்பரில் போட்டுக் கொள்வதை விட இதுவே பெரிய தோஷமாகிவிடும். ஆனாலும் இப்படியெல்லாம் ஓர் ஆசை, இச்சை தலைதூக்கிக் கொண்டுதானே இருக்கிறது! அது தலையைத் தூக்கவொட்டாமல் அழுத்தி வைக்க என்ன பண்ணலாம்? ஒன்று பண்ணலாம் என்று தோன்றுகிறது. அதாவது, 'தானம் வாங்குகிறவன் நமக்கு அந்நியன் இல்லை; நம்மவனேதான்' என்ற



1976-ம் ஆண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

முதல் பரிசு ரூ. 1000/-

கணங்களும் யுகங்களும்

அழகாபுரி அழகப்பன்
அமராவதிபுதூர், ராமநாதபுரம் மாவட்டம்

இரண்டாம் பரிசு ரூ. 500/-

- ராஜேஷ் பெண் பார்க்கிருன்!

லக்ஷ்மி ரமணன்
c/o. டி. வி. ரமணன் ஐ.ஏ.எஸ்.
பி-20, ராம் பாக் ரோடு, ஜெய்ப்பூர்-4

மூன்ரும் பரிசு இரு கதைகளுக்குத் தலா ரூ. 250/-

அவர்கள் காத்திருக்கிருர்கள்	**சுமை இறங்கியது**
கு. வேங்கடரமணி	ஜனமேஜயன்
மருதூர், கருவாழைக்கரை,	38, பத்மநாப நகர்,
(வழி) மாயூரம்,	அடையாறு, சென்னை-600020

உணர்ச்சி இருந்தால் கொடுத்ததை வெளியில் சொல்லவே தோன்ருது. நம் குழந்தைக்கு அல்லது நெருங்கிய பந்துக்களுக்கு நாம் ஏதாவது செய்தால் அதை வெளியில் விளம்பரம் செய்து கொள்வோமா? அதே மாதிரிதான், எவரும் நமக்கு பந்துதான். சகல ஜந்துக்களும் ஒரே பார்வதி பரமேசுவரர்களின் குழந்தைகள்தான். அதனுல் நாம் 'தானம் கொடுக்கிரேம்' என்ற வார்த்தையைச் சொல்வதுகூடத் தப்புத்தான். 'பகவான் நம்மைக் கொடுக்கும்படி வைத்தான், கொடுத்தோம்' என்று அடங்கி, பவ்யமாகக் கொடுக்க வேண்டும். எங்கே இதிலும் ஓர் அகங்காரம் வந்துவிடுமோ என்று பயந்து கொண்டு கொடுக்க வேண்டும்.

''பியா தேயம்'' என்கிறது உபநிஷதம். ''பியா'' என்ருல் 'பயந்துகொண்டு' என்று அர்த்தம். சாதாரணமாக, வாங்குகிறவன்தான் பயந்துகொண்டு நிற்பான்; கொடுக்கிறவன் அதட்டிக் கொண்டு கொடுப்பான். வாஸ்தவத்தில் கொடுக்கிறவன்தான் பயப்படவேண்டும் என்கிறது உபநிஷத்து. கடைசியாக ''ஞானத்தோடு கொடுக்க வேண்டும்'' என்று முடிகிறது. ''ஸம்வித்''துடன் என்று சொல்கிறது. 'ஸம்வித்' என்ருல் 'நிறைந்த ஞானம்'. கொடுக்கிறவன், வாங்கிக் கொள்கிறவன் இரண்டு பேர்வழிகளும் வாஸ்தவத்தில் ஒருவனேதான் என்ற அறிவுதான் அந்த 'ஸம்வித்'.

வேதத்தில் கொடையைப் பற்றி இவ்வளவு சொல்லியிருக்கிற மாதிரியே கீதையிலும் பகவான் சொல்லியிருக்கிருர். அவர் தானத்தில் மூன்று தினுசு சொல்லியிருக்கிருர். ஒன்று ஸாத்விகம் — உத்தமமானது; இரண்டாவது ராஜஸம் — மத்யமமானது; மூன்ருவது தாமஸம்—அதமமானது. துளிக்கூடப் பிரதி உபகாரத்தையே எந்த விதத்திலும் எதிர்பார்க்காமல் தகுந்த பாத்திரத்துக்குத் தகுந்த இடத்தில், தகுந்த காலத்தில் தருவதுதான் ''ஸாத்விகம்''. தானம் செய்வதால் கிடைக்கிற புண்ய பயனையும் தானம் வாங்கினவன் செய்கிற பிரதி உபகாரத்தையும் நினைத்துக் கொண்டு, 'பொருளில் பற்றுப் போகாததால் உள்ளுக்குள் கஷ்டப்பட்டுக் கொண்டு கொடுக்கிற தானம் ''ராஜஸம்'' என்ற வகையைச் சேர்ந்தது. பாத்திரமல்லாதவர்களுக்குத் தகாத இடத்தில், தகாத காலத்தில் அவமானப்படுத்திக் கொடுப்பது ''தாமஸம்''. இப்படி கிருஷ்ண பரமாத்மா தானத்திலேயே இனப் பாகுபாடு (Distinction) பண்ணுகிருர்.

புராணங்களிலும் எங்கு பார்த்தாலும், தானத்தின் மகிமை சொல்லி யிருக்கிறது. இன்ன மாசத்தில், இன்ன இடத்தில், இன்னருக்கு இன்ன தானம் பண்ணினுல் இன்ன பலன் என்று நிறையச் சொல்லி யிருக்கிறது. தர்ம சாஸ்திரங்களிலும், திருக்குறள், ஆத்திசூடி முதலான நீதி நூல்களிலும் அப்படியே ஈகையின் சிறப்பை விஸ்தாரமாகச் சொல்லி யிருக்கிறது. ஈகை, தானம் என்பதெல்லாம் என்ன? பரோபகாரத்தின் ஒரு ரூபம்தானே?


ஆனபடியால், 'ஹிந்து மதத்தில் பரோபகாரத்தைப் பற்றி ஒன்றுமில்லை — ஆசாரம், அநுஷ்டானம், பூஜை, யோகம், ஆத்ம விசாரம் இதுகள் தான் உண்டு' என்று நினைப்பது கொஞ்சம் கூடச் சரியில்லை. (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]


பார்த்திபன் கனவு
பாகம்

அத்தியாயம் 1

தோணித் துறை



காவேரி தீரம் அமைதி குடிகொண்டு விளங்கிற்று. உதய சூரியனின் செம்பொற் கிரணங்களால் நதியின் செந்நீர்ப் பிரவாகம் பொன்னிறம் பெற்றுத் திகழ்ந்தது. அந்தப் புண்ணிய நதிக்குப் 'பொன்னி' என்னும் பெயர் அந்த வேளையில் மிகப் பொருத்தமாய்த் தோன்றியது. சுழிகள்—சுழல்களுடனே விரைந்து சென்று கொண்டிருந்த அந்தப் பிரவாகத்தின் மீது காலை இளங் காற்று தவழ்ந்து விளையாடி இந்திர ஜால வித்தைகள் காட்டிக் கொண்டிருந்தது. சின்னஞ் சிறு அலைகள் ஒன்றோடொன்று இலேசாக மோதியபோது சிதறி விழுந்த ஆயிரமாயிரம் நீர்த் துளிகள் ஜாஜ்வல்யமான ரத்தினங்களாகவும், கோமேதகங்களாகவும், வைரங்களாகவும், மரகதங்களாகவும் பிரகாசித்துக் காவேரி நதியை ஒரு மாயாபுரியாக ஆக்கிக் கொண்டிருந்தன.


ஆற்றங்கரையில் ஆலமரங்கள் நெடுந் தூரத்துக்கு .நெடுந் தூரம் விழுதுகள் விட்டு விசாலமாய்ப் படர்ந்திருந்தன. மரங்களில் பழைய இலைகள் எல்லாம் உதிர்ந்து புதிதாய்த் தளிர் விட்டிருந்த காலம். அந்த இளந் தளிர்களின்மீது காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் படிந்து அவற்றைத் தங்கத் தகடுகளாகச் செய்து கொண்டிருந்தன.

கண்ணுக்கெட்டிய தூரம் தண்ணீர் மயமாய்த் தோன்றிய அந்த நதியின் மத்தியில் வடகிழக்குத் திசையிலே ஒரு பசுமையான தீவு காணப் பட்டது. தீவின் நடுவில் பச்சை மரங்களுக்கு மேலே கம்பீரமாகத் தலைதூக்கி நின்ற மாளிகையின் தங்கக் கலசம் தகதகவென்று ஒளி மயமாய் விளங்கிற்று.

* * *

அந்த மனோகரமான காலை நேரத்தில் அங்கு எழுந்த பலவகைச் சத்தங்கள் நதி தீரத்தின் அமைதியை நன்கு எடுத்துக்காட்டுவனவா யிருந்தன. விசாலமான ஆலமரங்களில் வாழ்ந்த பறவை இனங்கள் சூரியோதயத்தை வரவேற்றுப் பற்பல இசைகளில் கீதங்கள் பாடின. அந்த இயற்கைச் சங்கீதத்துக்கு நதிப் பிரவாகத்தின் 'ஹோ' என்ற ஓசை சுருதி கொடுத்துக் கொண்டிருந்தது. உணவு தேடும்பொருட்டு வெளியே கிளம்புவதற்கு ஆயத்தமான பறவைகள் தம் சிறகுகளை அடித்து ஆர்ப்பரித்தன. தாய்ப் பறவைகள் குஞ்சுகளிடம் கொஞ்சிக் கொஞ்சி விடைபெற்றுக் கொண்டிருந்தன.

ஆலமரங்களுக்கு நடுவே ஓங்கி வளர்ந்திருந்த அரச மரம் தன் இலைகளைச்



சலசல வென்று ஓசைப் படுத்தி 'நானும் இருக்கிறேன்' என்று தெரியப் படுத்திற்று.

நதி ஓரத்தில் ஆலம் விழுதுகளில் கட்டிப் போட்டிருந்த தெப்பங்களைத் தண்ணீர்ப் பிரவாகம் அடித்துக் கொண்டு போவதற்கு எவ்வளவோ வீராவேசத்துடன் முயன்றது; அது முடியாமற் போகவே, 'இருக்கட்டும்; இருக்கட்டும்' என்று கோபக் குரலில் இரைந்துகொண்டே சென்றது.

கரையில் சற்றுத் தூரத்தில் ஓர் ஆலமரத்தினடியில் குடிசை வீடு ஒன்று காணப்பட்டது. அதன் கூரை வழியாக அடுப்புப் புகை வந்துகொண்டிருந்தது. அடுப்பில் கம்பு - அடை வேகும் வாசனையும் இலேசாக வந்தது.

குடிசையின் பக்கத்தில் கறவை எருமை ஒன்று படுத்து அசை போட்டுக் கொண்டிருந்தது. அதன் கன்று அருகில் நின்று தாய் அசை போடுவதை மிக்க ஆச்சரியத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

டக்டக், டக்டக், டக்டக்!...

அந்த நதி தீரத்தின் ஆழ்ந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு குதிரைக் குளம்படியின் சத்தம் கேட்டது.

டக்டக், டக்டக், டக்டக்!....

வர வர அந்தச் சத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதோ வருகிறது, நாலு கால் பாய்ச்சலில் ஒரு கம்பீரமான குதிரை. அதன் மேல் ஆஜானுபாகுவான வீரன் ஒருவன் காணப்படுகிறான். வந்த வேகத்தில் குதிரையும் வீரனும் வியர்வையில் முழுகியிருக்கிறார்கள். தோணித்துறை வந்ததும் குதிரை நிற்கிறது. வீரன் அதன் மேலிருந்து குதித்து இறங்குகிறான்.

* * *

குடிசைக்குள்ளே இளம் பெண் ஒருத்தி அடுப்பில் அடை சுட்டுக்கொண்டிருந்தாள். அருகில் திடகாத்திரனான ஒரு வாலிபன் உட்கார்ந்து, தைத்த இளம் ஆலம் இலையிலே போட்டிருந்த கம்பு அடையைக் கீரைக் குழம்புடன் ருசி பார்த்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஒருதடவை அவன் நாக்கைச் சப்புக் கொட்டிவிட்டு, ''அடி வள்ளி, இன்னும் எத்தனை நாளைக்கு உன் கையால் கம்பு அடையும் கீரைக்குழம்பும் சாப்பிட எனக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ, தெரியவில்லை!'' என்றான்.

''தினம் பொழுது விடிந்தால் நீ இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறாய். இன்னொரு தடவை சொன்னால் இதோ இந்த அடுப்பை வெட்டிக் காவேரியில் போட்டு விடுவேன், பார்!'' என்றாள் அந்தப் பெண்.

''நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை, வள்ளி! மகாராஜாவும் மகாராணியும் நேற்றுப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். யுத்தம் நிச்சயமாய் வரப் போகிறது'' என்றான் வாலிபன்.

''யுத்தம் வந்தால் உனக்கு என்ன என்றுதான் கேட்கிறேன். உன்னை யார் யுத்தத்துக்கு அழைக்கிறார்கள்? உன் பாட்டுக்குப் படகோட்டிக் கொண்டு இருக்க வேண்டியதுதானே?''

''அதுதான் இல்லே. நான் மகா ராஜாவின் காலிலே விழுந்து கேட்டுக் கொள்ளப் போகிறேன், என்னையும் யுத்தத்துக்கு அழைத்துக் கொண்டு போகச் சொல்லி.''

''நான் உன் காலிலே விழுந்து என்னையும் உன்னோடு அழைத்துக் கொண்டு போ என்று கேட்டுக் கொள்ளப் போகிறேன். அதற்கு உனக்கு இஷ்டமில்லா விட்டால், — காவேரி ஆற்றோடு போன வளை எடுத்துக் காப்பாற்றினாயோ இல்லையோ — மறுபடியும் அந்தக் காவேரியிலே இழுத்துவிட்டுவிட்டுப்போய்விடு!''

''அதுதான் சரி. வள்ளி! சோழ தேசம் இப்போது அப்படித்தான் ஆகி விட்டது. பெண் பிள்ளைகள் யுத்தத் துக்குப் போக வேண்டியது; ஆண் பிள்ளைகள் வீட்டுக்குள் ஒளிந்துகொண்டிருக்கவேண்டியது... இரு,இரு! குதிரை வருகிற சத்தம் போல் கேட்கிறதே!''

ஆம்; அந்தச் சமயத்திலேதான் 'டக் டக், டக்டக்' என்ற குதிரைக் காலடியின் சத்தம் கேட்டது. அந்தச் சத்தத்தினால் அவ்வாலிபனின் உடம்பில் ஒரு துடிப்பு உண்டாயிற்று. அப்படியே எச்சில் கையோடு எழுந்தான். வாசற்புறம் ஓடினான்.

அங்கே அப்போதுதான் குதிரை மீதிருந்து இறங்கிய வீரன், ''பொன்னா! மகாராஜாவுக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன். சீக்கிரம் தோணியை எடு!'' என்றான்.

பொன்னன், ''இதோ வந்துவிட்டேன்!'' என்று சொல்லிவிட்டு உள்ளே ஓடினான். அச்சமயம் வள்ளி சட்டுவத்தில் இன்னொரு அடை தட்டுவதற்காக மாவை எடுத்துக் கொண்டிருந்தாள். ''வள்ளி! உறையூரிலிருந்து சேதி கொண்டு வந்திருக்கிறான். அவசரச் சேதியாம். நான் போய் வருகிறேன்'' என்றான் பொன்னன்.

''நல்ல அவசரச் சேதி! அரை வயிறு கூட நிரம்பியிராதே? எனக்குப் பிடிக்கவே யில்லை'' என்று வள்ளி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''அதற்கென்ன செய்கிறது, வள்ளி! அரண்மனைச் சேவகம் என்றால் சும்மாவா?'' என்று பொன்னன் சொல்லிக் கொண்டே அவளுடைய சமீபம் சென்றான். கோபம் கொண்ட அவளது முகத்தைத் தன் கைகளால் திருப்பினான். வள்ளி புன்னகையுடன் தன் முகத்தின் மேல் விழுந்திருந்த கூந்தலை இடது கையால் எடுத்துச் சொருக்குப் போட்டுக்கொண்டு, ''சீக்கிரம் வந்துவிடுகிறாயா?'' என்று சொல்லிப் பொன்னனை அண்ணாந்து பார்த்தாள். பொன்னன் அவளுடைய முகத்தை நோக்கிக் குனிந்தான். அப்போது வெளியிலிருந்து, ''எத்தனை நேரம் பொன்னா?'' என்று கூச்சல் கேட்கவே, பொன்னன் திடுக்கிட்டவனாய், ''இதோ வந்துவிட்டேன்!'' என்று கூச்சலிட்டுக்கொண்டு வெளியே ஓடினான்.

அத்தியாயம் 2

ராஜ குடும்பம்

பொன்னன் போன பிறகு வள்ளி வீட்டுக் காரியங்களைப் பார்க்கத் தொடங்கினாள். குடிசையை மெழுகிச் சுத்தம் செய்தாள். மரத்தடியில் கட்டியிருந்த எருமை மாட்டைக் கறந்து கொண்டு வந்தாள். பிறகு, காவேரியில் மரக் கிளைகள் தாழ்ந்திருந்த ஓரிடத்திலே இறங்கிக் குளித்துவிட்டு வந்தாள். சேலை மாற்றிக் கொண்ட பிறகு, மறுபடியும் அடுப்பு மூட்டிச் சமையல் செய்யத் தொடங்கினாள்.


ஆனால், அவளுடைய மனசு என்னமோ பரபரவென்று அலைந்து கொண்டிருந்தது. அடிக்கடி குடிசை வாசலுக்கு வந்து தன்னுடைய கரிய பெரிய கண்களைச் சுழற்றி நாலா புறமும் பார்த்து விட்டு உள்ளே போனாள். ஏதோ விசேஷ சம்பவங்கள் நடக்கப் போகின்றன என்று ஆவலுடன் எதிர்பார்த்தவளாய்த் தோன்றினாள்.

அவள் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் உறையூர்ப் பக்கத்திலிருந்து பத்துப் பதினைந்து குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில், அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த இரண்டு வெள்ளைப் புரவிகளும், ஒரு தந்தப் பல்லக்கும் வந்தன. அந்த வெண் புரவிகளின் மேல் யாரும் வீற்றிருக்கவில்லை. பல்லக்கும் வெறுமையாகவே இருந்தது. இடகாத்திர தேகிகளான எட்டுப் பேர் பல்லக்கைச் சுமந்து கொண்டு வந்தனர்.

எல்லாரும் தோணித் துறைக்குச் சற்றுத் தூரத்தில் வந்து நின்றார்கள். பல்லக்கு கீழே இறக்கப்பட்டது. குதிரைமீதிருந்தவர்களும் கீழே இறங்கிக் குதிரைகளை மரங்களில் கட்டினார்கள்.

இதையெல்லாம் குடிசை வாசலில் நின்று வள்ளி கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர் வழங்கும் தீஞ்சுவையுள்ள 'திடீர்த் தயாரிப்பு.'



'போரிங்' கஸ்டர்டு

புருட் ஸலாட், கேக், ஜெல்லி ஆகியவற்றுக்கு சுவையூட்டுங்கள். அதன் மீது கஸ்டர்டை ஊற்றுங்கள். 'போரிங்' கஸ்டர்டு தயாரிக்க: 1½ தேக்கரண்டி பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டி சர்க்கரை மற்றும் சிறிது குளிர்ந்த பால் எடுத்துக் கொள்ளுங்கள். கூழாகும் வரை கலக்கிக் கிளறுங்கள். ஒரு கோப்பை பாலை சூடாக்கி, கஸ்டர்டு பவுடர் கலவையை அதில் சேர்த்து விடுங்கள். கொதிக்கும் வரை கிளறுங்கள். சூடாகவோ, குளிர்ந்ததாகவோ பரிமாறுங்கள்.

அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன்.

வெரைட்டி கஸ்டர்டு பவுடர் பேக்
6 கவர்ச்சிகரமான சுவைகளில் கிடைக்கிறது.



முட்டை கலவாதது.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். சோமானி மார்க், பம்பாய் 400 001.

OBM/5469 TM

அவள் அப்படி நிற்பதைப் பார்த்த வீரர்களில் ஒருவன் ''அண்ணே! வள்ளியிடம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு வரலாம்'' என்றான்.

''அடே, வேலப்பா! காவேரி நிறையத் தண்ணீர் போகிறது. வள்ளியிடம் என்னத்திற்காகத் தண்ணீர் கேட்கப் போகிறாய்?'' என்றான் மற்றவன்.

''இருந்தாலும் வள்ளியின் கையால் தண்ணீர் குடிப்பது போல் ஆகுமா, அண்ணே?''

இப்படிப் பேசிக் கொண்டு இருவரும் குடிசை அருகில் வந்து சேர்ந்தார்கள்.

''வள்ளி! கொஞ்சம் தாகத்துக்குத் தண்ணீர் தருகிறாயா?'' என்று வேலப்பன் கேட்டான்.

வள்ளி உள்ளே விரைவாகச் சென்று சட்டியில் மோர் எடுத்துக் கொண்டு வந்து இரண்டு பேருக்கும் கொடுத்தாள். அவர்கள் குடிக்கும்போதே, ''மகாராஜா இன்றைக்கு உறையூருக்குப் போகிறாராமே? ஏன் இவ்வளவு அவசரம்? இந்த மாதமெல்லாம் அவர் 'வசந்த மாளிகை'யில் இருப்பது வழக்கமாயிற்றே?'' என்று கேட்டாள்.

''எங்களை ஏன் கேட்கிறாய் வள்ளி! உன்னுடைய புருஷனைக் கேட்கிறது தானே? படகோட்டி பொன்னனுக்குத் தெரியாத ராஜ ரகசியம் என்ன இருக்கிறது?'' என்றான் வேலப்பன்.

''காலையில் சாப்பிட உட்கார்ந்தார். அதற்குள் அவசரமாய் ஆள் வந்து, மகாராஜாவுக்குச் சேதி கொண்டுபோக வேணுமென்று சொல்லவே, எழுந்து போய்விட்டார். சரியாகச் சாப்பிடக் கூட இல்லை!'' என்றாள் வள்ளி.

''பாரப்பா, புருஷன் பேரில் உள்ள கரிசனத்தை? பெண்சாதி என்றால் இப்படியல்லவோ இருக்கவேணும்?'' என்றான் வேலப்பன். வள்ளியின் கன்னங்கள் வெட்கத்தால் குழிந்தன. ''சரிதான் போங்கள்; பரிகாசம் போதும்'' என்றாள்.

''இல்லை, வள்ளி! இந்த மாதிரிப் பரிகாச மெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்குச் செய்யப் போகிறோம்'' என்றான் வேலப்பன்.

''ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறீர்கள்! என்ன சமாசாரம் என்று தான் சொல்லுங்களேன்?'' என்றாள் வள்ளி.

''பெரிய யுத்தம் வரப்போகிறதே, தெரியாதா உனக்கு?''

''ஆமாம், யுத்தம் யுத்தம் என்று தான் பேச்சு நடக்கிறது. ஆனால் என்னத்துக்காக யுத்தம் என்றுதான் தெரியவில்லை.''

''நாலைந்து வருஷமாய் நமது மகாராஜா, காஞ்சி நரசிம்மவர்ம சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டவில்லை. வடக்கே படையெடுத்துப் போயிருந்த சக்கரவர்த்தி திரும்பி வந்து விட்டாராம்; நமது மகாராஜா நாலு வருஷமாய்க் கப்பம் கட்டாததற்கு முகாந்திரம் கேட்பதற்காகத் தூதர்களை அனுப்பி யிருக்கிறாராம். அவர்கள் இன்றைக்கு வந்து சேர்வார்களாம்'' என்றான் வேலப்பன்.

''இதற்காக யுத்தம் ஏன் வரவேண்டும்? நாலு வருஷத்துக் கப்பத்தையும் சேர்த்துக் கொடுத்து விட்டால் போகிறது'' என்றாள் வள்ளி.

''அதுதான் நம்முடைய மகாராஜாவுக்கு இஷ்டம் இல்லை. முன் வைத்த காலைப் பின் வைக்க முடியாது என்கிறார்.''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டேயிருக்கும்போது நடு ஆற்றில் படகு வருவது தெரிந்தது. வேலப்பனும் இன்னொருவனும் உடனே திரும்பிப் போய் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் படகு துறையை அடைந்தது. இது பொன்னன் போகும்போது தள்ளிக்கொண்டு போன சாதாரணப் படகல்ல; அழகிய வேலைப்பாடுகளுடன் ஒரு பக்கம் விமானம் அமைத்துச் செய்திருந்த ராஜ படகு. படகின் விமானத்தில் மூன்று பேர் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் ராஜ குடும்பத்தினர் என்று தெரிந்து கொள்ளலாம். பார்த்திப சோழ மகாராஜாவும், அருள்மொழி மகாராணியும், இளவரசர் விக்கிரமனும்தான் அவர்கள்.

அரையில் நீண்ட உடைவாளும், கையில் நெடிய வேலாயுதமும் தரித்த ஆஜானுபாகுக்களான இரண்டு மெய்க்காவலர்கள் படகின் இரு புறத்திலும் நின்று கொண்டிருந்தார்கள். பொன்னனும் இன்னொருவனும் படகு தள்ளிக் கொண்டு வந்தார்கள்.

படகு கரை சேர்ந்ததும், மெய்க்காவலர்கள் இருவரும் முதலில் இறங்கி, ''ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட, ராஜ கம்பீர, சோழ மண்டலாதிபதி பார்த்திப மகாராஜா, பராக்!'' என்று கூவினார்கள். கரையில் நின்ற வீரர்கள் அவ்வளவு பேரும் கும்பிட்ட கைகளுடன், ''மகாராஜா வெல்க!'' என்று எதிரொலி செய்தார்கள்.

படகை விட்டு இறங்கியதும் மகாராஜா பொன்னனுடைய குடிசைப் பக்கம் நோக்கினார். குடிசை வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்த வள்ளி

யின் பேரில் அவருடைய பார்வை விழுந்தது. உடனே கையினால் சமிக்ஞை செய்து அழைத்தார். வள்ளி விரைவாக ஓடிவந்து தண்டனிட்டாள். மகாராஜா எழுந்திருக்கச் சொன்னவுடன் எழுந்து பொன்னனுக்குப் பின்னால் அடக்க ஒடுக்கத்துடன் நின்றாள். ''வள்ளி! உன்னைப் பொன்னன் நன்றாகப் பார்த்துக் கொள்கிறானா?'' என்று மகாராஜா கேட்டார். வள்ளி தலையைக் குனிந்து கொண்டு புன்னகை செய்தாள். பதில் சொல்ல அவளுக்கு நா எழவில்லை. அப்போது மகாராணி, ''அவளை அப்படி நீங்கள் கேட்டிருக்கக் கூடாது; 'பொன்னனை நீ நன்றாகப் பார்த்துக் கொள்கிறாயா?' என்று கேட்டால், பதில் சொல்லுவாள்'' என்றாள்.

மகாராஜா சிரித்து விட்டு, ''வள்ளி! மகாராணி சொன்னது காதில் விழுந்ததா? பொன்னனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். அந்தண்டை இந்தண்டை போக விடாதே. உன்னை வெள்ளத்திலிருந்து கரை சேர்த்தது போல் இன்னும் யாரையாவது கொண்டு வந்து கரை சேர்த்து வைக்கப் போகிறான்!'' என்றார்.

வள்ளியை வெட்கம் ஒரு பக்கமும் சந்தோஷம் ஒரு பக்கமும் பிடுங்கித் தின்றன. தேகம் நூறு கோணலாக வளைந்தது.

ஆனால், பொன்னனோ இந்த ஹாஸ்யப் பேச்சைக் கவனித்ததாகவே தெரியவில்லை. அவன் இரு கரங்களையும் கூப்பி, ''மகாராஜா! ஒரு வரம் கொடுக்க வேணும்! யுத்தத்துக்கு மகாராஜா போகும்போது அடிமையையும் அழைத்துப் போக வேணும்'' என்றான்.

மகாராஜா சற்று நிதானித்தார். பிறகு சொன்னார்: ''பொன்னா! உன்னுடைய மனசு எனக்குத் தெரியும். ஆனாலும் நீ கேட்ட வரம் கொடுக்க முடியாது. நீ இங்கேதான் இருக்க வேண்டும். போர்க்களத்திலிருந்து நான் திரும்பிவராவிட்டால், இளவரசருக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். தெரிகிறதா?'' என்றார். இதைக் கேட்டதும் பொன்னன் வள்ளி இருவர் கண்களிலும் நீர் ததும்பிற்று. மகாராணி அருள்மொழித்தேவி ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள். அவளுடைய உள்ளத்தில் என்னென்ன சிந்தனைகள் கொந்தளித்து எழுந்தனவோ, யார் கண்டது!

* * *

மகாராஜாவும் பரிவாரங்களும் வெகு தூரம் போன பிறகுதான் வள்ளி பழைய வள்ளியானாள். அப்போது பொன்னனைப் பார்த்து, ''பார்த்தாயா! மகாராஜா என்ன சொன்னார்! என்னைக் கேட்காமல் அந்தண்டை இந்தண்டை போகக்கூடாது, தெரியுமா?'' என்றாள்.

''அப்படியானால் இப்போதே கேட்டு விடுகிறேன், வள்ளி! இன்று மத்தியானம் நான் உறையூர் போக வேண்டும்'' என்றான் பொன்னன்.


''உறையூரில் என்ன?'' என்று வள்ளி கேட்டாள்.

''இன்றைக்குப் பெரிய விசேஷமெல்லாம் நடக்கப் போகிறது. காஞ்சியிலிருந்து கப்பம் கேட்பதற்காகத் தூதர்கள் வரப் போகிறார்களாம். மகாராஜா 'முடியாது' என்று சொல்லப் போகிறாராம். நான் கட்டாயம் போக வேணும்'' என்றான் பொன்னன்.

அப்போது வள்ளி இரு கரங்களையும் குவித்துக் கொண்டு, குரலைப் பொன்னன் குரல் போல் மாற்றிக் கொண்டு, ''மகாராஜா! எனக்கு ஒரு வரம் கொடுக்க வேணும்; மகாராஜா யுத்தத்துக்குப் போனால் அடிமையையும் அழைத்துப் போக வேணும்'' என்றாள்.

''சே, போ! இப்படி நீ பரிகாசம் செய்வதாயிருந்தால் நான் போகவில்லை!'' என்றான் பொன்னன்.

இந்த உறுதியுடனேயே பொன்னன் சாவகாசமாகக் காவேரியாற்றில் இறங்கி நீந்திக் கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தான். ஆனால், கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ''டக் டக், டக் டக்'' என்று குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டதும் அவனுக்குச் சொல்ல முடியாத பரபரப்பு உண்டாயிற்று. கரை



யேறி ஓடிவந்து பார்த்தான். வள்ளியும் குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் முதலில் ஒரு குதிரையும், பின்னால் நாலு குதிரைகளும் கிழக்குத் திசையிலிருந்து அதிவேகமாய் வந்தன. முதல் குதிரையின் மேல் இருந்தவன், கையில் சிங்க உருவம் வரைந்த கொடி பிடித்துக் கொண்டிருந்தான். குதிரைகள் உறையூரை நோக்கிப் பறந்தன.

''சிங்கக் கொடி போட்டுக் கொண்டு போகிறார்களே, இவர்கள் யார்?'' என்று வள்ளி கேட்டாள்.

மெய்ம்மறந்து நின்ற பொன்னன், திடுக்கிட்டவனாய், ''வள்ளி! இவர்கள் தான் பல்லவ தூதர்கள். நான் எப்படியும் இன்று உறையூர் போக வேணும். நீயும் வேணுமானால் வா! உன் பாட்டனையும் பார்த்தது போல் இருக்கும்'' என்றான்.

(தொடரும்)



கணங்களும் யுகங்களும்

அழகாபுரி அழகப்பன்



வழக்கம் போல் ஒன்பது மணிக்குச் சாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப் போன கணவர் பத்தரை மணிக்கெல்லாம் அப்படி அலங்கோலமாக வீடு திரும்புவார் என்று தர்மு எதிர்பார்க்கவில்லை. வெய்யில் தாளாமல் வழுக்கைத் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு, நெஞ்சை வலிக்கிறதென்று தள்ளாடி வந்து நின்றார்.

தர்மு பதறிப் போனாள். ஐம்பதைத் தாண்டியவர் என்றாலும், கிழவர் ஒருநாள் கூடப் படுக்கையில் விழுந்தவரல்ல. ''டாக்டரைக் கூட்டிவரட்டுமா?'' என்று கேட்டாள்.

''வேண்டாம். வெறும் மார் வலிதான். பயப்படாதே!'' என்று சாடை காட்டிய கிழவர் குடிக்கத் தண்ணீர் கேட்டார்.

ஸ்ப்ரிங் கட்டிலில் அவரை வசதியாகப் படுக்க வைத்துவிட்டு, மின் விசிறியையும் போட்டுவிட்டு, வெந்நீர் கொண்டு வந்து கொடுத்தாள் தர்மு.

கிழவர் விழிகளை மூடிக் கொண்டு மௌனமாக இருந்தார். அவர் தூங்கவில்லை; எதையோ சிந்தித்



துக் கொண்டிருக்கிறார் என்பது அவரது மாறும் முக பாவங்களிலிருந்து தெரிந்தது. ஊமைப் படம் போல் உணர்ச்சிகளை வாரிக் கொட்டிக் கொண்டிருந்தது, அவரது சிவந்த முகம்.

அவர் பேசுவதற்காக, தர்மு காத்திருந்தாள்.

பத்து நிமிஷங்கள் கழித்துக் கண் திறந்தார் கிழவர். பார்வையை மனைவியின் பக்கம் திருப்பாமல் வேறுபுறம் பார்த்துக் கொண்டு சொன்னார்: ''காரைக்குடிப் பையன் ஒருத்தன் மிலிட்டரியிலே இருக்கான். டில்லியிலே இருக்கானாம். நம்ம ரமாவைப் பார்த்தானாம். ஒரு பெரிய டாக்டரோடு நெருங்கிப் பழகுறா

ளாம். சீக்கிரம் கல்யாணம் நடந்துடும்னு சொன்னான்.''

''அப்படியா! ரொம்ப சந்தோஷம்! எப்படியாவது அவனுக்கும் விடிவு காலம் வந்தால் சரிதான். அவனுந்தான் எத்தனை காலம் தன்னையே எரிச்சுண்டிருப்பா?'' என்றாள் தர்மு.

கிழவர் அப்புறம் பேசவில்லை; கண்களை மூடிக் கொண்டு நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்.

மாலை ஐந்து மணிக்கு மறுபடியும் மார் வலிக்கிறது என்றார். மார்பின் இடது பக்கம் கையை அழுத்திக் கொண்டு துடித்தார்.

தர்மு பரபரத்தாள். பாலுவை அனுப்பிப் பக்கத்துத் தெரு டாக்டரை அழைத்து வரச் சொன்னாள்.

'' அப்பாவுக்கு உடல் சரியில்லை; உடனே புறப்பட்டு வாங்கோன்னு அண்ணாவுக்கும் அக்காவுக்கும் தந்தி கொடுத்துட்டு வா '' என்று பாலுவை அனுப்பிய தர்மு அவன் பின்னாலேயே வெளியே வந்து, மெதுவான குரலில், ''அப்படியே ரமாவுக்கும் தந்தி கொடுத்துடு'' என்றாள்.

பாலு வியப்போடு, ''இதைச் சொல்லணுமா, என்ன? அவங்க வராமலா !'' என்று கேட்டான்.



● அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1976 ●

டாக்டர் வந்து சோதனை செய்துவிட்டு, '' இட்ஸ் நத்திங் பட் வீக்னஸ். ஜஸ்ட் டேக் ரெஸ்ட்; இட்ல் பீ ஓ. கே!'' என்று மாத்திரைகளும் டானிக்கும் எழுதிக் கொடுத்து விட்டுப் போனார்.

ஆனால் கிழவருக்கென்னவோ பயம்! நலிந்த குரலில், ''ராஜுவுக்கும் இந்திராவுக்கும் தந்தி கொடுத்து விடு'' என்றார்.

''சரிங்க'' என்ற தர்மு பிறகு, '' ரமாவுக்கு ?'' என்று கேட்டாள்.

அயர்வுடன் விழிகளை மூடிக் கொண்ட கிழவர் 'வேண்டாம்' என்று கை யசைத்தார்.



தர்மு பெருமூச்சு விட்டாள். 'ரமா வராமலா?' ஏன் அவளுக்குச் செய்தி அனுப்ப வேண்டாமென்றார் அவர்? நினைவு பிசகி விட்டதோ ?

ரமா ! யார் அவள் ?

சரியாகப் பத்து வருஷங்களுக்கு முன்பு....

காரைக்குடி செக்காலையில் மூன்றாம் வீதி. இரண்டு பக்கமும் நிறைய வீடுகள். மாலை நேரத்தில் குழந்தைகளின் கும்மாளம்.

முத்தையா ஆபீசிலிருந்து வந்து வீட்டைத் திறந்தார். தரை முழுவதும் தூசி. மனைவியும் குழந்தைகளும் ஊருக்குப் போய் ஒரு வாரமாகிறது. வர இன்னும் இரண்டு நாட்களாகும்.

சே, பெண்ணில்லாத வீடு பெரிய சுடுகாடு!

உடை மாற்றிக் கொண்டு உட்கார்ந்தவர் ஏதோ நாவல் படிக்கத் தொடங்கினார்.

"மாமா, ரெஸ்டா இருக்கீங்களா?" என்று வெளியே குரல் கேட்டது.

பக்கத்து வீட்டுப் பெண் ரமா கையில் புத்தகங்களுடன் நின்று கொண்டிருந்தாள். எஸ். எஸ். எல். ஸி. வகுப்பு.

"ஆமாம்மா. என்ன செய்யணும்?"

"நாளைக்குக் கணக்கு டெஸ்ட், மாமா! ட்ரபீஸியம் புரியவேயில்லை!"

"அதற்கென்ன, சொல்லித் தந்தால் போச்சு" என்றார் முத்தையா.

பொழுது போகாத நேரங்களில் ரமாவுக்கும் தமது மகள் இந்திராவுக்கும் பாடம் சொல்லித் தருவது அவருக்கு வழக்கம்தான். இந்திரா ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள்.

ரமாவின் அப்பா ராம. சுப. பங்களாவில் கணக்கு எழுதிக் கொண்டிருந்தார். கஷ்ட ஜீவனம். மூன்று பெண்கள். மூத்தவள் ரமா மட்டும் எப்படியோ படித்துக் கொண்டிருந்தாள். மற்றவை இரண்டும் பாதியிலேயே பள்ளிக்கு 'டாடா' சொல்லிவிட்டன.

முத்தையா ஆசிரியரல்ல; ஆனாலும் டீச்சிங் அவருக்குக் கைவந்த கலை. ட்ரபீஸியத்தின் படம் வரைந்து, வெட்டு முகப் பரப்பு கண்டு, கன அளவு கணக்கிடும் முறையைக் காரணங்களோடு விளக்கினார். பிறகு ஒரு கணக்கைக் கொடுத்துப் போடச் சொன்னார்.

ரமா சிவப்பு அல்ல; மாநிறந்தான். பளீரெனச் சுடர்விடும் அழகியல்ல; சராசரிதான். பட்டும் வைரமுமாகப் பூட்டிக் கொள்ளவில்லை; சீட்டிப் பாவாடையும் பித்தளைத் தோடும்தான். ஆனால், இயற்கை அவள் பருவத்துக்குரிய பரிசைக் குறைவில்லாமல் கொடுத்திருந்தது.

கீழுதட்டைக் கடித்துக் கொண்டு, புருவங்களை இடுக்கிக் கொண்டு அவள் புரியாமல் தவித்ததைக் காண அவருக்கு வேடிக்கையாக இருந்தது. அவள் எதிர்பாராமல் படாரென்று அவள் தொடையில் தட்டிப் பயமுறுத்தினார். திடுக்கிட்டு நிமிர்ந்தவள் மறு விநாடி சிரித்தாள். மக்னீஷிய நாடாவைக் கொளுத்தியது போல் பல் வரிசை ஒளியடித்தது.

அவளது ஸ்பரிசம் பட்டதும் அவருக்கு என்னவோ அசடு தட்டியது. தமது கைபட்ட இடத்தின் தசைத் திரட்சியும் இளமைத் துடிப்பும் அவரை என்னவோ செய்தன.

உஸ்ஸென்று காற்று. படாரென்று சன்னல் கதவு அடித்துக் கொண்டது. படபடவென்று தூற்றல். பளிச்சென்று ஒரு மின்னல். விளக்கு அணைந்து விட்டது.

தனிமை, அது தந்த உத்வேகம்; அவள் இளமை, அது தந்த வரவேற்பு; மனைவியைப் பிரிந்திருந்த தாபம், அது எழுப்பிய பசிக் குரல்....

முத்தையா என்ற இரும்பு சூழ்நிலையின் ஒரு நிமிஷ வெக்காடு தாளாமல் இளகி விட்டது.

அன்றிரவு அவர் வெகுவாக வேதனைப்பட்டார். அவர் வயதென்ன, தகுதி என்ன, கேவலம் ஒரு பள்ளிச் சிறுமியிடம் அப்படி நடந்து கொண்டுவிட்டாரே! வாழ்க்கையில் அதுவரை அவர் தவறியதில்லை. மனைவியிடம் மாளாத பிரியம் கொண்டிருந்த அவர் மற்றப் பெண்களை நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஆனால், அவரையும் அறியாமல் அவருக்குள்ளே பதுங்கிக் கிடந்த மிருகம் பலவீனமான நேரம் பார்த்து வெளிப்பட்டுவிட்டது.

மறுநாள் காலையில் ஆபீஸ் போகும்போது ரமாவின் வீட்டுப் பக்கம் பார்த்தார். கூடத்து ஜன்னல் கம்பிகளைப் பற்றியவாறு அவள் அவரையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. வாசல் நிலை இடித்தது போல் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டு நடந்தார் அவர்.


மூன்றாம் நாள் தர்மு வந்து சேர்ந்தாள். வந்ததுமே கணவனிடம் ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் கண்டுபிடித்துவிட்டாள். வீட்டிலே எப்போதும் கலகலவென்று அரட்டையடித்துக் கொண்டிருப்பவர் எதுவுமே பேசாமல், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதென்றால் எந்த மனைவிக்குத்தான் தெரியாமல் போகும்?

அன்றிரவு அவள் வாய் திறந்து கேட்டதுமே அவர் மனம் திறந்து கதறி விட்டார். ஆனால், அவளால்தான் நம்ப முடியவில்லை. இத்தனை காலம் எந்தப் பெண்ணையும் நிமிர்ந்து பார்த்திராதவர் நாற்பதாவது வயதில், ஒரு பதினாறு வயதுப் பெண்ணிடம் தவறாக நடந்து கொள்ளுவதாவது! ஆனால் சொல்லிச் சொல்லி அழுகிறாரே, பொய்யாகவா இருக்கும்? அவளுக்குக் கோபம் பொங்கியது. ஆனால், ஒவ்வொருத்தரைப் போல் இதையெல்லாம் ஒரு தமாஷாகவோ அல்லது அட்வென்ச்சராகவோ மதித்து அலட்சியமாக இருந்து விடாமல், நடந்ததை மறைத்துவிடாமல், செய்தது பாவம் என்னும் குற்ற உணர்வோடு, மனைவியிடம் சொல்லிப் பரிகாரம் தேட வேண்டும் என்ற மன நிலையில் இருப்பதே பெரிய காரியமாயிற்றே!

அவள் அவரிடம் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

நாட்கள் ஓடின. ஆனால் ரமாவின் ஓட்டம் நின்றுவிட்டது. பள்ளிக்குப் போகும் போதெல்லாம் வாயாடிக் கொண்டு ஒரு பட்டாம்பூச்சி போல் செல்பவள் இப்போது குனிந்த தலை நிமிராமல் சென்றாள். அவளது துள்ளலும் துடிப்பும் அடியோடு மறைந்து விட்டன. ஒரே நாளில் திடீரென்று முதிர்ந்து விட்டவளாகத் தோன்றினாள். வெளியே தலை காட்டாமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள்.

அவளைப் பார்க்கும்போது தர்முவின் நெஞ்சைப் பிசைந்தது. தன் மகளின் வயதை யொத்த அந்த மலர்க்கொடி தாளமாட்டாத இடியைத் தாங்கிக் கொண்டு உள்ளுக்குள்ளேயே மறுகி நிற்பதைக் கண்டு மனம் கசிந்தாள். இத்தனை காலமும் அவளை ஒரு சிறுமியாக நினைத்தவள் இப்போது அவளைத் தனது உடன் பிறவாத் தங்கையாக மதிக்கத் தொடங்கினாள். கணவர் இல்லாத நேரங்களில் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து அன்பாகப் பேசினாள்; பட்சணம் செய்து கொடுத்தாள்; எதையாவது சாக்கு வைத்துத் துணிமணிகள் வாங்கிக் கொடுத்தாள்.



உடனடி சக்தி தருவது க்ளாக்ஸோஸ்-D !

உடலின் சக்தியிலே ஐந்திலொரு பங்கு மூளைக்குச் செலவாகிறது. எங்கிருந்து கிடைக்கிறது அத்தனை சக்தியும்? அதுதான் க்ளூகோஸ். செலவாகும் க்ளூகோஸ் சக்தியை மீட்டுப்பெற, க்ளாக்ஸோஸ்-D சாப்பிடுவீர், தேக அலுவல்களுக்கு உரிய தென்பு கிடைக்கும் உங்களுக்கு. குடிநீர், தேநீர், காப்பி, பழச்சாறு ஆகியவற்றிலேயோ, அப்படியே தனிப்படவோ அருந்த இனியது க்ளாக்ஸோஸ்-D.



க்ளாக்ஸோஸ்-D®
க்ளாக்ஸோ தயாரிப்பு

நிமிடங்களில்
தென்பூட்டுகிறது
உடம்பிலே

dCP/GL/32 a. Tam.



"நேர்த்தியாக மணக்கும்
லியூர் ஷாம்பூ
நேரமெல்லாம் மணக்கும்
அவர் நெஞ்சிலே"
என்கிறார் அனிதா ராபின்ஸ்—எக்ஸ்போர்ட் ஹவுஸ் நிர்வாகி,
நாலு வகையான புதிய லியூர் ஷாம்பூவிலே எதை எடுத்தாலும் அதற்குத் தனிமணம் உண்டு. சிகை எந்த வகையானாலும் சீராட்டும் அருமையிலே, ஆகா. உங்கள் துணைவர் மனம் உங்கள் கூந்தலிலே சரணம்—தலைக்கேறிய உன்னதப் புதுமணம்.
என் கேசத்திற்கு வசீகர-மூட்டுது லியூர். சுகந்தமான சுத்தமுடன் அதை சொகுசாக வைத்திருக்குது லியூர் ஷாம்பூ.
Lure
Creative Unit-A 2352 -Tam

(அட்டைப்பட விளக்கம்)


கண்ணாடி மாளிகை

பெங்களூரில் 240 ஏக்கரில் அமைந்துள்ள லால்பாக் ஆசியாவிலேயே சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஹைதர் அலி ஆரம்பித்து வைக்க, திப்பு அபிவிருத்தி செய்ய கிரேக் நூரான் என்ற ஆங்கில துரை பிற்காலத்தில் இதனைத் தாவர இயல் பூங்கா ஆக்கினார். அயல் நாடுகளில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் நூறு ஆண்டுகள் பணியாற்றி, உலகின் பல்வேறு சீதோஷ்ண நிலைகளில் காணக்கூடிய மரம் செடி கொடிகளைப் பயிராக்கினர்.

இங்குள்ள கண்ணாடி மாளிகைக்கு 87 வயதாகிறது! லண்டனில் உள்ள ஸ்படிக அரண்மனையின் அமைப்பில் உருவானது. 18,000 சதுர அடி உள்ள இந்தக் கூடத்தில்தான் முக்கியமான பொது நிகழ்ச்சிகள் நடைபெறும். விசேஷ தினங்களில் வண்ண விளக்குகள் அலங்கரிக்கும் போது ஏதோ மாயாஜாலபுரியாகத் தோன்றும்.

மேலட்டையில் கண்ணாடி மாளிகைக்கு முன்பாகக் கன்னியர் இருவரின் வண்ணப் படத்தை வழங்குபவர் ஆர். எஸ். கிருஷ்ணமூர்த்தி.

லால்பாக் பற்றிய விளக்கம்: எஸ். நாகராஜன்.



ஆனால், ரமா அநேகமாக ஊமையாக மாறி இருந்தாள். உணவிலோ, உடையிலோ அக்கறை காட்டாமல், எதையோ நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாள். அந்த வருஷம் நானூறு மார்க்குக்கு மேல் வாங்கியதைக் கேட்டும்கூட அவள் மகிழ்ச்சி அடையவில்லை.

ரமாவின் குடும்ப நிலை அவளைக் கல்லூரிக்கு அனுமதிக்கவில்லை. நாள் முழுதும் சமையல் அறையிலேயே அடைந்து கிடந்தாள்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் ரமாவின் தாய் முத்தையாவிடம் வந்தாள். "நம்ம ரமாவுக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கோம். அழகாயிருக்கான். ஒரு சைக்கிள் கடையிலே இருநூறு ரூபாய் சம்பளம். சொந்தக்காரப் பையன்தான். நம்மாலே முடிஞ்சதைப் போட்டுக் கட்டிக் குடுத்திடலாம். ரமாதான் சம்மதிக்கமாட்டேங்கிறா. நீங்க கொஞ்சம் எடுத்துச்சொன்னீங்கன்னா நல்லது. நீங்க அவளுக்குத் தகப்பன் மாதிரி!"

முத்தையாவுக்குச் சுருக்கென்றது. சமாளித்துக் கொண்டு, "ரமாவை வரச் சொல்லுங்க" என்றார்.

ரமா வர மறுத்துவிட்டாள்.

அவரே அவள் வீட்டுக்குப் புறப்பட்டார்.

ரமா கொல்லைக் கேணி அருகில் தனியாக நின்று கொண்டிருந்தாள்.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு முத்தையா தொடங்கினார். "ரமா, வந்து... என்னை மன்னிச்சுடு! ஏதோ நடந்தது நடந்துட்டுது! நான் பண்ணினது பாவம்தான். அதுக்காக நீ கல்யாணமே வேண்டாம்னு தனிமரமா நின்னு என்னைச் சித்திரவதை செய்யாதே! நடந்ததைக் கனவா நினைச்சு மறந்துட்டு, நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, குழந்தைகுட்டியோட சௌக்கியமா வாழணும்."

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள். அந்தப் பார்வையைத் தாள முடியாமல் அவர் தலை கவிழ்ந்தார்.

"நீங்க இதுவரை செய்ததுகூடப் பாவமில்லே, மாமா. இப்போ சொல்றீங்களே புத்திமதி, நடந்ததைக் கனவா நினைச்சு மறந்துட்டு, நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி, இதுதான் மகா பாவம்! என் பெண்மைக்கு நீங்க தந்த மதிப்பு இதுதானா? காரிலே அடிபட்டுக் காலை இழந்தவன்கூட விபத்தைக் கனவா நினைச்சு மறந்துட்டு நேரே நடக்க முடியாதே! அதைவிடக் குறைந்த நஷ்டமா எனக்கு ஏற்பட்டது?"

சவுக்கடிபட்டவராக முத்தையா பின்வாங்கினார். அவர் கண்களிலிருந்து நீர் வழிந்தது. "நான் பாவி! என் பாவத்துக்குப் பரிகாரமே இல்லே!" என்று புலம்பினார்.

"நான் உங்களை மட்டும் குற்றவாளியாக்க விரும்பல்லே. அத்துவானக் காட்டிலே, என் வாயிலே அடைச்சு, நீங்க பலாத்காரம் பண்ணல்லே. நாலு வீடுகளுக்கு நடுவிலேதான் தொட்டீங்க. விரும்பியிருந்தா நான் கூச்சல் போட்டிருக்கலாம்; திமிறி ஓடியிருக்கலாம். நான் செய்யல்லே. என்னையறியாம நானும் உங்களை விரும்பியிருக்கேன்னு தோணுது. எப்படியோ ரெண்டு பேரும் தவறு பண்ணிட்டோம். என் வாழ்க்கை சிக்கலாயிட்டுது. அதைச் செப்பனிட உங்களாலே முடியலேங்கிறதுக்காக நான் உங்களை நொந்துக்கலே. ஆனால், உங்களாலே மட்டும் தர முடிஞ்ச வாழ்க்கையை எவங்கிட்டேயோ வாங்கிக்கச் சொல்லி என்னை அவமானப் படுத்தாதீங்க!"

குருவிடம் உபதேசம் கேட்ட மாணவனைப் போல், பக்தியுடன் வீடு திரும்பினார் முத்தையா.

சற்று நேரத்தில் தர்மு சென்ற போதும் ரமா அங்கேதான் நின்றிருந்தாள். ஆதரவாக அவளுடைய தோள்களைத் தொட்டாள் தர்மு. "ஏன் ரமா, மாப்பிள்ளை பிடிக்கவில்லையா?"

ஒரு கணம் பேசாமல் இருந்த ரமா, "ஆமாம், அத்தை" என்றாள்.

"வேறு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லட்டுமா?"

"எனக்குக் கல்யாணமே பிடிக்கலே!"

"ஏன் அப்படி?"

"அது என் தலைவிதி!" என்று கேவினாள் ரமா.

தர்மு நிதானமாகப் பேசினாள். "உன் நிலைமை எனக்குப் புரிகிறது, ரமா. இனிமேல் நீ என்னை அத்தை என்று கூப்பிட வேண்டாம்; அக்கா என்றே கூப்பிடலாம்!"

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் ரமா. அவள் விழிகள் 'உங்களுக்கு எப்படித் தெரியும்?' என்று வினவின.

"அவர் ஒரு குழந்தை, ரமா. வயதான குழந்தை. திருடத் தெரியாத குழந்தை.

சுதர்மா

மைசூரிலிருந்து சென்ற ஆறு ஆண்டுகளாக ஒரு சமஸ்கிருத தினசரிப் பத்திரிகை பிரசுரமாகி வருகிறது. உலகிலேயே சமஸ்கிருத மொழி தினசரி இது ஒன்றுதான். இரண்டு பக்கங்கள்கொண்ட இதன்பெயர் 'சுதர்மா'. அந்தப்பத்திரிகை பெங்களூரை 'கல்யாண நகரி' என்றும் மைசூரை 'மஹிஷாகரபுரி' என்றும் குறிப்பிடுகிறது. -சண்டே ஸ்டாண்டர்ட் -பாபு

சூழ்நிலை காரணமாகச் செய்துவிட்ட இருட்டை மறைக்க மனமில்லாமல் மனைவியிடம் கூறி அழுத குழந்தை. உன் நலனுக்காக ஏங்கி அழும் குழந்தை.'' ரமாவால் பேச முடியவில்லை. தர்முவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.

'' சில தவறுகளைச் சீர் செய்ய முடியாது, ரமா. மறக்கத்தான் வேண்டும். அவரால் செய்யக்கூடியது ஏதுமில்லை. அவருக்கு நாலும் மூன்று குழந்தைகளும் இருக்கிறோம். அவர் எப்படி உன்னை மணந்து கொள்ள முடியும்? சட்டம் ஒரு பக்கம் இருக்கட்டும் ; சமுதாயம் என்ன சொல்லும் ? நாற்பது வயதுக்காரன், மனைவி இருக்கையில், மகள் வயதுக்காரியை 'மறு தாரமாகக் கட்டிக் கொண்டான் என்று கேலி பேசாதா ? அப்படி என்ன அவசியம் வந்தது என்று கேள்வி கேட்காதா ? அந்தக் கேள்வி நாளைக்கு இந்திராவின் கல்யாணத்தை எப்படிப் பாதிக்கும், தெரியுமா ?''

''தெரியும்.''

''அப்புறம் ஏன் தயங்குகிறாய்? இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக் கொள்.''

'' அது மட்டும் என்னால் முடியாது. என் மனச்சாட்சி ஒருநாளும் ஒப்பாது !''

ரமாவின் குரலில் தொனித்த உறுதியைக் கேட்டு, தர்மு ஒரு நிமிஷம் மௌனமாய் நின்றாள். பிறகு அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''ரமா! நான் வயதில் உன் தாயைப் போல. இருந்தும் உன்னிடம் யாசிக்கிறேன். நான் பிடித்திருப்பது உன் கைகளையல்ல; கால்களை என்று நினைத்துக் கொண்டு எனக்கு ஒரு வரம் கொடு. என் கணவர்தான் எனக்கு உலகம். அவரை என்னிடமிருந்து பிரிக்கமாட்டேன் என்று உறுதி கொடு !'' என்று கேட்கும்போதே கண்ணீர் வடித்தாள்.

அவ்வளவு பெரியவள் தன் கணவனுக்காக, சிறுமியான தன்னிடம் யாசிப்பது ரமாவுக்குப் பொறுக்கவில்லை. ''உங்கள் பெருந்தன்மைக்கு முன்னால் நான் ஒரு தூசு அக்கா ! உங்கள் வாழ்வைப் பறித்து நான் வாழ்வதை விடத் தற்கொலை செய்து கொள்வேன். என்னை வெறுக்காமல் உங்கள் தங்கையாக ஏற்றுக் கொண்ட பரிவே போதும் !'' என்று உறுதி சொன்னாள்.

ரமாவின் திருமணப் பேச்சு நின்றுவிட்டது. அவளுக்கு ஒரு வேலை தேடிக் கொடுக்க முத்தையா எவ்வளவோ முயன்றார். 'தேவை' விளம்பரங்களுக்கெல்லாம் விண்ணப்பம் அனுப்பச் சொன்னார். எதுவும் கிடைக்கவில்லை.

மறு வருஷம் பேப்பரில் ஒரு விளம்பரம் வந்தது. ஆயுதப் படை நர்ஸிங் பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்கு மாணவிகள் கேட்டிருந்தார்கள். மூன்றாண்டுப் படிப்பு. உணவு, உடை, ஹாஸ்டல் வசதி எல்லாம் தந்து, 'ஸ்டைபண்டும்' கொடுப்பார்களாம். படிப்பு முடிந்ததும் ராணுவத்தில் வேலை தருவார்களாம். மத்திய அரசுச் சம்பளம். ஆரம்பமே ஆயிரம் ரூபாய்க்குப் பக்கமாகப் போட்டிருந்தார்கள். ஆனால், ஒரு கஷ்டம், வேலை பம்பாய், கல்கத்தா, டில்லி என்று தொலைவில் தான் கிடைக்கும்.

அவரைவிட்டுத் தள்ளிச் சென்று, புதிய மனிதர்களோடு புதிய சூழ்நிலையில் பழகினாலாவது அவள் மனம் மாறாதா ? வாழ்க்கையில் அவளுக்கு ஒரு பிடிப்பு ஏற்படாதா?

முத்தையா தர்முவை அனுப்பி ரமாவின் விருப்பத்தைக் கேட்டார்.

அவர் பார்த்துச் செய்யும் எந்த முடிவும் தனக்குச் சம்மதம் என்றாள் ரமா.

உடனே அப்ளிகேஷன் போடப்பட்டது.

ரமா பம்பாயில் நர்ஸிங் பயிற்சியில் சேர்ந்தாள். போகும்போது, தர்முவிடம் கேட்டு, முத்தையாவின் பெரிய புகைப்படம் ஒன்றை வாங்கிக் கொண்டு போனாள். வருஷத்துக்கொரு முறை விடுமுறையில் வந்தாள். அப்போதும் முத்தையாவோடு பேசியதில்லை.

அவள் படிப்பை முடித்து வேலையில் சேர்ந்த போது, முத்தையாவின் குடும்பம் மாறு மதுரைக்கு மாறியது.

இரண்டாண்டு கழித்து ரமா இரண்டு மாத விடுமுறையில் வந்தாள். வந்தவள் நேராகக் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''உங்கள் தங்கை உங்களிடம் ஒரு பிச்சை கேட்பேன். தட்டாமல் தருவீர்களா, அக்கா ?'' என்று கேட்டாள்.

''கேளம்மா.''


''இனிமேல் எனக்குப் பிறந்த வீடும் இது தான்; புகுந்த வீடும் இதுதான். வருஷத்தில் இரண்டு மாதங்கள் இங்கே வந்து அவர் முகத்தைப் பார்த்துவிட்டுப் போக அனுமதி வேண்டும் !''

'' உனக்குரிய நியாயமான இடத்தை மறுத்தவள் நான். இதையும் மறுக்கமாட்டேன்!'' என்றாள் தர்மு.

ரமாவின் பெட்டி பெரிதாயிருந்தது. தர்முவுக்கு அசல் பனாரஸ் பட்டுகள், இந்திராவுக்கு ஜப்பான் நைலக்ஸ்கள், ராஜுவுக்குப் பாண்ட்ஸ் துணிகள், பாலுவுக்கு ரெடிமேட் உடைகள் என்று அள்ளிக் குவித்துக் கொண்டு வந்திருந்தாள்.

'' ஏம்மா, இவ்வளவு செலவு செய்திருக்கிறாய்?'' என்று தர்மு கோபித்துக் கொண்டாள்.

''எல்லாம் நீங்கள் போட்ட பிச்சைதானே அக்கா ? அவ்வளவு பணத்தையும் நான் ஒருத்தி என்னதான் செய்வேன் ? எனக்கு இரண்டு வேளை சாப்பாடுதான். மிஞ்சி மிஞ்சிப் போனால் இருநூறு ரூபாயாகும். அப்பாவுக்கு முந்நூறு அனுப்புவேன். மீதி சும்மா தானே கிடக்கிறது ? வயசுக் காலத்திலே குழந்தைகள் டீக்காக டிரஸ் பண்ணிக் கொள்ளட்டும் !'' என்ற ரமா தான் மட்டும் தூய வெண்ணிற வாயில் புடவையும் வெள்ளைச் சோளியும்தான் அணிந்திருந்தாள்.


பின்னி கூட
என்றும்
சில பொருட்கள்
உள்ளன!
நல்ல வேளை,
சில பொருட்கள் என்றும் மாறுவதே இல்லை!
இந்த நாட்களில் இயல்பான நிலைகளின் தோற்றத்
தையும் பின்னியின் தரம் என்றும்போல் நம்பிக்கையூட்டு
வதையும் காணும்போது களிப்படைகிறோம்.
பின்னி உயர்ந்த நாகரீகத்தையும் நீடித்த
உழைப்பையும் எப்படி இணைத்துத் தருகிறது
என்பதைப் பாருங்கள். எண்ண முடியா
வண்ணங்கள்! அள்ள முடியா கோலங்கள்!
பின்னி பாலியெஸ்டர் இழை கலந்த
தரமான ஆடைகளை அணிந்து
களிப்படைவீர்.
நாகரீகம், அத்துடன் நீடித்தும்
உழைப்பவை — பின்னி மட்டுமே
நயமுடன் இணைத்துத்தர முடியும்!
பின்னி
பாலியெஸ்டர் இழைகலந்த துணிகள்
Interpub/BB/55/75 Tam

ஆசாரியை வரச் சொல்லி, நல்ல தங்கமாக வாங்கிக் கொடுத்து, தர்முவுக்கு ஆறு பவுனில் இரட்டை வடமும், இந்திராவுக்கு நாலு பவுனில் நெக்லெகம் செய்யச் சொன்னாள். அவள் கழுத்தில் ஒரே ஒரு சங்கிலி நூல் மாதிரி தொங்கிக் கொண்டிருந்தது.

''எல்லோருக்கும் ஏதாவது வாங்கி வந்திருக்கிறாள். எனக்கு மட்டும் ஒன்றும் தரவில்லை'' என்று மனைவியிடம் முணுமுணுத்தார், முத்தையா.

ரமா கேட்டுக் கொண்டே நின்றாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ''அவருக்குத்தான் என்னையே கொடுத்தேனே! நினைவில்லையா என்று கேளுங்கள், அக்கா?''

காரைக்குடியிலிருந்த தாய் வீட்டுக்குப் போய், பெயருக்கு இரண்டு நாட்கள் தங்கி விட்டு உடனே திரும்பிவிட்டாள். முத்தையாவுக்கு ஒரு ஸ்பிரிங் கட்டில் வரவழைத்தாள். படுக்கை அறையிலும் கூடத்திலும் ஸீலிங் விசிறி பொருத்தினாள். இரண்டு மாதங்கள் எங்கும் போகாமல் வீட்டிலேயே அடைந்து கிடந்தாள். ஆனால், முத்தையாவோடு பேசக் கூட இல்லை. கடைசியில் ரயிலில் போனால் முன்னதாகப் புறப்பட வேண்டுமே என்று, மதுரையிலிருந்து விமான டிக்கட் வாங்கி வந்தாள்.

''ஏன் ரமா, வீண் செலவு செய்கிறாய்? ரயிலில் போனால் எவ்வளவு பணம் மிச்சம்?'' என்று கேட்டாள் தர்மு.

''என்னைப் பொறுத்தமட்டில் மிக உயர்ந்த பொருள் இங்கே இருக்க எனக்குக் கிடைக்கும் நேரம்தான்! அதைப் பணத்தால் வாங்க முடியுமானால் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்வேன்!'' என்றாள் ரமா.

புறப்படும் போது, ''அவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள், அக்கா. எப்படி இருப்பார் முன்பு! நாலே வருஷங்களில் நரை தோன்றிவிட்டது! மெலிந்துவிட்டார்!'' என்றாள்.

''எல்லாம் உன் கவலைதான் ரமா. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைந்துவிட்டால் அவர் தெம்பாயிருப்பார்.''

''அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் ஒரு நல்ல வாழ்க்கை எனக்குக் கிடைக்காது! ஆண்டவன் அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கட்டும்!'' என்று வாழ்த்திவிட்டுப் போனாள் ரமா.

இந்திராவுக்கு வரன் குதிர்ந்தது. ரமா விடுமுறையில் வரும் சமயமாகப் பார்த்து முகூர்த்தம் குறித்தார்கள். ரமா ரொக்கமாகப் பத்தாயிரம் ரூபாயைத் தர்முவின் கையில் கொடுத்துத் தேவையானவற்றை வாங்கச் சொன்னாள்.

அடுத்து ராஜு இஞ்ஜினீயரிங்கில் சேர்ந்தான். அவனுக்கு ரமா மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தாள்.

ஏழெட்டு மாதங்களுக்கு முன்னர் ரமா வந்திருந்தபோது முத்தையா மிகவும் தளர்ந்து போயிருந்தார். தலையெல்லாம் வழுக்கை படர்ந்திருந்தது.

ரத்தக் கண்ணீர் வடித்தாள் ரமா. ''என்னக்கா, இது! அவரை இப்படி இளைக்க விட்டுவிட்டீர்களே!'' என்று பதறினாள்.

''நீ இப்படி உன்னையே விறகாய் எரித்துக் கொண்டு வாழ்வதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை, ரமா. ஒரு நொடியில் உயிரை மாய்த்துக் கொள்வதுகூடப் பெரிய விஷயம் இல்லை; இப்படி நின்று நிதானமாய் வெந்து மடிவது கொடுமை! வாழ்க்கையில் ஓர் இன்பமும் அறியாமல் ஏன் இப்படி வதைத்துக் கொள்கிறாய்?'' என்று தர்மு புலம்பினாள். ''நான் சொல்வதைக் கேள், ரமா! உன்னிடம் நான் வாங்கிக் கொண்ட சத்தியத்திலிருந்து உன்னை விடுவிக்கிறேன். இனியும் இந்தச் சமூகத்துக்குப் பயப்பட நான் தயாரில்லை. நாளைக்கே அவருக்கும் உனக்கும் குன்றக்குடியில் திருமணத்தை நடத்தி வைக்கிறேன்!''

''வேண்டாம், அக்கா! நான் கற்பனையில் வாழ்ந்தே பழகி விட்டேன். கற்பனை வாழ்க்கையில் கோபம், வெறுப்பு, அலுப்பு எதுவும் இல்லை. என்றென்றும் குறையாத ஆனந்தம்தான் உண்டு. அந்த ஆனந்தத்தைக் கலைத்து விடாதீர்கள்!''

'' நான் உனக்காகக்கூடச் சொல்லவில்லை, ரமா. அவருக்காகத்தான் சொல்கிறேன். உன்னைத் தொட்டது முதல் அவர் அவராக இல்லை. அவரது உல்லாசம் பழங் கதையாய் ஆகிவிட்டது. என்னைப் பிரிந்து ஒரு வாரம் கூட இருக்கமாட்டாதவர் நெடுங்காலமாகச் சந்நியாசியாக வாழ்கிறார்.''

முத்தையா இருமிவிட்டுச் சொன்னார்: ''சராசரிப் பெண் என்று நினைத்துத் தொட்டேன். அவள் தேவதையாக அமைந்துவிட்டாள். திருட்டுத்தனமாக அடைந்த இன்



''என்ன துணிச்சல் இருந்தா, எனக்கு இதுமாதிரி காதல் கடிதம் எழுதுவீங்க ?''
''பிடிக்கலேன்னு வேறே மாதிரி எழுதித் தரேனே!'' —முத்து

பத்தை மறைத்துவிட்டுப் புது வாழ்க்கை தொடங்குவாள் என்று நினைத்தேன். அவள் என் பாவத்துக்குப் பரிகாரம் இல்லாமல் செய்துவிட்டுத் தனி மரமாக நிற்கிறாள். ஒரு வருஷமா, இரண்டு வருஷமா, ஒன்பதாண்டு இளமை ஓடிவிட்டதே !''

''காலம் மனத்தோடு இணைந்த ஓர் அளவு, மாமா. கணங்களை யுகங்களாகக் காட்டவும், யுகங்களைக் கணங்களாகக் காட்டவும் அதனால் முடியும். யுகத்துக்கு வாழ்ந்துவிட்டு, அதைக் கணங்களாக நினைத்து இன்னும் பேராசைப் படுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால், எனக்குக் கணங்களை யுகங்களாக்கும் மனம் இருக்கிறது. அந்த இனிய கணங்களை வாழ்நாள் முழுதும் நினைத்துச் சுவைத்துக் கொண்டிருப்பேன் !'' என்றாள் ரமா.

'' உன்னைவிட அதிகம் வாழ்ந்தவன் நான். வாழ்க்கையை உன்னைக் காட்டிலும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். வாழ்க்கையை வெறும் மனத்தால் மட்டும் வாழ்ந்துவிட முடியாது. உடலுக்கு, அதன் தேவைகளுக்கு வாழ்க்கையில் நிறையப் பங்கு உண்டு. என் மனைவியிடம் எனக்கு நிறையப் பிரியம் இருக்கிறது. இருந்தும் அவள் என்னைப் பிரிந்திருந்தபோது, என்னால் மனத்தால் மட்டும் வாழ்ந்துவிட முடியவில்லை; உடல் தேவைப்பட்டது; உடலுக்கு நீ தேவைப்பட்டாய். அதனால்தானே இத்தனை தொல்லையும் !''

''உங்களை வைத்தே உலகத்தை அளக்கிறீர்கள் ! அசல் தங்கம் உறுதியில்லாதது ; வெறும் செம்பு விலை மதிப்பில்லாதது. தனித்தனியாக இரண்டுமே நகை செய்ய உதவாது. ஆனால் தங்கத்தோடு கொஞ்சம் செம்பைக் கலந்து கொண்டால் அழகான, உறுதியான நகைகள் செய்யலாம். அனுபவமற்ற கற்பனை அர்த்தம் இல்லாதது ; கற்பனையற்ற வெற்று அனுபவம் ருசிக்க இயலாதது. என் கற்பனையோடு கொஞ்சம் அனுபவமும் கலந்திருக்கிறது. நான் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் மானசீகமாக உங்களோடு நடத்தும் வாழ்க்கை நீங்களும் அக்காவும் நடத்தும் நிஜ வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல!'' என்று பேச்சை முடித்துக் கொண்டு எழுந்து விட்டாள்.

இந்திராவுக்கும் ரமாவுக்கும் இரண்டு வயது தான் வித்தியாசம். ரமா இந்திராவின் நெருங்கிய தோழி. திடீரென்று இந்திரா ரமாவை வெறுக்கத் தொடங்கினாள். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஐந்தாண்டு காலம் தர்முவை அத்தை என்று அழைத்துக் கொண்டிருந்த ரமா திடீரென்று அக்கா முறையிட்டுக் கூப்பிடத் தொடங்கியதற்கும், அவள் திருமணமே வேண்டாம் என்று வாழ்வதற்கும், வருஷா வருஷம் விமானத்தில் பறந்து வருவதற்கும், அவளுடைய பெட்டியில் எதிர்பாராத விதமாகத் தான் காண நேர்ந்த தந்தையின் புகைப்படத்துக்கும் முடிச்சுப் போட்டுப் பார்த்தாள். 'இந்த வயதிலும் இவ்வளவு சபலத்தோடு அப்பா, அவருக்காகவே டெல்லியிலிருந்து பறந்து வரும் ஓர் இளம் பெண், இவர்கள் கொட்டத்தை வேறு வழியில்லாமல் சகித்துக் கொண்டு குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றும் அம்மா' என்று தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டாள்.

இரண்டு மாதங்களுக்குமுன் கணவனோடு தாய் வீட்டுக்கு வந்திருந்த இந்திரா மௌனமாகப் பொருமிக் கொண்டிருக்கும் தாய்க்கு ரகசியமாக ஆறுதல் சொல்லும் நினைப்பில், ''இன்னும் எத்தனை வருஷங்களுக்குத்தான் அந்த ரமா உன் பாவத்தைக் கொட்டிக் கொள்வாளாம் ? குதிரைக் குட்டி மாதிரி கொழுத்துத் திரிகிறாள்!'' என்று கேட்டு விட்டாள்.

மறு நிமிஷம் பளீரென்று அவள் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. ''யாரைப் பற்றி அப்படிப் பேசினாய், நாயே ! அவள் ஒரு தெய்வப் பிறவி ! உணர்ச்சிகளை வென்ற ஞானி ! தீயிட்டவனுக்கும் ஒளி தரும் தீபம் அவள். அவளைப் புரிந்துகொள்ள உனக்கு அறிவு போதாது. அவளை 'சித்தி' என்று வாயாரக் கூப்பிட முடியாமல் போனது உன் துர்ப்பாக்கியம் !''என்று தர்மு பொங்கினாள்.

கோபமாக இந்திரா வெளியே வந்தபோது மாப்பிள்ளை நின்று கொண்டிருந்தார். அவரை அழைத்துக் கொண்டு அப்போதே ஊருக்குக் கிளம்பி விட்டாள்.

அந்த ரமாவுக்கா தந்தி கொடுக்க வேண்டாம் என்று சொன்னார் கிழவர்? உண்மையில் அவருக்கு நினைவுதான் தவறிவிட்டதோ ?

அதிகாலையில் ராஜு, இந்திரா, மாப்பிள்ளை எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். கிழவர் மிகவும் சோர்ந்து போயிருந்தார். அடிக்கடி மார்பு வலிப்பதாகச் சொன்னார்.

''ரமாவுக்குமா தந்தி கொடுத்தாய் ?'' என்று கேட்டாள் இந்திரா.

'ஆ'மென்று தலையாட்டினாள் தர்மு.

''அப்புறம் என்ன, ஹெலிகாப்டரிலாவது வந்து இறங்கி விடுவாள்!'' என்று இந்திரா வெட்டி விட்டுப் போனாள்.

அதே சமயம் வாசலில் டாக்ஸி வந்து நின்றது. சோர்ந்த முகத்தோடு ரமா கீழே இறங்கினாள்.

''என்னவோ அக்கா, நேற்றுக் காலையிலிருந்து மனம் துடித்துக் கொண்டே இருந்தது. உடனே நம் வீட்டுக்குப் போக வேண்டும் என்று தோன்றியது. ராத்திரி விமானத்தில் புறப்பட்டு வந்தேன். அவர் சுகமாயிருக்கிறாரா ?''

''அப்படியானால் நான் கொடுத்த தந்தியைப் பார்க்கவில்லையா ?''

''இல்லையே ! என்ன தந்தி?''

''அவருக்குத் திடீரென்று நெஞ்சு வலி. தந்தி கொடுத்துத்தான் குழந்தைகள் வந்திருக்கிறார்கள்.''

ரமா கிழவரின் அறைக்கு ஓடினாள்.

இந்திராவும் நகரவே, தர்மு அவளைத் தடுத்து நிறுத்திவிட்டுத் தான் மட்டும் பின் சென்றாள்.

கிழவர் கண் மூடிப் படுத்திருந்தார். நாடி பார்க்கக் கை நீட்டிய ரமா சட்டென்று நிறுத்திக் கொண்டு தர்முவைப் பார்த்தாள்.

அவள் கண்களால் அனுமதிக்கவே ரமா கிழவரின் கையைத் தொட்டாள். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாம் முறையாக அந்த ஸ்பரிசம் !

'' ஏதோ அதிர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். டாக்டர் என்ன சொன்னார் ?''

''வெறும் வீக்னஸ்; ஓய்வு எடுத்தால் சரியாகிவிடும் என்றார்.''

ரமா கிழவரின் முன் குனிந்து, ''மாமா, மாமா! ரமா வந்திருக்கிறேன், பாருங்கள் !'' என்றாள்.

கிழவர் கண்களைத் திறந்தார்.

அவள் கழுத்திலிருந்து தொங்கிய மஞ்சள் கயிறு தென்பட்டது.

''தீர்க்க சுமங்கலியாய் இரு, ரமா !'' — என்று வாழ்த்திய கிழவர், ''எங்களுக்குக் கூடச் சொல்லாமலா கல்யாணம் செய்து கொண்டாய்! உன் கணவர் டாக்டரையும் அழைத்து வந்திருக்கலாமே ?'' என்று கேட்டார்.

தர்மு அப்போதுதான் ரமாவின் தாலியைக் கவனித்தாள்.

''அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம், மாமா! உங்களுக்கு இப்போது எப்படி இருக்கிறது?''

''எனக்குத்தானே ! ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. கடைசியில் நீ மனம் மாறி வாழத் தொடங்கிவிட்டாய் என்று அறியும் போது நிம்மதியாய் இருக்கிறது!''

''எனக்குக் கல்யாணமானதாக உங்களுக்கு எப்படித் தெரியும் ?''

தர்மு பதில் சொன்னாள். ''காரைக்குடிப் பையன் யாரோ ராணுவத்தில் டெல்லியில் இருக்கிறானாம். நேற்றுக் காலையில் அவன் தான் சொன்னானாம். அந்த டாக்டரும் நீயும் நெருங்கிப் பழகுவதாக. சீக்கிரம் கல்யாணம் ஆகிவிடும் என்று சொன்னானாம்.''

ரமா சோகமாகச் சிரித்தாள். ''உலகத்தைப் புரிந்து கொண்டிருப்பதாக மாமா சொன்னார். ஆனால், என்னைக்கூடப் புரிந்து கொள்ளவில்லை ! டாக்டர் மோகன் என்னை மணக்க விரும்பிச் சம்மதம் கேட்டு இரண்டு வருஷங்களாகி விட்டன. மறுத்து விட்டேன். ஆனால் அவர் விடவில்லை. நான் வேறு யாரை யாவது மணந்து கொள்ளும்வரை காத்திருப்பதாகச் சொன்னார். எனக்காகத் தமது அமெரிக்க மேல்படிப்பைத் தள்ளிப் போட்டிருந்தார். வீணாக அவர் படிப்பு கெடுவதை நான் விரும்பவில்லை. எட்டு மாதங்களுக்கு முன் இங்கே வந்துவிட்டுத் திரும்பிய போது, மாமாவின் சார்பில் நானே ஒரு மஞ்சள் கயிற்றை அணிந்து கொண்டு, எனக்குத் திருமணமாகி விட்டதாகப் போய் சொன்னேன். அதை நம்பிய அவர் போன மாதம் தான் அமெரிக்கா சென்றார். மாமாவின் நினைவாக நான் கட்டிக் கொண்ட தாலியைக் கழற்ற மனமில்லாமல் அணிந்து கொண்டிருக்கிறேன். வேறு மோகன்களுக்கு அதுவே பதில் சொல்லி விடுமே ! இதுதான் நடந்தது. மாமாவின் முகத்தைப் பார்த்த கண்கள் இனி மற்றவர் முகத்தைப் பாராது, அக்கா ! அவர்தான் என் உயிர் !''

கிழவரின் முகத்தில் ஒரு நிம்மதி படர்வதை அவரால் மறைக்க முடியவில்லை.

தர்மு சொன்னாள்: ''அவருக்கு மட்டுமென்ன ? ஆரம்பத்தில் அவருக்கு உன் மேல் காதல் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், நாளாக ஆக, உன் உறுதியைக் கண்டு அவர் உருகியதையும் அது காதலாக மாறியதையும் நான் அறிவேன், ரமா. அதைத் தடுத்து நிறுத்த நான் முயன்றிருந்தால் என்னையும் குழந்தைகளையும் புறக்கணித்துவிட்டுக்கூட உன்னோடு வாழ்க்கை நடத்த அவர் தயங்கியிருக்கமாட்டார். ஆனால், நான் வெறும் மனைவியாக நடந்து கொள்ளவில்லை; ஒரு பெண்ணாகவும் நடந்து கொண்டேன். உன்னைப் பற்றிய உணர்ச்சிகளை அவர் கொட்டித் தீர்க்க நானே வடிகாலானேன். அவர் அன்புக்குக் கட்டுப்பட்டவர். எனக்காக அவர் தமக்குத் தாமே வேலியிட்டுக் கொண்டார். ஆனால், அவர் உன் மேல் கொண்டிருக்கும் காதல் பெரிது, ரமா ! பாரேன், உனக்குக் கல்யாணம் நடக்கலாம் என்று கேள்விப்பட்டவுடனேயே நெஞ்சு வலி வந்து விட்டது ! உன் மேல் ஏற்பட்ட ஆத்திரத்தில், உனக்குத் தந்தி கொடுக்க வேண்டாம் என்று சொல்லி விட்டார் ! நான்தான் அவருக்குத் தெரியாமல் கொடுத்தேன்.''

''அப்படியா ! மாமாவுக்கு என் மேல் கோபம் வந்ததா ! நான் கொடுத்து வைத்தவள், அக்கா !'' என்று பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் ரமா.

சுருதி சுத்தமான இரட்டை நாதசுவரக் கச்சேரி கேட்பவர் போலக் கண் மூடிக் கேட்டுக் கொண்டே சுகமாகத் தூங்கத் தொடங்கினார் கிழவர்.

ரமாவும் தர்முவும் வெளியே வந்தனர்.

'' பெற்ற மகளைவிட, எங்கேயோ கிடந்து எப்படியோ வந்து ஒட்டிக் கொண்டவர்கள் உயர்ந்து விட்டார்கள் !'' என்று பொருமி விட்டுப் போனாள் இந்திரா.

ரமா புண்பட்டு நின்றாள்.

அன்று பகலில் கிழவர் மறுபடியும் மார் வலிக்கிறதென்றார். எல்லோரும் சுற்றி நின்றார்கள். திடீரென்று கிழவரின் முகம் சுருங்கிக் கோணலாயிற்று.

ரமா நாடியைப் பார்த்தாள். அவள் முகம் பரபரப்படைந்தது. சூழ்நிலையை, ஏன், தன்னையே மறந்தவளாக, ''அக்கா! என் கடைசி ஆசையை நிறைவேற்றுவீர்களா ?'' என்று கேட்டாள்.

'' சொல்லு, ரமா.''

'' உங்கள் இல்வாழ்க்கையின் ஆரம்பத்தில் அவர் தலை உங்கள் மடியில் இருந்திருக்கும். இப்போதும் அது அங்கேயே இருக்கட்டும். அவர் பாதங்களாவது என் மடியில் இருக்கட்டுமே ?''

''ஆகட்டும், ரமா !''

ரமா கிழவரின் பாதங்களை மடியில் தாங்கிக் கொண்டாள்.

தர்மு தன் மடியில் அவர் தலையை ஏந்திக் கொண்டாள்.

கிழவர் இமைகளைத் திறந்தார். தலைப்புறம் இருந்த தர்முவைப் பார்த்தார். பிறகு, கால்மாட்டில் இருந்த ரமாவைப் பார்த்தார். அப்புறம் அவர் விழிகள் அசையவே யில்லை. அத்தனை காலமும் சம்பிரதாயம், சமுதாயம் என்ற காரணங்களுக்காகக் காண முடியாதிருந்த முகத்தை இப்போது ஆசை தீரக் காண்பதுபோல் அவர் விழிகள் நிலைக்குத்தி விட்டன.

கணங்களில் வாழ்ந்திருந்த ரமா இனி யுகத்துக்கும் விதவை !


அதிகாலையில்
ஸ்டேன்ஸ் காபி!
நாள் முழுவதும்
புத்துணர்ச்சி!!
ஒவ்வொரு கோப்பையிலும்
அதிக புத்துணர்ச்சி!
Stanes
தி யுனைடெட் காபி சப்ளை கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்

MAC(B) 1/75

அந்தப் படகு மிகப் பெரிதாக இருந்தது. எனினும், அதைக் கப்பல் என்று சொல்ல முடியவில்லை. சிறிய கேளிக்கையும், சந்தோஷமும் நிறைந்த பிரயாணங்களுக்காக ஏற்பட்ட பெரிய படகு அது. அதன் மேற்தளத்தில் மிகவும் இயல்பான நிலையில் நின்று கொண்டும்... உட்கார்ந்து கொண்டும், சூரிய வெளிச்சத்தில் படுத்துக் கொண்டும் ஒரு கனவுச் சதுரம் போலிருந்த சிறிய நீச்சல் குளத்தில் (வெந்நீர்) சொம்பேறித்தனமாக நீந்திக் கொண்டும் இருந்த சந்தோஷ மனிதர்களில் ஆத்மா நித்யாவுக்காகக் காத்திருந்தான். தன் கையில் இருந்த புத்தகத்தில் கவனம் இல்லாமல்... எதிரே நீந்திக் கொண்டிருந்த நித்யாவின் அவ்வப்போது தெரிந்த உடல் வடிவ அழகைப் பார்த்துக் கொண்



டிருந்தான். படகு அத்தனை வேகத்தில் செல்வது தெரியவே யில்லை. அதன் வயிற்றில் இருந்த சிறிய அணு மின்சார நிலையத்தின் சக்தியில் அது கடல் பரப்பின் மேல் ஒரு காற்று மெத்தையில் மிதந்து சென்றது.

ஆத்மாவுக்கு அந்தப் பிரயாணம் அவன் வாழ்வின் ஆதர்சங்களில் ஒன்று...இன்னும் பதினைந்து நிமிடங்களில் படகு சென்னையை அடையப் போகிறது.

சென்னை !

அவன் முன்னோர்களின் ஊர் ! அவன் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்கு ... அவர்கள் குடும்பத்துக்கு ஒரு வீடு அங்கே இருந்திருக்கிறது. அது என்ன இடம் ? திருவல்லிக்கேணி... தேரடித் தெரு... கோயிலின் அருகில் ! கம்ப்யூட்டர் தந்த விவரம்....

மார்பில் 'வழிகாட்டி.' என்ற வாசகம் எழுதப்பட்ட ஓர் இளைஞன் ஆத்மாவுக்கு அருகில் வந்து புன்சிரித்து, ''எல்லாம் சௌகரியமாக இருக்கிறதா?'' என்றான்.

ஆத்மா தலையசைத்தான்.

'' உங்கள் மனைவி இந்தப் பிரயாணத்தை மிகவும் ரசித்திருக்கிறார் என நினைக்கிறேன்'' என்று நீச்சல் குளத்தில் அம்புபோல் குதித்த நித்யாவைப் பார்த்துச் சொன்னான். நித்யா தண்ணீரிலிருந்து தலை தூக்கி.... ''ஆத்மா, நீயும் வாயேன்'' என்றாள்.

ஆத்மா தலையசைத்தான்.

மெலிதான கடல் காற்று அவன் கேசங்களை அலைக்கழித்தது. அவனுள் இன்பம் பொங்கியது.....

'' எப்போது சென்னைக்குப் போய்ச் சேருவோம்?''

''இன்னும் பதின்மூன்று நிமிஷங்களில்...''

எதிரே பார்த்தான். சூரியன் ஜரிகை விட்ட கடல். சொம்பேறித்தனமான ஆரஞ்சுப் படுதாவைப் போலப் புரண்டு கொண்டிருந்தது. வெண் பறவைகள் சிராகப் பறந்து கொண்டிருந்தன. 'ஓஸோன்' வாசனை ஆத்மாவுக்குப் பிடித்திருந்தது.

ஒலிபெருக்கி உயிர் பெற்றது.

''கவனியுங்கள். அன்புள்ள பிரயாணிகளே! கவனியுங்கள்.... மகிழ்ச்சிப் பகுதியின் ஆனந்தப் படகில் சென்னை நகரத்தைக் காண வந்திருக்கும் உங்களுக்குப் படகின் தலைவரின் வணக்கங்கள். இந்தப் படகு உங்கள் சொந்தப் படகு. இதில் கிடைக்கக் கூடாதது எதுவும் இல்லை. நவீன விஞ்ஞானத்தின் நவீன அதிசயம் இது. ஐந்நூறு கிலோமீட்டர் வேகத்தில் நாம் சென்று கொண்டிருக்கிறோம். இந்தப் படகு கடல் மேல், கடலுக்குள், ஏன் மணல் மேல்கூடச் செல்லக்கூடியது....


''சென்னை நகரின் பல பகுதிகளைக் காண இன்று வந்திருக்கும் உங்களுக்குச் சென்னையைப் பற்றிய அறிமுகம் தேவை என்றால் உங்களுக்கு அருகிலேயே இருக்கும் ஒலிப் பெட்டியை இணைத்துக் கொள்ளலாம்..... வந்தனம்.''

ஆத்மா சென்னை நகரைப் பற்றி முழுதும் படித்துவிட்டான். இருந்தும் மறுபடியும் மறுபடியும் தன் நகரத்தைப் பற்றிக் கேட்க ஆவல் அவனிடத்தில் மிச்சம் இருந்தது. ஒலிப்

பெட்டியை இணைத்துக் கொண்டான். மெலி தான வற்புறுத்தும் குரலில் சங்கீதப் பின்னணி யுடன் அது அவன் காதுகளுக்குள் மட்டும் ஒலித்தது....

'' தென்னிந்தியாவின் மகத்தான நகரமாக இருந்த சென்னை அல்லது மதராஸ் தார்மல அய்யப்ப நாயக்கன் என்பவர் 1639ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி ஃப்ரான்ஸிஸ் டே என்பவருக்கு செயின்ட் ஜார்ஜ்கோட்டையைக் கட்டுவதற்கு அனுமதி தந்ததற்கு முன்னமேயே இருந்திருந்தாலும் அதன் சரித்திரம் அப்போதுதான் தொடங்கு கிறது.....

'' டே என்பவர் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக இருபத்தைந்து ஐரோப்பிய சிப்பாய்களுடனும் நாகபட்டன் என்கிற



சுஜாதா

இந்திய வெடிமருந்து தயாரிப்பவருடனும் 1640ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ம் தேதி அங்கே வந்து சேர்ந்தார். செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உட்பகுதி 1640ம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி முடிவுற்றது...''

நித்யா தன்னைத் துடைத்துக் கொண்டு வந்து அவன் காது அருகில் முகத்தோடு முகம் ஒட்டிக் கொண்டு அவன் என்ன கேட்கிறான் என்பது மாதிரி பார்த்தாள்.

''மதராஸ் பட்டணம் என்பதுதான் அதன் பழைய பெயர். இந்தப் பெயரின் ஆதாரம் சரிவரத் தெரியவில்லை.... மத்த ராஜு என்று அந்தப் பகுதியின் அரசன் ஒருவன் பெரிய விருந்து ஏற்பட்டிருக்கலாம்..... அல்லது கடலில் சென்ற மரக்கால் ராயர்கள் என்கிற ஓர் இனத்தின் பெயரிலிருந்து மரக்கால்ராயர் பட்டணம் என்று தொடங்கி மதராஸ் பட்டணம் என்று மாறியிருக்கலாம்....''

நித்யா அவனைச் சீண்டினாள்..... ஆத்மா ஒலிப் பெட்டியைக் குறைத்தான்.

'' எத்தனை தடவை இந்தச் சென்னைச் சரித்திரத்தையே கேட்டுக் கொண்டிருப்பீர்கள்? எனக்கு அலுத்து விட்டது !''

''இது நம் நகரம் நித்யா ! நம் வீட்டுக்குப் போகப் போகிறோம் !''

''உங்கள் முன்னோர் வீட்டில் என்ன பார்க்கப் போகிறீர்கள் ! பிற்காலத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்குப்பின் இந்தச் சந்ததியில் ஆத்மா என்று ஒருவன் பிறக்கப் போகிறான் என்று சுவரில் எழுதி வைத்திருப்பாரா ?''

'' முதலில் அந்த வீட்டைக் கண்டுபிடிப்பதே கடினமாக இருக்கும் ! எந்த நிலையில் இருக்கிறதோ.... பெரும்பாலான கட்டடங்கள் பத்திரமாக அன்றிருந்தது போலவே இருக்கின்றனவாம்.... அந்த வழிகாட்டி உன்னை விசாரித்தான்.....''

'' ஆம், அவன் என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.''

''அது உனக்கு எப்படித் தெரியும் ?''

''நான் பார்த்த திசையில் எல்லாம் அவன் தெரிந்தான்.''

''மார்பை மூடிக் கொள். ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும்.''

''எனக்குப் பசிக்கிறது.''

''கீழே சென்று ஏதாவது சாப்பிடு. நான் கேட்டுவிட்டு வருகிறேன். ஐந்து நிமிஷங்களில் வந்துவிடு..... சென்னை வந்து விடும்.''

கல்லூரி மாணவர்களுக்கு:
சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளைப் படித்து அவை உங்களிடம் ஏற்படுத்தும் பாதிப்புகளைப் பற்றிச் சிறு கட்டுரை எழுதி அனுப்ப வேண்டும் என்பதை நினைவூட்டுகிறோம். — ஆசிரியர்

ஆத்மா மறுபடியும் ஒலிப் பெட்டியை இணைத்துக் கொண்டான்.

''மைலாப்பூரில் லாஸரஸ் தேவாலயத்துக்கு அஸ்திவாரம் தோண்டும்போது மான்யுவல் மத்ரா என்பவரின் கல்லறை தென்பட்டதாம். மத்ராவின் குடும்பம் ஒரு பெரிய செல்வாக்குள்ள குடும்பம். எனவே, நகரத்தின் பெயர் மத்ராவின் பெயரிலிருந்து வந்திருக்கலாம் என நினைக்கலாம்....

''மதர்ஸா என்பதற்குப் பெர்சிய மொழியில் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி என்று அர்த்தம். ஒரு பழைய முகம்மதியக் கல்லூரி அங்கிருந்திருக்கலாம். இதிலிருந்து மதறாஸ் என்ற பெயர் தோன்றியிருக்கலாம் எனவும் எண்ணக் கூடும்.

'' எனினும், சென்னைப் பட்டணம் என்ற பெயரே பிற்பாடு நிலைத்துச் சென்னை என்று மாறியது. இந்தப் பெயரைப் பற்றிச் சந்தேகமில்லை. தார்மல சகோதரர்களின் தந்தை சென்னப்ப நாயக்கரின் நினைவில் சென்னப்ப பட்டணம் என்று பெயர் பெற்று.... சென்னை ஆயிற்று....''

அவர்கள் ஒவ்வொருவராகப் படகின் மேல் அடுக்குக்கு வந்து கொண்டிருந்தார்கள்.... சென்னையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்! ஆத்மாவின் உள்ளம் துடித்தது... தன் அன்னையை நோக்கிப் போவது போல் உணர்ந்தான்.

எத்தனை தூரம் வந்திருக்கிறேன், இந்தப் பிரயாணத்துக்காக... அஸ்ட்ரா 7ல் அவனுக்கு விடுமுறை கிடைத்து, நித்யாவுக்கு விடுமுறை கிடைத்து, அங்கிருந்து ஷட்டில் பிடித்து ஸ்பேஸ் நிலையத்துக்கு வந்து அங்கே ரிஸர்வேஷன் கிடைக்காமல் அந்தரத்தில் தொங்கும் அந்தப் பிளாட்பாரத்தில் இரண்டு தினங்கள் கழித்து, இடம் கிடைத்து, கிரகப் பிரயாணக் கப்பலில் பூமிக்கு வந்து.... மற்றொரு பூமிப் பிரயாணம் செய்து.... ஒரு வாரமாக ஹோட்டல்கள், பழக்கமில்லாத பிரயாணங்கள் பழக்கமில்லாத அறைகள்.... முகங்கள்....

''ஏன்தான் உனக்கு இந்தப் பிடிவாதமோ! விடுமுறையை வீணடிக்கிறாய்! எத்தனையோ புதிய இடங்களுக்குச் சென்றிருக்கலாம்...... ஜூலியாஸ் என்கிற புதிய காலனி அப்படி தேவலோகம் போல இருக்கிறதாம்! நீயும் உன் சென்னையும்! சரித்திரத்தைக் கட்டிக் கொண்டு அழு!''

''உனக்கு இஷ்டமில்லை என்றால் நீ தனியாகப் போயிருக்கலாமே, நித்யா!''

''ஆம்! தெரியாத்தனமாகத்தான் வந்து விட்டேன். பூமியே போர் அடிக்கிறது!''

சென்னை கண்டுபிடிக்கப்பட்ட செய்தி அஸ்ட்ராவில் கிடைத்தது முதலே அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை! அதற்காகப் பணம் சேர்த்து, விடுமுறை சேர்த்து... வந்து சேர்ந்து விட்டான்.

வழிகாட்டி தென்பட்டான். ஆத்மா அவனைக் கூப்பிட அவன் புன்சிரிப்புடன் வந்தான்.

'' நீ சென்னை நகரைப் பார்த்திருக்கிறாய் அல்லவா?''

''தினம் ஒரு தடவை..... அதுதானே என் தொழில்.''

''நகரின் பல பகுதிகளும் உனக்குத் தெரியுமல்லவா?'' அவன் சிரித்து, ''ஹைகோர்ட், ஸாந்தோம், அண்ணாசாலை, வள்ளுவர் கோட்டம், கபாலீசுவரர் கோயில், கந்தசாமி கோயில், கோட்டை.... என்ன வேண்டும் உங்களுக்கு......?''

''திருவல்லிக்கேணி தெரியுமா?''

''பார்த்தசாரதிசாமி கோயில் இருக்கிறது...... மூன்றாவது குழுவில் சேர்த்துக் கொள்வார்கள்....''

''அங்கே தேரடித் தெருவில் ஒரு வீடு....''

''வீடா!'' என்றான் ஆச்சரியத்துடன்.

'' ஏன்?''

அவன் பதில் சொல்வதற்குமுன் ஒரு சைரன் ஒலித்தது: ''கவனிக்கவும்... கவனிக்கவும்.... படகின் மேல் ஓரங்களிலிருந்து விலகிக் கொள்ளவும்... விலகிக் கொள்ளவும். படகு மூடிக் கொள்கிறது....''

மேல்தளத்தில் இருந்த அனைவரும் நடுவே சேர்ந்து கொண்டார்கள். ம்ம்ம்ம்ம் என்று இயந்திர முனகல் கேட்க ஒரு பிளாஸ்டிக் கண்ணாடிச் சுவர் அரைச் சதுர வில்லையாக உயர்ந்து வளைந்து படகின் மேல் தளத்தை முழுவதும் மூடிக் கொண்டது.... திடீரென மௌனமும் எதிர்பார்ப்பும் அவர்களிடையே பரவியது.

''கவனிக்கவும்! கவனிக்கவும்! படகு கடலுக்குள் செல்லப் போகிறது. இன்னும் மூன்று நிமிடங்களில் நாம் சென்னை நகரை அடையப் போகிறோம்..... இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கடலில் மூழ்கிய சென்னை நகரத்தின் புராதனக் கட்டடங்கள் நவீன ரசாயனத்தின் உதவியால் பாசி நீக்கப்பட்டு, மாசு நீக்கப்பட்டுச் சுத்தப்படுத்தப்பட்டு... உங்களுக்காகக் காத்திருக்கிறது.... உங்கள் படகு சென்னை நகரின் புராதன வீதிகளின் ஊடே மிதந்து செல்லும்.... அவ்வப்போது கட்டடங்களின் வருணனை கிடைக்கும். நாம் இன்னும் இரண்டு நிமிஷங்களில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அணுகுவோம்!.....''

அந்தப் படகு நீரில் அமிழ்ந்தது.

கடல் இப்போது வெள்ளி ஜரிகையிட்டு மெதுவாகப் புரண்டு....மிக அமைதியாக இருந்தது.



ஆசிரியர்: (பையனிடம்) டேய் பாலு, சித்தார்த்தனின் உண்மைப் பெயர் என்ன? சொல்லு பார்க்கலாம்.

பையன்: சசிகபூர் சார்.



புது உலகம் கண்டேன்!

5. சூப்பர் மார்க்கெட்டுகள், வீட்டு வசதிகள்

ஐரோப்பா முழுவதும் பெரிய நகரங்களிலோ, சிறிய ஊர்களிலோ இருக்கும் சூப்பர் மார்க்கெட்களும், டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களும், மக்களுக்கு வரப் பிரசாதம் போன்றவை. குண்டூசி முதல் ரிக்கார்ட் பிளேயர் வரை எல்லாம் ஒரே இடத்தில் துரிதமாகவும், சுலபமாகவும் கிடைக்கிற வசதி இணையற்றதாகும். மாஸ்கோ முதல் குவெய்த் வரை பல நகரங்களில் பல சூப்பர் மார்க்கெட்டுக்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பியதும் சென்னையிலுள்ள சில சூப்பர் மார்க்கெட்டுக்களில் ஏறி இறங்கியபோது மந்தகதியும், எரிச்சலும், தாமதமும் மிக மிக வித்தியாசமாக விட்டுத் தெரியவே செய்தன. நிறுவையில் தாமதம், பில் போடத் தாமதம், 'அது இல்லை இது இல்லை - ஸ்டாக் இல்லை'— என்ற பதில்கள் போன்ற தாமதங்கள் இங்கு சகஜமாக நேர்கின்றன. நமது டில்லி, பம்பாய், சென்னை சூப்பர் மார்க்கெட்டுக்களில் வேலை பார்ப்பவர்களில் நாலில் ஒரு பங்கு ஆட்களை வைத்துக் கொண்டே அவற்றை விடப் பெரிய சூப்பர் மார்க்கெட்டுக்களை அங்கு வெளிநாடுகளில் நிர்வகித்து விடுகிறார்கள். மேற்கு நாடுகளின் சூப்பர் மார்க்கெட்களும் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களும் சராசரி இந்தியனுக்குப் பொறாமையூட்டக் கூடியவை.

முதலில் மாஸ்கோவிலும், சோவியத் யூனியனின் பிற நகரங்களிலும் உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளைப் பற்றிப் பார்க்கலாம். ஆண்களுக்கும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் என்று தனித் தனி சூப்பர் மார்க்கெட்டுகள் உள்ளன. எல்லாவற்றிலும் பொதுவானவை திறமை சுறுசுறுப்பு — தாமதமின்மை ஆகியவை.

மாஸ்கோ நகரில் உள்ள மிகப் பெரிய சூப்பர் மார்க்கெட்' ஆகிய 'கும்' (Gum) செஞ்சதுக்கத்துக்கு அருகே இருக்கிறது. ஜார் மன்னர்கள் காலத்தில் வசதி உள்ளவர்களின் பிரைவேட் மார்க்கெட்டாக இருந்த இது இன்று பொதுவான டிபார்ட்மெண்டல் - ஸ்டோராக மாற்றப்பட்டிருக்கிறது. வெள்ளம் புகுந்து வருவதுபோல் மக்கள் புகுந்து வெளி வந்து கொண்டிருக்கும் இந்தச் சூப்பர் மார்க்கெட்டின் சதுரமான தூண்களில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கண்ணாடிகளில் இன்று வரை ஒரு சிறு கீறல்கூடக் கிடையாது. இப்போதுதான் பதிப்பித்தவை போல் புதுமை மெருகு குன்றாமல் இருக்கின்றன. அவ்வளவு கூட்டம் வந்து போகிற இடமாக இருந்தும் எந்த அசம்பாவிதமும், சேதமும் நிகழவில்லை என்பது வியக்கத்தக்கது. மக்களின் கட்டுப்பாட்டுக்கு இதுவே அடையாளமாகும். 'கும்' டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்குள் நுழைந்தால் மேலும் கீழுமாகப் படியேறி இறங்கி நாள் முழுதும் சுற்றிப் பார்த்துக்கொண்டே இருக்கலாம். 'கும்' மாஸ்கோவில் ஒரு தனி உலகம்.

அங்கே எத்தனைவிதமான பெரிதும் சிறிதுமாகிய பண்டங்களை விற்கிறார்கள் என்பதைப் பார்த்த போது மலைப்பு ஏற்பட்டது. விதம் விதமான நகைகள், வளையல்கள், காதணிகள், மோதிரங்கள், கல் பதித்த அணிகள் விற்கும் பகுதிகள், ஆடைப் பகுதிகள், கோட், ஓவர் கோட் பகுதிகள், பொம்மைக் கடைகள், காமிராக் கடைகள், கடிகாரக் கடைகள் என்று மாடிக்கு மாடி — பகுதிக்குப் பகுதி நீண்டு கொண்டே போயிற்று. விலைகளில் பேரம் இல்லை. எங்கும் ஒரு சீரான விலைகள். ஏமாற்று, மோசடி, சுரண்டல், அதிக லாபத்துக்கு வழியே இல்லை. இத்தகைய டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களில் விற்பனையாளர்களாகவும், பண்டங்களை எடுத்துக் காட்டுகிறவர்களாகவும் பெரும்பாலும் பெண்கள்தான் நிறையப் பணி புரிகிறார்கள். அதனால் எரிச்சலான உரையாடல்கள், தடிக்கும் வார்த்தைப் பரிமாற்றங்கள் இல்லாமல் வியாபாரம் பொறுமையாகவும் அமைதியாகவும் நடக்

கிறது. நம்மூரில் இப்படிப் பெரிய சிறப்பு அங்காடிகளில் பெண்களையும் ஆண்களையும் கலந்து வேலைக்கு வைத்தால் அவர்கள் வாடிக்கைக்காரர்களை விட்டுவிட்டுத் தங்களுக்குள் சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். முழுவதும் பெண்களாக வேலைக்கு நியமித்தாலும் வீண் அரட்டைதான் மிஞ்சுகிறது. எப்படி வைத்தாலும் கறுகறுப்பு உள்ளே வர மறுக்கிறது.

மாஸ்கோவில் உள்ள 'கூம்' டிபார்ட்மெண்டல் ஸ்டோரோ அல்லது லண்டனில் தனியார் நடத்துகிற ஹெரரட்ஸ் (Herrods), மார்க்ஸ் அண்ட் ஸ்பென்ஸர் (Marks and Spencer) டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களோ எங்கானாலும் கறுகறுப்பான பெண்கள் அதிகம் பணியாற்றிக் கடைக்கு நல்ல பெயர் தேடிக் கொடுக்கிறார்கள். இந்தப் பெண்கள் எள் என்பதற்குமுன் எண்ணெயாக இருக்கிறார்கள். இவர்கள் பழகும் முறையும் குறிப்பறியும் திறனும் பிரமாதமாக இருக்கிறது. வாடிக்கையாளர்களுக்கு உதவுவதிலும் அவர்கள் மனம் நோகாமல் நடப்பதி



நா. பார்த்தசாரதி

சோவியத் ரஷ்யாவில்:

- நகர்ப்புறத்தில் குடியிருப்பு வசதிகள்
- கூட்டுறவுப் பண்ணையில் வீட்டு வசதி.
- மாஸ்கோ சூப்பர்மார்க்கெட்

லும் இவர்களுக்கு விசேடமான பயிற்சி தரப்பட்டிருக்கிறது. எல்லாப் பகுதிகளிலும் தேவையான பொருள்களை நிரப்பிக் கொண்டு பில் போட்டுப் பணம் வாங்குகிற 'டெஸ்க்' வரை தள்ளிச் செல்லுவதற்குக் கீழே ரப்பர்ச் சக்கரம் பதித்த மெல்லிய — கனமற்ற அழகான தள்ளு வண்டிகளை எல்லா டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களிலும் வைத்திருக்கிறார்கள். லண்டனில் சில கடைகளில் முன்னால் தள்ளு வண்டியோடு ஆள் போய் நின்றால் கண்ணாடிக் கதவுகள் தாமே திறந்து மூடிக் கொள்கிற வசதிகூட உண்டு. ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் கிடைத்ததை விடவும் மலிவாக வேறோர் இடத்தில் கிடைக்கும் என்பதை நிரூபித்தால் 'வித்தியாசப்படும் தொகை திருப்பித் தரப்படும்' என்றுகூட சில லண்டன் சூப்பர் மார்க்கெட் கடைகளில் அறிவிப்பு எழுதி வைத்திருக்கிறார்கள். டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்குள் உலாவிப் பொருள்களை வாங்குவோரை ஒரு மூலையி



லிருந்தே கண்காணிக்குமாறு அங்கங்கே விதானத்தில் குவிந்த கண்ணாடிகளைப் (காரிலுள்ள ரியர்வியூ கண்ணாடி போன்றது) பொருத்தியிருக்கிறார்கள். ஷார்ட் சர்க்யூட் டெலிவிஷன் காமிரா பொருத்திய டிபார்ட்மெண்டல் — ஸ்டோரும் உண்டு. இவை தவிரச் சாமான் பொறுக்கி எடுக்கும் மக்களோடு மக்களாகக் கலந்து நடமாடி அவர்களுடனிருந்தே அவர்கள் அறியாமல் அவர்களைக் கண்காணிக்கும் 'ஸ்டோர் டிடெக்டிவ்ஸ் அல்லது ஷாப் டிடக்டர்ஸ்'கூட லண்டனில் உண்டு. ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் ஒருவர் ஒரு பொருளை வேண்டும் என்றே கால் சட்டைப் பைக்குள் அல்லது வேறு மறைவிடங்களில் ஒளித்தால்கூட அருகே இருந்து அல்லது டெலிவிஷன் காமிரா மூலம் — குவி ஆடிமூலம் காண்கிற கடைக்காரர் உடனே அந்த ஆளைப் பிடித்து அடித்து உதைத்துப் பரபரப்பு காட்டிவிடுவது வழக்கம் இல்லை. பொறுமையாகப் பின்தொடர்வார்.

கடைசி மூலையில் பில் போட்டுப் பணம் வாங்குகிற இடம் வரை அந்த ஆளைக் கண்

காணித்து, மறைத்த பொருளை அவர் பில் போடச் செய்து பணம் செலுத்தாமலே கடைக்கு வெளியே கொண்டு போக முயல்வது உறுதியான பிறகே போலீஸார் வசம் பிடித்து ஒப்படைக்க ஆயத்தமாவது வழக்கம். ஐரோப்பிய வியாபாரிகளின் நிதானப் பண்பு பிரமாதமா யிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய விளையாட்டு வீரர்கள் சிலர் இப்படி ஒரு லண்டன் டிபார்ட்மெண்டல் ஸ்டோரில் பிடிபட்டு அபராதம் கட்ட நேர்ந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆனால் இவையெல்லாம் கூட மேற்கு ஐரோப்பிய நாடுகளின் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களில்தான். ரஷ்யாவில் திருட்டு என்ற பேச்சே கிடையாது. பாங்க் கொள்ளை, கடைக் கொள்ளை, பிக்பாக்கெட், வழிப்பறி இவை யெல்லாவற்றையும் பற்றி எச்சரிக்க வேண்டிய அவசியமோ எச்சரிக்கைகளோ ரஷ்யாவில் இல்லை. பஸ் ஸ்டாண்ட், ரயில் நிலையம், விமானக்கூடம் போன்ற பொது இடங்களில் கூட இப்படி அறிவிப்புக்களை அங்கே காண முடியாது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தான் இப்படி எச்சரிக்கைகளைத் தாராளமாகக் காணலாம். டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களில் ஒன்றுக்கு ஒன்று விலை வேறுபாடு இருப்பது மேற்கு ஐரோப்பாவில் சாத்தியம். ரஷ்யாவில் அதுவும் சாத்தியமில்லை. மேற்கு ஐரோப்பிய டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களில் லக்சரி விஷயங்கள் — துணி மணி ஆடைகளிலேயே பல நூறு வெரைட்டிகள் எல்லாம் குவிந்து கிடக்கும். ரஷ்யாவில் லக்சரி அயிட்டங்கள் ஆடை துணி மணிகளில் அநாவசியமான வெரைட்டிகள் எல்லாம் பார்க்க முடியாது. அவசியமான சில வகை வெரைட்டிகள் மட்டுமே இருக்கும் என்பது குறிப்பிடத் தகுந்த ஒரு வித்தியாசம்.

எப்படியானாலும் குடும்ப வாழ்க்கை நடத்துகிற ஒருவனுக்கு அலைச்சலை மிச்சப் படுத்தும் இந்தச் சிறப்பங்காடிகள் ஐரோப்பா முழுவதும் சிறப்பாக இயங்குகின்றன. மார்க்ஸ் அண்ட் ஸ்பென்சரின் கச்சிதமான ஒரு கிளை இல்லாத சிறு ஊரைக் கூட இங்கிலாந்தில் காண முடியாது. சோவியத் யூனியனிலும் சிறப்பு அங்காடி வசதிகள் எல்லா முக்கிய இடங்களிலும் செய்யப்பட்டிருக்கின்றன.

ரஷ்யாவில் டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்கு அடுத்தபடி வீட்டு வசதி — கட்டிட வசதி — குடியிருப்பு ஃப்ளாட்டுகள் நம் கவனத்தைக் கவர முடியும். மாஸ்கோவிலும் பிற சோவியத் நகரங்களிலும் குடியிருப்புப் பிரச்னை சுலபமாகவும் திட்டமிட்டும் தீர்க்கப்பட்டு வருகிறது. மாஸ்கோவில் விண்ணளாவிய 'ஸ்கை ஸ்க்ராப்பர்ஸ்' அதிகம். இங்கிலாந்திலும் பிரான்ஸிலுமோ வெகுஜன மனப்பான்மை அப்படி விண்முட்டும் கட்டிடங்களை வெறுக்கிறது. லண்டன் நகரில் முக்கிய தெருக்களில் சில விண்முட்டும் கட்டிடங்கள் வந்து விட்டாலும் — புதிதாக அப்படிக் கட்டிடங்கள் கட்டவிடக் கூடாது என்று கிரேட்டர் லண்டன் கவுன்ஸில் (Greater London Council) தீர்மானம் போட்டுவிட்டது. தீர்மானம் நிறைவேறியபோது அரைகுறையாக இருந்த சில 'ஸ்கை ஸ்க்ராப்பர்கள்' இன்னும் அப்படியே திரிசங்கு நிலையில் உள்ளன. இங்கிலீஷ்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தங்களது பாரம்பரியமான பாணி வீடுகளையும், கட்டிடங்களையுமே விரும்புகின்றனர். விண் முட்டும் கட்டிடங்களை அவர்கள் வெறுக்கிறார்கள். பிரான்ஸில் பாரிஸில் உள்ள புதிய ஒரே ஒரு நல்ல கட்டிடம் என்பது Y என்ற ஆங்கில எழுத்து வடிவில் கட்டப்பட்டுள்ள யுனெஸ்கோ அலுவலகம்தான். மற்றொரு 93 மாடிக் கட்டிடம் இருந்தாலும் அதை ஏனோ மக்கள் வெறுக்கிறார்கள். சோவியத் யூனியனின் நிலைமையோ முற்றிலும் மாறானது. அங்கு வீட்டு வசதிகளுக்கான, அலுவலக வசதிகளுக்கான எல்லாக் கட்டிடங்களும் விண்ணளாவிய அடுக்கு மாடிக் கட்டிடங்களாகவே வளர்கின்றன. அதில் சில வசதிகளும், பொருத்தமும் உண்டு.

அங்கே வருடத்தில் பல மாதங்கள் கடுங்குளிர் உள்ள பகுதிகளில் ஒரு கட்டிடத்துக்கு சென்ட்ரல் ஹீட்டிங், சமையல் காஸ் சப்ளை எல்லாம் செய்ய வேண்டியிருப்பதால் அடுக்கு மாடிக் கட்டிடங்களையே சோவியத் யூனியனில் அதிகம் விரும்பிக் கட்டுகிறார்கள். அவ்வாறு கட்டுவது 'ஹீட்டிங் சிஸ்டம்' போன்ற பல ஏற்பாடுகளுக்குச் சௌகரியமாக இருக்கிறது. ஒரு மாடி மேல் இன்னொரு மாடியாக அடுக்கும் இந்த முறையில் விரைந்து பலவற்றைக் கட்டும் திறமை சோவியத் கட்டிட நிபுணர்களுக்கு இருக்கிறது. மாஸ்கோவிலும் சுற்றுப்புறங்களிலும் சிவில் என்ஜினீரிங் திறமைக்குச் சரியான அடையாளங்களான பல்வேறு கட்டிடங்களைப் பார்த்தேன்.

தலைநகரான மாஸ்கோ சுற்றுப்புறங்களில் பெரும் பகுதி மரத்திலான பழைய கேரளத்து வீடுகளைப் போன்ற சில வீடுகளையும் பார்த்தேன். பூர்வீகமான வீடுகளின் மாதிரியாக அவை விளங்கின. இன்னும் அவை உள்ளன. புதியது பழையது எல்லாப் பகுதிகளிலும் மரம் செடி கொடிகள் பசுமை பூங்கா எல்லாம் பேணிக் காக்கப்படுகிறது.

இங்கே சென்னை நகரில் காலி இடத்தில் இரண்டு நூறு பேர் ஓர் அரசியல் தலைவரின் பெயர் சூட்டிக் குடிசைகள்போட்டுக் கொண்டு மலஜல வசதிகள் எதுவுமின்றிச் சுற்றுப்புறத்தை நாற அடிப்பது போல் மாஸ்கோவில் செய்ய முடியாது. பிற சோவியத் நகர்களிலிருந்து மாஸ்கோவில் நுழையவே 'எண்ட்ரி பெர்மிட்' வேண்டும். நகரின் சுத்தம் காக்கப் பட அநாவசிய நெருக்கடி தவிர்க்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எல்லாரும் ஒரே நகரில் ஒரே திசையில் குவிய விடாமல் செய்ய அங்கு ஏற்பாடுகள் உள்ளன. அரண்மனைக்காரத் தெரு, கிடங்குத் தெருவில் நம்மூரில் பாதையோரம் குடும்பம் நடத்துவது மாதிரி மாஸ்கோ போன்ற நகரங்களில் நடத்துவது

சிலை! ஹிட்லருக்கு!

உகாண்டா ஜனாதிபதி இடி அமீன் தலைநகர் கம்பாலாவில் ஹிட்லருக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப் போகிறாராம்.

— டைம் - பாபு

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

ம து ரை

ஓர் முக்கிய வேண்டுகோள்!

பொது மக்கள், ஆஸ்திக அன்பர்கள் ஆகியோரின் விருப்பத்திற்கிணங்க அருள்மிகு மீனாட்சியம்மனுக்கு ஒரு தங்க ரதம் செய்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

மெய்யன்பர்கள் தங்கள் அன்புக் காணிக்கைகளைத் தங்கமாகவோ அல்லது ரொக்கமாகவோ இதற்கென தனியாக அம்மன் சன்னதி நுழைவு வாசலில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியலில் செலுத்தி அம்பாளின் அருளுக்குப் பாத்திரர்களாகும்படிக் கோரப்படுகிறார்கள். நன்கொடையினை, வங்கி காசோலை மூலமாகவும், (அல்லது) மணி யார்டர் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:

"நிர்வாக அதிகாரி,
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை".

மதுரை,
19-7-76

R. திருவேங்கடசுவாமி
உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி

CPS

எழுத்தாளர்கள் கதைகளைப் படைக்கிறார்கள்!
அவற்றினின்று வாசகர்கள் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கிறார்கள்!
இப்படியொரு புதுமையான சிறுகதைப் போட்டி

அமுதசுரபி

அளிக்கும்

லட்சுமி ராஜலிங்க முதலியார் நினைவுப் பரிசுகள்

மொத்தப் பரிசு ரூ. 2000/-

எழுத்தாளர்களுக்கு 10 பரிசுகள்

கதைகளைத் தேர்ந்தெடுக்கும் வாசகர்களுக்கும் பரிசு!

விபரங்களுக்கு **ஆகஸ்ட் மாத அமுத சுரபியைப்** பாருங்கள்


சாண்டில்யன் எழுதும் சரித்திரத் தொடர்கதை மற்றும் சிறுகதை, கட்டுரைகள். **'விக்கிரமன்'** எழுதும் **'நந்திபுரத்து நாயகி'** மூவண்ண அட்டை

அமுத சுரபி — ஆங்கில மாதம் முதல் தேதி எங்கும் கிடைக்கும்

தனிப் பிரதி விலை ரூ. 1/- ஆண்டுச் சந்தா ரூ. 12/-

அமுதசுரபி, ஸ்ரீராம் டிரஸ்ட், 69, பீட்டர்ஸ் சாலை, சென்னை-600086
தொலைபேசித் தொடர்பு : 85659

வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உடம்புக்குத் தேவை கால்ஷியம்-ஸாண்டோஸ்®



கர்ப்பத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே குழந்தையின் பற்களிலும் எலும்புகளிலும் அமையத் தொடங்குகிறது கால்ஷியம். கருவிலுள்ள குழந்தைக்கு அதிகப்படி கால்ஷியம் அவசரமாகத் தேவை. எனவே, வழக்கத்தைவிட இருமடங்கு தேவைப்படும் உங்களுக்கு முன்னதாகவே சாப்பிடத் துவங்குவீர் கால்ஷியம்-ஸாண்டோஸ்.



பாப்பாவின் பற்களுக்கும் எலும்புகளுக்கும் கால்ஷியம் வழங்குவது பாலூட்டும் தாயன்றி வேறில்லை. அவளுக்கு வழக்கத்தைவிட மும்மடங்கு கால்ஷியம் தேவை.

வளரும் குழந்தைக்கு வலுவான எலும்புகளும் நலமுள்ள பற்களும் அமைய இன்றியமையாதது கால்ஷியம். எனவே, பெரியோரைவிட குழந்தைக்கு அதிகக் கால்ஷியம் தேவைப்படும்.





ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வயதிலும், மனித உடம்புக்கு அத்யாவசியம் கால்ஷியம். மிகச் சிறந்த வடிவிலுள்ள கால்ஷியம்: கால்ஷியம்-ஸாண்டோஸ். ராஸ்ப்பெர்ரி சுவையூட்டிய இனிமையான கால்ஷியம்-ஸாண்டோஸ், நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 வில்லைகள் போதும், உங்கள் கால்ஷியம் தேவையை நிறைவுசெய்யும், வைட்டமின் C, D, B 12 சத்துக்களோடு.

நம்பிக்கைக்குரியோர் ஸாண்டோஸ்-கால்ஷியம் துறையிலே உலக முன்னோடிகள்.

SANDOZ

கால்ஷியம்-ஸாண்டோஸ்®

வில்லைகள் தினமும் தேவை எவருக்கும்

மகன் தந்தையிடம் சொன்னான்: ''26 வருஷமாக உங்களுக்குப் பிள்ளையாக இருந்து எனக்கு அலுத்து விட்டது. அதனால் அடுத்த தெருவில் இருக்கிற மோகனாவின் அப்பாவுக்கு மாப்பிள்ளையாகி விடுவது என்று தீர்மானம் பண்ணிவிட்டேன் அப்பா!...''

— இந்திரன்



நினைத்துப் பார்க்கவும் முடியாத விஷயம். குளிரில் விறைத்துப் போக வேண்டியதுதான். வீட்டு வசதி ஏற்பாடுகள் நகரில் ஏற்கனவே வசிப்பவர்களுக்குத் தாராளமாகச் செய்து தரப்பட்டிருப்பதனால் நெருக்கடிப் பிரச்னை எழவே வழியில்லை. ரெடி மேட் வீடுகளாகவே கட்டி அப்படி அப்படியே இணைக்கிற சாதனையை அவர்கள் கலபமாகச் செய்கிறார்கள். ஊர்கள் தவிரக் கடற்கரை விடுதிகள், சானடோரியங்கள், ஓய்வு விடுதிகள், மலைவாசஸ் தலங்கள் ஏராளமாக நாடு முழுவதும் சிரத்தையோடு கட்டப்பட்டுள்ளன.

சாலைகள், மின்சாரம், குடி தண்ணீர், சென்ட்ரல் ஹீட்டிங், போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளே கிடையாது. எந்த இடத்திலும் எந்த வசதியும் அரை குறையாக இராது. நகர் விரிவடைவதற்குத் தகுந்த மாதிரிப் போக்குவரத்து வசதிகள் விரிவடைந்து கொண்டே போகும். இந்தக் காரணங்களால் சோவியத் யூனியனின் குடியிருப்பு வசதிகள் முழுமை பெற்றிருக்கின்றன. திட்டங்களில் எந்தப் பழுதும் ஓட்டையும் இல்லை. அரசாங்கமே சிரத்தையோடு கட்டுவதால் கட்டிடங்கள் தரமாக உள்ளன. காண்ட்ராக்ட் லாபம் — சிமெண்ட் கலவை மோசடி — மாதிரி விவகாரங்கள் அங்கு கிடையவே கிடையாது. பெரிய கட்டிடங்களுக்கு லிஃப்ட் வசதிகள் போதுமான அளவு செய்து தரப்பட்டிருக்கின்றன. நபர்கள்—குடும்ப அளவுக்குத் தகுந்த மாதிரி இட ஒதுக்கீடு கிடைக்கிறது. ஆனால் சிறிய இடமோ, பெரிய இடமோ அதில் வசதிகள் எதுவும் குறையாது. வித்தியாசப்படாது. மாஸ்கோ நகர் முழுவதும் டெலிபோன் தொடர்பு கலபமாகச் செய்து தரப்பட்டிருக்கிறது. உள்ளூர் டெலிஃபோனுக்குக் கட்டணமே கிடையாது. வாடகை மட்டுமே உண்டு.

பெரிய தொழிற்சாலைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், குடியிருப்பு வீடுகள் ஆகியவற்றின் அமைப்பு, வண்ணம் — இவற்றுக்குச் சிவில் என்ஜினீயர்களைத் தவிர சைக்காலஜிஸ்டுகளின் யோசனையும் கேட்கப்படுகிறது என்று தெரிவித்தார்கள். அது எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

''சைக்காலஜிஸ்டுகளுக்கு இதில் என்ன வேலை இருக்கிறது?'' என்று கேட்டேன் நான்.

''நிறைய வேலை இருக்கிறது. ஒரு கட்டிடம் — அது அமைக்கப்பட்டுள்ள விதம்—அதன் பெயிண்ட் எல்லாம் சேர்ந்துதான் அதற்குள் குடியிருப்பவன் — கற்பவன் — பணிபுரிபவனுடைய மனநிலையை உருவாக்குகின்றன. ஆகவே இதில் சைக்காலஜிஸ்டுகளுடைய உதவி பெரிதும் தேவைப்படுகிறது. உபயோகமாகவும் இருக்கிறது'' என்று பதில் தெரிவித்தார்கள். ரஷ்யாவில் 1926ம் ஆண்டிலிருந்து ஃப்ளாட்டுகளுக்கும், இடங்களுக்கும் தரப்பட வேண்டிய குடக்கூலி (வாடகை) ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்படி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கம் வீட்டு வசதிக்கான செலவுகளுக்கு முதலிடம் அளிக்கிறது. யுத்தங்களில் சேவை புரிந்து மாண்டவர்களின் குடும்பங்கள், கைகால் இழந்தவர்கள், பணிகளின் போது விபத்தடைந்து வேலை செய்ய முடியாமற் போனவர்கள் ஆகியவர்களுக்குக் குறைந்த வாடகையிலும் விரைந்தும் ஃப்ளாட்டுகள் தரப்படுகின்றன. அவர்களுக்குச் சலுகைகளும் அதிகம்.

ஒரு குடும்ப வரவு செலவுத் தொகையினுள் 4 முதல் 5 சத விகிதத்துக்கு மேல் வீட்டு வாடகைக்கான செலவு ஆகவே ஆகாது. பழுது பார்த்தல், கட்டிடங்களுக்கான வண்ணம் பூசுதல் முதலிய காரியங்களை எவ்வெப்போது தேவையோ அவ்வப்போது அரசாங்கமே முன்வந்து செய்துவிடுகிறது. அடுக்கு மாடிக் கட்டிடங்களில் சானிடரி மின்சார, காஸ் வசதிகள் குறைந்த செலவில் முழுமையாகச் செய்து தரப்பட்டுள்ளன. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சோவியத் நகரமைப்பு வல்லுநர்களும் (*Town Planning Experts*) அரசும் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டங்களை வியக்கத் தக்க அளவு சாதித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

முன்பே கட்டி வார்த்த சுவர்கள், பகுதிகளை இராட்சத யந்திரங்கள் தூக்கி நிறுத்தி இணைத்து விடுவதனால் (*Large Prefabricated Panels*) கட்டிட வேலைகள் மிக விரைவில் பூர்த்தியாகி விடுகின்றன. தொழிற்சாலைகளோ அல்லது பணிமனைகளோ கூட இந்த ஏற்பாட்டால் நம்ப முடியாத சுருங்கிய கால அளவில் உருவாகி முடிந்து விடுகின்றன. சோவியத் நகரங்களில் பழைய நாளிலேயே அழகாகவும் திட்டமிட்டும் கட்டப்பட்ட நகரம் லெனின்கிராட். சக்ரவர்த்தி மகாபீட்டர் இந்த நகரத்தைக் கண்ணும் கருத்துமாக உருவாக்கினான். சக்கரவர்த்தி மகா பீட்டரைத்தான் சோவியத் நகரமைப்பு வல்லுநர்களின் தந்தை என்று சொல்ல வேண்டும். லெனின்கிராட் நகரின் அமைப்பழகுக்காகப் பெருமைப்படும் ஒவ்வொரு சோவியத் குடிமகனும் சக்கரவர்த்தி மகா பீட்டருக்கு அந்தரங்கமாக நன்றி செலுத்தத் தவறுவதேயில்லை.

ரஷ்யா முதலிய ஐரோப்பிய நாடுகளின் குடியிருப்பு வீடுகள் ஒரு குடும்பத் தலைவனின் வீடு சம்பந்தமான கவலைகளைக் குறைக்கின்றன. சூப்பர் மார்க்கெட்டுகளோ வீட்டுக்குத் தேவையானவற்றைப் பற்றிய கவலைகளைக் குறைக்கின்றன. வாழ்க்கையை நிம்மதி நிறைந்ததாகவும், களிப்புள்ளதாகவும் செய்கிற வசதிகளை வீட்டு ஏற்பாடு சரிபாதியும் வேண்டிய பண்டத்தை எல்லாம் விரைந்து தரும் சூப்பர் மார்க்கெட்டுகள் சரிபாதியுமாக அளித்து விடுகின்றன. அப்புறம் குடும்ப வாழ்வில் யாருக்கு என்ன கவலை?

We still make Margo Soap in small batches with pure Neem Seed Oil the way we made it in the 1920's

We're not the giant soap manufacturer who produce millions of cakes on a continuous assembly line with ingredients poured in through one end and the finished product out the other. We can't make Margo soap that way.

Margo soap is produced only from pure Neem seed oil (I.S.I. standard) and other oils but without the addition of any synthetic detergent. We believe that synthetic detergents which produce extra-rich lather rob the skin of natural oils making it rough and dry.

The selection and procurement of Neem oil for Margo soap are not easy. We use only standard Neem seed oil for its better medicinal value and germicidal properties and not the easily available neem fruit oil. Naturally it costs more. But we cannot think of Margo soap without Neem oil. The fungicidal and germicidal properties of Neem made the Neem tree known as the "Village doctor"

To retain these properties the processing of Margo Soap become more laborious and complicated. Neem seed oil has to be refined and deodorised first by our special process and then the soap is 'cooked' in small batches for 10 days before being ready. It takes more time and money to make soap our way —That's why it costs more, better quality always does.

We can make soap the other way but we believe in the traditional theory of "Matured cooking" and quality. Result — Margo is still as popular as it was in the twenties. Margo the non-medicated soap with all the natural medicinal properties of Neem oil.

Think as to why you use Margo ? Isn't it for it's hygienic value and superior quality which keeps your skin, soft and smooth more than any other variety you can buy ?
No other soap can claim what we claim.

Margo Soap

the hygienic soap for all seasons, all ages

IDL/MG/7

a product of CALCUTTA CHEMICAL





அத்தியாயம் 33

"சம்மதம்"; "சம்மதம்!"

கமலாவின் உடல் வெடவெட வென்று நடுங்குவதைப் பார்த்த மறு கணமே ரங்கநாதனுக்குப் புரிந்து போயிற்று: 'அவள், அந்தக் கடிதத்தைத் தான் படித்துப் பார்த்துவிடக்கூடாதே என்ற கவலையில்தான் பயப்படுகிறாள்!' அவர் புன்னகையுடன் கடிதத்தை இரண்டாகவும் பிறகு நான்காகவும் மடித்தார்.

''கமலா! உன் உடம்புக்கு என்ன? ஏன் இப்படி நடுங்குகிறது?'' என்றார்.

அவருக்குக் கடிதத்தைப் படிக்கும் உத்தேசம் இல்லை என்பதை அவர் அதை மடித்த விதத்திலிருந்தே உணர்ந்துவிட்ட கமலாவின் நடுக்கம் குறைந்து விரைவில் நின்றும் விட்டது.

''ஒன்றுமில்லை'' என்று தலைகுனிந்து முணுமுணுத்தாள் அவள்.

''உடம்புக்கு ஒன்றுமில்லையா? அப்படியானால் என்னைக் கண்டு பயந்துபோய்த்தான் நடுங்கினையா? நான் என்ன பார்ப்பதற்கு அவ்வளவு பயங்கரமாகவா இருக்கிறேன்?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்றாள் கமலா.

''உடம்புக்கும் ஒன்றுமில்லை; என்னைப் பார்த்தாலும் பயமாயில்லை. பிறகு உடல் நடுங்குவானேன்? ஒருவேளை இந்தக் கடிதத்தை நான் படித்து விடுவேன் என்ற பயத்தால் உன் உடல் அப்படிப் பதறியதா? கவலைப்படாதே கமலா! பிறர் கடிதங்களைப் படித்துப் பார்க்கும் கெட்ட பழக்கம் எனக்குக் கிடையாது!''

கமலாவுக்குத் திடீரென்று துணிச்சல் எப்படித்தான் வந்ததோ? கிண்டலும் கேலியும் கோபமும் ஆங்காரமும் கொப்பளிக்க, ''அடடா! அது எனக்குத் தெரியாதா? நீங்கள் எப்படிப்பட்ட உயர்ந்த மனிதர்! எவ்வளவு பெரிய பணக்காரர்! உங்களுக்கெல்லாம் அற்பத்தனமான கெட்ட பழக்கங்கள் இருக்குமா என்ன?'' என்றாள்.

ரங்கநாதன் சிரித்தார். ''புரிகிறது கமலா, நையாண்டி நன்றாகப் புரிகிறது. பிறர் கடிதத்தைப் படிக்கும் கெட்ட பழக்கம் எனக்கு இல்லை என்றுதான் சொன்னேனே யொழிய என்னைப் பரம உத்தமமான, தெய்விக புருஷனாக நான் வர்ணித்துக் கொள்ளவில்லை. நான் சாமானிய மனிதன்தான். பலவித ஆசாபாசங்களும் பலவீனங்களும் உடையவன்தான். அதே சமயம் பிறர் கடிதத்தைப் படிப்பது போன்ற சில கெட்ட பழக்கங்களை அண்டவிடாமல் என்னை நானே காத்துக் கொள்ளும் மனோபலமும் பெற்றவன். கமலா நீயே யோசித்துப் பார். எனக்கு இருக்கிற செல்வத்துக்கு நான் எவ்வளவோ தீய பழக்கங்களுக்கு அடிமையாகிக் கெட்டலையலாம். என்னைக் கேட்பார் இல்லை. ஆனாலும் நான் இந்த ஊரில் நற்பெயர் எடுத்துக் கௌரவமாக வாழவில்லையா? என்னை யாரேனும் வெறுக்கும்படியோ இழித்துரைக்கும்படியோ நடந்து கொண்டிருக்கிறேனா? சொல்!''

கமலாவுக்கு அவர் கூறுவதில் உள்ள நியாயம் புரிந்தபோது ஆங்காரத்துடன் அவரைக் கிண்டல் பண்ணுவது போலத் தான் பேசியது தவறு என்று உணர்ந்து வருந்தினாள். ரங்கநாதனிடம் கெட்ட பழக்கங்கள் ஏதும் கிடையாது என்பதுடன் பரோபகாரி என்றும் ஊரில் நற்பெயர் எடுத்திருந்தார். 'லக்ஷ்மிகடாட்சத்தைப் பெற்றவர், செல்வம் ஈட்டும் ஆற்றலை உடையவர் என்பதற்காகவே ஒருவரை வெறுப்பது அநியாயமல்லவா? தமது சொத்துக்கெல்லாம் ஒரு வாரிசு வேண்டும் என்று ஆசையால் அவர் என்னை மணந்துகொள்ள விரும்பியதில் என்ன தவறு? அவர் இஷ்டத்துக்குப் பணியுமாறு அவர் என்னையோ அல்லது அப்பா—அம்மாவையோ வற்புறுத்தவில்லையே? இவர்கள்தாமே அந்தச் சம்பத்துக்களையெல்லாம் பார்த்து மலைத்துப் போய்ப் பேராசைப்பட்டு இராப் பகலாக அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள்?'

அவளுடைய மனம் இளகியுள்ளதைப் படித்துவிட்டவராக அவர் தொடர்ந்தார்: ''உன் பெற்றோரை நான் என் பங்களாவுக்கு வரச் சொல்லி என் ஐசுவரியத்தைக் காட்டியது கூடத் தவறோ என்று என் மனத்தில் ஓர் உறுத்தல். கமலா! இரண்டு நாட்களாக அந்த உறுத்தலை அனுபவித்துவிட்டு இனியும் தாளாது என்ற நிலையில்தான் இப்போது இங்கே வந்திருக்கிறேன். நீ வீட்டில் தனியாக இருப்பதே ஒரு விதத்தில் அனுகூலமாய்ப்

போயிற்று. "உன் பெற்றோர் இருந்தால் உன்னைப் பேசவே விடமாட்டார்கள். 'அவளுக்கு என்ன தெரியும்? பெரியவர்கள் பார்த்துச் சொன்னால் சரி என்று கூறிவிட்டுப் போகிறாள்' என்பது போல் எதையாவது சொல்லியே என்னைச் சரிக்கட்டிவிடுவார்கள். ஆனால் எனக்கு உன்னுடைய மனப்பூர்வமான சம்மதம் இந்தத் திருமணத்துக்கு இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள வேண்டும். அது உன்னுடைய சுதந்திரமான முடிவாகவும் இருக்க வேண்டும். அப்படித் தெரிந்து கொண்ட பிறகுதான் இந்தக் கல்யாணம் நடக்கும். இல்லாதபோனால் அச்சடித்த திருமண அழைப்பிதழ்களை அடுப்பிலே போட்டுவிட்டுச் சிவனே என்று இருந்துவிடுகிறேன்."


கமலாவின் மனம் கரைந்துருகிற்று. 'மெய்யாலுமே பெரிய மனிதர் என்றால் இவர்தாம் பெரிய மனிதர்' என்று எண்ணினாள். ஆனால் அவருக்கு என்ன பதில் கூறுவது என்பதொன்றும் அவளுக்குத் தெரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. 'திருமணம் செய்து கொள்ள முடியாது என்று கூறிவிட்டால் மட்டும் என்ன நன்மை விளைந்துவிடப் போகிறது? கல்யாணம் கையில் தாலியுடன் ஓடி வரப் போகிறாரா? அல்லது இந்தக் குடும்பத்தின் தரித்திரம் நீங்கிவிடப் போகிறதா? நான்தான் பெரிய படிப்புப் படித்து உத்தியோகத்தில் அமர்ந்துவிடப் போகிறேனா? அல்லது அம்மா என்னைத் தரித்திரப் பீடை என்று கரித்துக் கொட்டுவதை நிறுத்திவிடப் போகிறாளா? வசவும் திட்டும் அதிகரிக்கப் போகிறது. அவ்வளவுதான்; வலிய வந்த ஸ்ரீதேவியை உதைத்துத் தள்ளினேன் என்பதாக அப்பாவுக்குக்கூட என் மீது ஆதங்கம் உண்டாகி வெறுத்துப் பேசலாம்.'

"நான்... நான்" என்று தட்டுத் தடுமாறித் தயங்கினாள் கமலா.

"வேண்டாம் கமலா, அவசரமில்லை. நீ இன்னும் கொஞ்சம் யோசித்துவிட்டே வேணுமானாலும் பதில் சொல்லு. பாதகமில்லை" என்றார் ரங்கநாதன். தொடர்ந்து, "இதோ பார், நீ பதிலே கூற வேண்டாம். இந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்தால் உன் மனம் எனக்கு உடனே தெரிந்து போய்விடும் என்று என் உள்ளுணர்வு கூறுகிறது. ஆனால் நான் அப்படிச் செய்யப் போவதில்லை. கடிதத்தை இதோ மேஜையின் மேல் வைத்து அது மறுபடியும் பறந்துவிடாமலிருக்க இந்தப் புத்தகத்தையும் அதன் மேல் வைக்கிறேன். இதை மறந்து விடுவோம். என்னையும் என் ஆசைகளையும்கூட சிறிது நேரம் மறந்துவிடுவோம். உன் வாழ்க்கை, உன் எதிர்காலம் இவற்றைப் பற்றிச் சிந்திப்போம். நான் உனக்கு வழங்க எண்ணுகிற எதிர்காலத்தில் வாலிப மிடுக்குடைய கணவன் என்ற ஓர் அம்சத்தைத் தவிர உனக்குச் சகலத்தையும் என்னால் கொடுக்க முடியும். அன்பும் ஐசுவரியமும் சாதிக்கக்கூடிய சகலத்தையும் நீ பெறலாம். யௌவனம் என்னிடமிருந்து விடைபெற்றுவிட்டதேயொழிய நான் இன்னமும் திடகாத்திரனாகவே இருக்கிறேன். ஊர் ஊராகப் போக வேண்டுமா? உல்லாசமாக உலகைச் சுற்றி வர வேண்டுமா? நகை நட்டு பூண வேண்டுமா? எதுவானாலும் சொல், உன் ஆசைகளையெல்லாம் கட்டளைகளாக மதித்து நிறைவேற்றுவேன். இதற்கெல்லாம் பிரதியாக நான் உன்னிடம் கேட்பது மனைவி என்ற ஸ்தானத்தில் அமர்ந்து அன்பையும் தோழமையையும் எனக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றுதான். கமலா! அபரிமிதச் செல்வம் என்ற கடலுக்கு மத்தியில் தனிமை என்ற ஏகாந்தத் தீவில் இருக்கிறேன் நான். என்னிடம் கொஞ்சம் இரக்கம் காட்டுவாயா?"

கமலாவின் நெஞ்சம் நெகிழ்ந்தது. கண்களில் கருணை பொங்கியது. அதே நேரத்தில் தன்னால்கூட ஒருவருக்கு உதவ முடியும். தன்னிடம்கூடக் கெஞ்சிக் கேட்கிற மாதிரியாக ஏதோ ஓர் அம்சம் இருக்கிறது என்ற எண்ணத்தில் கர்வம் எட்டிப் பார்த்தது!

'முடியாது என்று முகத்தில் அடித்ததுபோல் இவருக்குப் பதில் கூறிவிடுவது பெரிய காரியம் இல்லை. பிறகு அம்மா — அப்பாவின்



கோப தாபங்களுக்கு ஆளாகாதிருக்க வீட்டை விட்டு ஓடிவிடுவதும் பெரிய விஷயமல்ல. அப்படி ஓடிச் சென்ற பிறகு பிச்சை எடுப்பதோ அல்லது வேலை செய்து பிழைப்பதோகூடச் சிரமமில்லை. ஆனால் அப்படித் தன்னந்தனியாகப் பாதுகாப்பின்றி உலகில் வாழும் போது தன்னைப் புதிய ஆபத்துக்கள் சூழாது என்பது என்ன நிச்சயம்? இந்த யுத்த காலத்தில் உணவுக்குத்தான் பஞ்சமே யொழியக் கயவர்களுக்கா பஞ்சம்? இந்தப் பாழும் உலகையே துறந்து செத்தொழியலாம்தான். ஆனால் அதனால் என்னத்தைச் சாதித்ததாகும், எதை நிரூபித்ததாகும்? அதைவிட.... அதைவிட....'

ஒரு முடிவுக்கு வந்தவளாக ரங்கநாத முதலியாரை நிமிர்ந்து பார்த்தாள் கமலா.

"நீங்கள் எனக்காக ஒரு காரியம் செய்வீர்கள் என்றால் நான் இந்தத் திருமணத்துக்கு மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன்" என்றாள்.

"என்ன?" என்று கேட்டார் முதலியார்.

"என்னைப் படிக்க வைக்க வேண்டும். எஸ். எஸ். எல். ஸி மட்டுமில்லை. அதற்கு மேலே கல்லூரிப் படிப்பும் நான் பெற வேண்டும். டாக்டராக அல்லது வக்கீலாக என்னை நீங்கள் உருவாக்க வேண்டும். இந்த ராமப் பட்டணத்திலேயே எல்லோரும் அதிசயிக்க நான் தொழில் நடத்த வேண்டும். செய்வீர்களா?"

ரங்கநாத முதலியார் தாம் சற்றும் எதிர்பார்க்காத இந்தக் கோரிக்கையைக் கேட்டுச் சில விநாடிகள் பிரமித்துப் போனார். பிறகு பெரிதாகச் சிரித்தார்.

"எதற்குச் சிரிக்கிறீர்கள்? பைத்தியக்கார ஆசை என்று?"


"சேச்சே! அதொன்றும் இல்லை, கமலா. நீ கோரிக்கை என்றதும் நான் ஏதேதோ அபத்தமான கற்பனைகளில் இறங்கிவிட்டேன். உன்னுடைய பரிசுத்தமான மனத்தை உணராத மூடனாக, சொத்தையெல்லாம் உன் பெயருக்கு எழுதி வைக்க வேண்டும் என்று நீ கேட்கப் போகிறாய் என்று நினைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு, கமலா. இத்தனை எளிய, சாமானியக் கோரிக்கை என்றதும் மகிழ்ச்சி தாங்கவில்லை எனக்கு. கமலா! டாக்டருக்கு உன்னைப் படிக்க வைப்பது மட்டுமில்லை; நீ பட்டம் பெற்று வந்ததும் தலைவியாக விளங்கிப் பணியாற்ற இந்த ராமப்பட்டணத்தில் ஒரு பெரிய தர்ம ஆஸ்பத்திரியே கட்டித் தருகிறேன். போதுமா?"


கமலா சட்டென்று கிழக்கு முகமாக அவர் முன் விழுந்து வணங்கினாள். அவள் நிமிர்ந்த போது அவரது வலக்கரம் அவள் சிரத்தைத் தொட்டு ஆசீர்வதித்தது.

அத்தியாயம் 34

திருமண அழைப்பிதழ்

வாசலில் விளக்கு ஏற்றிவிட்டு வந்த கமலா வெகு உற்சாகமாகச் சமையல் காரியங்களில் ஈடுபட்டாள். அடுப்பு மூட்டத் தான் கடைசியாக எழுதிய கடிதத்தையும் அதற்கு முன்பாக





சென்னை, பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம். அகில பாரத ரீதியில் ஹிந்திக் கவியரங்கம். ஏகக் கூட்டம். பத்து ரூபாயிலிருந்து இருநூற்றைம்பது ரூபாய் வரைக்கும் நுழைவுக் கட்டணம் செலுத்தி வந்திருந்த மக்களைப் பார்த்த பொழுது ஹிந்தி பேசும் மக்களின் ரசனை உணர்வுக்கு ஒரு சபாஷ் போடத் தோன்றியது.

கவிதை மழைக்கிடையே கேட்ட ஒரு ஜோக்:

அந்நியோந்நிய தம்பதிகள் இருவர். யாருடைய கண் பட்டதோ இருவருக்கும் இடையே பிணக்குத் தோன்றிப் பிரிந்து வாழ வேண்டும் என்ற அளவுக்கு வழக்காக வளர்ந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, "உங்களுக்குள்ள சொத்து - சுதந்திரங்களைச் சம பாகமாகப் பிரித்து விடுகிறேன். ஆனால் ஒரு சிறு சிக்கல். உங்கள் இருவருக்கும் இருக்கும் குழந்தைகள் மூன்று. அவற்றில் இரண்டு ஆண்; ஒன்று பெண். அவற்றைப் பிரிக்கும் வழிதான் எனக்கு விளங்கவில்லை. அதை உங்கள் முடிவுக்கு விடுகிறேன்!" என்றார்.

மனைவி கணவனைப் பார்த்தாள். கணவன் மனைவியைப் பார்த்தான். கடைசியில் இதழ்களில் இளநகையோட, "வாருங்கள். நாலாவது குழந்தை பிறந்த பிறகே நாம் பிரிவோம்" என்று கூறி நீதி மன்றத்திலே இன்னொரு முறை தன் கணவன் கரம் பற்றினாள்.

"அது சரி. பிறக்கும் குழந்தை ஆணாக இருந்து விட்டால்....? இரண்டும் சமமாக ஆகும்வரை பிரியக் கூடாது. என் இந்த நிபந்தனை சம்மதமானால் சொல்லு!" என்றாராம் கணவர்.

கவியரங்கம் நகைச் சுவைச் சுரங்கமாகக் கரவொலி எழுப்பியது. கு. க.வுக்கு ஆதரவாகத்தான்!

-குறும்பன்

அரைகுறையாக எழுதிக் கிழித்துப் போட்ட கடிதங்களையும் பயன்படுத்திக் கொண்டாள். புகையில் கண்ணைக் கரித்தபோது 'சனியன்' என்று வையவில்லை. 'பெண்ணாய்ப் பிறந்தேனே' என்று அலுத்துக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, 'இன்னும் கொஞ்ச நாட்கள் தான் அடுப்பு ஊதுகிற வாழ்க்கை' என்று எண்ணிக் கொண்டாள். ரங்கநாதமுதலியார் பங்களாவில் பட்டுப் புடவை சரசரக்க இடுப்பில் சாவிக் கொத்து கலகலக்கத் தான் வளைய வருவதைக் கற்பனை செய்து கொண்டாள். சாதம் வெந்து இறங்குவதற்குள் கமலா மெட்ரிக் எழுதித் தேறிவிட்டாள். சாம்பார் கொதி வந்து இறக்குவதற்கு முன் அவள் பட்டணத்தில் ஜாகை வைத்துக் கல்லூரியில் சேர்ந்து எஃப். ஏ. படித்து முடித்தாகி விட்டது. தயிர் கடைந்து முடிப்பதற்குள் அவள் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டமும் பெற்று விட்டாள். அப்பா, அம்மா, விசுவுக்குச் சாப்பிடத் தயாராகத் தட்டு போட்டுத் தண்ணீர் எடுத்து வைப்பதற்குள் மேநாடுகளுக்குப் போய் எம். டி. பட்டமும் பெற்றுத் திரும்பி விட்டாள். கடைசியாக அப்பளாம் சுட்டுக் கொண்டிருந்த போது அவளுக்காக ராமப்பட்டணத்தில் பெரிய ஆஸ்பத்திரி உருவாகிவிட்டது! அதில் அவள் மிடுக்குக் குறையாத பரிவுடன் வளைய வந்து நற்பணியாற்றும் நேர்த்தியைக் கண்டு பவானி பிரமித்துப் போனாள். கல்யாணம் ஆனந்தக் கண்ணீர் ததும்ப நின்றான்.

குமட்டித் தணலில் கையைச் சுட்டுவிட்டது. கமலா உதறிக் கொண்டே நிமிர்ந்த போது வாசல் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கருகிய அப்பளாம் காமாட்சி அம்மாள் கண்ணில் படாதவாறு அடுப்புக்குப் பின்னால் ஒளித்து வைத்துவிட்டு, சுடு பட்ட விரலை உதடுகளுக்கிடையில் வைத்துச் சப்பிக் கொண்டே ஓட்டமும் நடையுமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

விசுப் பயல் புதுச் சட்டை, டிராயர் அணிந்த கோலத்தில் முதலில் உள்ளே நுழைந்தான். "என்னடா, இது, ஜவுளிக் கடையிலேயே டிரஸ் பண்ணிக் கொண்டாயா?" என்று கமலா புன்னகையுடன் கேட்டாள்.

பெரிய பெரிய பொட்டலங்களுடன் உள்ளே நுழைந்த காமாட்சி அம்மாள், "அளவு பார்க்கிறேன்னு பழைய துணிக்கு மேலேயே போட்டுக் கொண்டான், அப்புறம் கழற்ற மனசு வரலை. குழந்தைதானே?" என்றாள்.

மாசிலாமணி குதிரை வண்டிக்குக் கூலி கொடுத்துவிட்டுப் படியேறி வந்தார்.

"ஏண்டா, அக்காவுடைய கல்யாணத்துக்கு போட்டுக்க டிரஸ் வாங்கிவிட்டு இப்பவே அழுக்கா அடிக்கலாமா?" என்றாள் கமலா.

"சேசே! இதுவா கல்யாண டிரஸ்? அதற்கு ஸூட் தைக்கக் கொடுத்திருக்கு. இது சும்மா பள்ளிக்கூடத்துக்குப் போட்டுக் கொண்டு போகத்தான்" என்றான் விசு.

"கடைத் தெருவையே உன் அம்மா விலைக்கு வாங்கியாச்சு" என்றார், மாசிலாமணி.

காமாட்சி அம்மாள் கூடத்தின் மையத்தில் அமர்ந்து துணி மூட்டையை அவிழ்த்துத் தன் பட்டுப் புடவையை எடுத்து நெஞ்சோடு வைத்துக் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டாள்.


"இந்த மாதிரி அழகு பார்க்க உள்ளங்கை அகலக் கண்ணாடி போதாது. ஆளுயர நிலைக் கண்ணாடி தேவை" என்றார் மாசிலாமணி.

"அதுக்கென்ன, மாப்பிள்ளை வீட்டில் இல்லாத கண்ணாடிகளா?"

அவிழ்ந்த மூட்டையில் கூரைப் புடவை தெரிந்தது. பக்கத்தில் ஒரு சிறு நகைக் கடைப் பெட்டியும் இருந்தது. தாலியாகத்தான் இருக்கும். தனது அர்த்தமுள்ள எதிர்காலத்தின் அழகுமிக்க சின்னங்கள் என எண்ணினாள் கமலா.

"கமலா! உட்கார்ந்து பாரேன், உனக்குப் பிடிச்சிருக்கா என்று" — மாசிலாமணி தூண்டவே கமலா அமர்ந்து புடவையைத் தொட்டுத் தடவிப் பார்த்தாள். "ரொம்ப பிடிச்சிருக்கு அப்பா. அம்மா தேர்ந்தெடுத்தால் குறை இருக்குமா என்ன?"

அவள் குரலில் தொனித்த திருப்தி மாசிலாமணியைத் துணுக்குற வைத்தது. 'இது என்ன, இந்தப் பெண் சிறுமியாக இருந்த போது கல்யாண விளையாட்டு விளையாடினாளே, அதுதான் இதுவும் என்று நினைக்கிறாளா? அல்லது காணாததைக் கண்ட மகிழ்ச்சியில் பேசுகிறாளா?'



திருமலை செல்லும் யாத்திரிகர் கவனிக்க:

பெருமாளுக்கு முடி கொடுக்கும் வேண்டுதல்

பெருமாளுக்கு முடி கொடுப்பதாக வேண்டிக்கொள்வது, மனித அகங்காரத்தை விட்டொழித்து, பெருமாளின் பாதாரவிந்தத்தில் முழுச் சரணாகதி அடைவதையே குறிப்பாக உணர்த்துகிறது. ஆகையினால் பெருமாளிடம் நேர்ந்துகொள்ளும் வேண்டுதல்களில் ஒன்றாக, இது மிகப் பிரபலமாக விளங்குகிறது.

ஆனால் தொன்று தொட்டுவந்த முறைப்படி பெருமாளுக்கு முடி கொடுத்தால் தான் இந்த வேண்டுதல் பூர்த்தியாகும். இந்த முக்கிய வேண்டுதலை நிறைவேற்ற யாத்திரிகருக்கு உதவியாக டி.டி. தேவஸ்தானம் சிறப்பான கல்யாண கட்டங்களை அமைத்திருக்கிறது. தேவஸ்தான அங்கீகாரம் பெறாத எந்த ஒரு நாவிதரிடமாவது எங்கேயாவது மொட்டை அடித்துக்கொள்வது, இந்த வேண்டுதலின் பவித்திரத்தைக் காப்பாற்றியதாகாது என்பதை வலியுறுத்தவேண்டிய அவசியம் இல்லை. தேவஸ்தான நாவிதர்களிடம் செய்து கொண்டால்தான், அந்த முடி பெருமாளுக்கு நிவேதனமானதாகக் கருதப்படும்.

ஆகையால் தேவஸ்தான கல்யாண கட்டங்களில் மட்டுமே யாத்திரிகர்கள் முடி இறக்கிக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள் முடி இறக்குவதில் தேர்ந்த பல நாவிதர்கள் அங்கே உள்ளனர். நீங்கள் விரும்பினால் மிகக் குறைந்த கட்டணத்தில் வெந்நீர் வசதியும் அருகில் கிடைக்கும். தாங்கள் தங்கியிருக்கும் 'காட்டேஜ்'களிலேயே முடி இறக்கிக்கொள்ள யாத்திரிகர்கள் விரும்பினால், தேவஸ்தானம் மூலமாக அதற்கும் ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

கல்யாண கட்டங்களிலோ, 'காட்டேஜ்'களிலோ முடி இறக்கிக்கொள்ள நியாயமான கட்டணத்தில் தேவஸ்தான டிக்கெட்டுகள் கிடைக்கின்றன. நாவிதர்களுக்குத் தனியாக எதுவும் தரவேண்டாம்.

சில வஞ்சகர்கள், குறைந்த கட்டணத்தில் முடி எடுப்பதாக, யாத்திரிகர்களுக்கு ஆசை காட்டித் தனியார் சலூனுக்கு அழைத்துச் செல்வதாகவும், விரைவாகத் தரிசனம் செய்து வைப்பதாக வாக்குறுதி செய்வதாகவும் தேவஸ்தானத்துக்கு தெரிய வந்திருக்கிறது. தேவஸ்தானத்தின் மூலம் அல்லாமல் பிறமுறைகளில் முடி இறக்கிக்கொண்டால், அந்த முடி பெருமாளைப்போய்ச் சேராததால், அந்த வேண்டுதல் பூர்த்தியானதாக அர்த்தமாகாது என்றும், தேவஸ்தானம் ஏற்பாடு செய்துள்ள உன்னத முறைகளில் அல்லாமல் வேறு யாராலும் விரைவாகத் தரிசனம் செய்து வைக்க முடியாது என்றும் யாத்திரிகர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

நிர்வாக அதிகாரி
திருமலை-திருப்பதி தேவஸ்தானம்
திருப்பதி

'' வீட்டுக்காரர் வந்துவிட்டுப் போனார், அப்பா !''

''படிப்புத்தான் வரலையே தவிர கமலா கெட்டிக்காரிதான். 'வீட்டுக்காரர்' என்று இரண்டு அர்த்தம் தொனிக்கப் பேசுகிறாள் பாருங்க'' என்றாள் காமாட்சி.

''கல்யாண அழைப்பிதழ்கள் அச்சடித்துவிட்டாராம். கொண்டு வந்து கொடுக்க வந்தாராம். நீங்கள் இல்லாததால் என்னிடம் தந்துவிட்டுப் போனார்.'' — சொல்லிக்கொண்டே கட்டோடு அவற்றை எடுத்து வந்தாள் கமலா. ''அளவாகத்தான் அச்சடித்தாராம். அதுவும் இந்த ஊரில் இல்லை. மெட்ராஸுக்கு எழுதி அச்சடித்துத் தபாலில் அனுப்பச் சொல்லியிருக்கிறார். இந்த ஊரில் யாருக்கும் அழைப்பிதழ் தர வேண்டாம் என்று சொல்லச் சொன்னார். வெளியூரில் இருக்கிற நெருங்கிய உறவுக்காரர்களுக்கும் முக்கிய நண்பர்களுக்கும் மட்டும் அனுப்பச் சொன்னார். இல்லாத போனால் ஊர் வம்பை விலைக்கு வாங்கியதாகும் என்றார்.''

'' ரொம்ப சரி, யாரைத் தெரியும் நமக்கு இந்த ஊரிலே? எஞ்சி மிஞ்சிப் போனால் அந்த ராங்கிக்காரி பவானி; அவளைவிட்டால் அந்தப் பிள்ளையாண்டான் கல்யாணம், இவர்களுக்குத் தெரிவிக்கலைன்னா என்ன குடிமுழுகிப் போயிடும் ? டேய், விசு ! நாளைக்குப் பள்ளிக்கூடத்தில் போய் என் அக்காவுக்குக் கல்யாணம் என்று டமாரம் அடித்து வைக்காதே! பிச்சு இழுத்துப்பிடுவேன். மூன்றும் பேருக்குத் தெரியாமல் கல்யாணம் நடந்து முடியனும்'' என்றாள் காமாட்சி.

இதற்குள் கட்டைப் பிரித்து ஓர் அழைப்பிதழை எடுத்துப் பிரித்துப் படிக்க ஆரம்பித்திருந்தார் மாசிலாமணி:

''.... திருநீர் மலை க்ஷேத்திரத்தில் நடக்கிற படியால், தாங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து.....''

''அப்பா, தேதி என்ன என்று படித்தீர்கள் ?'' என்று கேட்டான் விசு. ''நாடகம் நடக்கிற அதே தேதியா ?''

'' ஆமாம், அதனால் என்னடா? டிக்கெட் தான் கிழிந்து போய்விட்டதே !''

'' அந்த ஓசி டிக்கெட் கிழிந்தால் என்ன? நாலு டிக்கெட் காசு கொடுத்து வாங்கிக்க நமக்குத் தெரியாதாக்கும் '' என்றாள் காமாட்சி.

அவள் அப்போது பாக்கிப் பணத்தை எண்ணிக் கொண்டிருந்தாள்.

நாடகம் நடக்கும் தினமே நல்ல முகூர்த்த நாளாக அமைந்தது ரொம்ப வசதி என்று ரங்கநாத முதலியார் கருதியிருப்பார் என்பது கமலாவுக்குப் புரிந்தது. ராமப்பட்டணம் ஊரே நாடக அரங்கேற்றம் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கும். இளைஞர்களின் சிந்தனையெல்லாம் அங்கே ஒருமுகப்பட்டிருக்கும் போது இவர்கள் முதல்நாள் திருநீர் மலைக்குக் கிளம்பிச் செல்வதை யாரும் கவனிக்கமாட்டார்கள். வாலிப மிடுக்குடைய சீர்திருத்தவாதிகளின் முட்டுக்கட்டை ஏது மின்றித் திருமணம் 'ஜாம்ஜாம்' என்று நடந்தேறும் !

சிறப்புப் பணிக்குச் சிரிய உதவி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆதரவில் ஸ்ரீ ஜகந்நாதர் கோயில் கொண்டிருக்கும் புரி க்ஷேத்திரத்தில், கடலை ஒட்டினாற் போல் ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ சைதன்யர், ஸ்ரீ பத்மாவதி ஜயதேவர் ஆகியவர்களுக்குக் கோயில் எழுப்பி யிருப்பது யாவரும் அறிந்ததே. வரும் பக்தர்கள் மழையில் நனையாமல் இருக்கக் கோயிலை ஒட்டினாற்போல் மண்டபம் கட்டவும் இப்பொழுது ஏற்பாடு நடந்து வருகிறது. இதற்கும் ஸ்ரீ மடத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் அதர்வ வேத - ருக்வேத பாடசாலைகளுக்கும் நிதி உதவி தேவைப்படுகிறது.

நிர்வாகச் செலவே நாளொன்றுக்குக் குறைந்த பட்சம் நூறு ரூபாய் செலவாகிறது. இந்தப் பணிக்குப் பக்தர்கள் குறைந்த பட்சம் ரூ. 365 நன்கொடை கொடுத்தால், சிறப்பான பூசனையோடு பணியும் செவ்வனே நடைபெற உதவும். மொத்தமாக இத்தொகையைத் தர முடியாதவர்கள் முதல் மாதம் 35 ரூபாயும், அதைத் தொடர்ந்து பதினொரு மாதங்களுக்கு மாதம் ரூபாய் முப்பதும் அனுப்பி வைக்கலாம். இப்பணியில் ஈடுபடும் அங்கத்தினர்களுக்கு ஸ்ரீ ஜகந்நாதருடைய பிரசாதம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர்கள் ஜன்ம நட்சத்திரத்திலேயோ அல்லது அவர்கள் கோரும் வண்ணமோ அனுப்பப்படும். அவர்கள் புரி க்ஷேத்திரத்துக்கு விஜயம் செய்தால், அவர்களுக்கு சமிதியின் சார்பில் இயன்ற வசதிகளும் செய்து தரப்படும். இந்தப் பணிகளில் பங்கு கொண்டு ஸ்ரீ ஜகந்நாதர் பிரசாதம் பெற விரும்பும் பக்தர்கள் செயலாளர், ஸ்ரீ சங்கர பகவத் பாத சேவா சமிதி, ஸ்வர்க்கத்வார், புரி, ஒரிஸ்ஸா ராஜ்யம் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.



''என்னடா, பிரமாத நாடகம் ? கமலாவின் கல்யாணம் நடந்து முடியட்டும். தினம் ஒரு நாடகம் அல்லது சினிமா பார்க்கலாம்'' என்றாள் காமாட்சி.

''என்னதான் இருந்தாலும் 'கன்னியாகுமரியின் கனவு' நாடகம் போல் ஆகுமா அப்பா ? இவா இரண்டாவது முறை நாடகம் போடறாளோ இல்லையோ ? கல்யாணம் மாமாவும் பவானி அக்காவும் சேர்ந்து நடிக்கறதை மறுபடியும் பார்க்க முடியுமோ என்னவோ ?''


அந்த விநாடியில் கமலாவின் நெஞ்சில் ஒரு வேதனை ஏற்பட்டது. 'தனக்குத் திருமணம் நிச்சயமாகி பிடித்தமான ஓர் எதிர்காலமும் உறுதியான பிறகும் தன் மனம் இவ்வாறு சங்கடப்படக் கூடாது ; பவானி அக்காவும் கல்யாணம் மாமாவும் சேர்ந்து நடிக்கிறார்கள் என்று தம்பி கூறியதுமே ஒரு துன்பம் இதயத்தை ஊடுருவக் கூடாது ; இது தவறு' என்று அவள் நினைத்தாள். ஆயினும் அவள் அறிவு கூறியதை மனம் ஏற்காமல் தொடர்ந்து துயரப்பட்டுக் கொண்டுதான் இருந்தது!

(தொடரும்)

பாலியெஸ்டர் துணிகள் எல்லாவற்றிலும் 'டெரீன்' ட்ரேட்மார்க் இருப்பதில்லை.

அதன் காரணத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்

அவை ஏதோ பாலியெஸ்டர் துணிமணிகள் அல்ல என்பதையே 'டெரீன்' ட்ரேட் மார்க் உங்களுக்கு எடுத்துக் கூறுகிறது. அது பரிசோதனை செய்யப்பட்ட, அதுவும் 'டெரீன்' பாலியெஸ்டர் இழையைத் தயாரிக்கும் கெமிக்கல்ஸ் அண்ட் ஃபைபர்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெடினால் (கே.ஃபி) பரிசோதனை செய்யப்பட்ட பாலியெஸ்டர் துணியாகும். இதோ ஒரு பரிசோதனை, உராய்வைத் தாங்கும் சோதனை.



இந்தச் சோதனை இருதுணைகளில் செய்யப்படுகிறது. பலமணிநேரம் சைக்கிளில் பயணம் செய்த பிறகும் உங்கள் காற்சட்டையின் பின்பக்கம் சிறிதும் தேயாமல் இருக்கவேண்டும்.

கே.ஃபியின் ஆராய்ச்சிக் கூடத்தில், துணியின் மாதிரி, எங்களுடைய உராய்வுச் சோதனை செய்யும் இயந்திரத்தில் பரிசோதிக்கப்படுகிறது. அது முன்னும் பின்னும் விசேஷமான பிளேடினால் தேய்த்தழுத்தப்படுகிறது. அது பட்டை பட்டையாகத் தோன்றினால் தரத்தில் குறைந்த துணிக்கு அதுவே அடையாளம். ஆகவே அந்தத் துணிக்கு 'டெரீன்' ட்ரேட்மார்க்கை வழங்கமாட்டோம்.

'டெரீன்' துணிகளை வாங்கும் போது, உங்கள் பணத்தின் முழு மதிப்பையும் பெறுகிறீர்கள்.



உங்கள் நன்மைக்காகவே, துணிகள் மீது 'டெரீன்' ட்ரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

காரணம்: நீங்கள் எங்கள் துணிகளையே வாங்குகிறீர்கள் என்பதை உறுதி செய்ய நாங்கள் அயராது கண்டிப்புச் சோதனை செய்கிறோம். [illegible] சோதனையை மட்டும் நாங்கள் செய்வதில்லை. மடிப்புக் கலையாம லிருக்கிறதா, சுருங்காமலிருக்கிறதா, நிறம் போகாமலிருக்கிறதா என்பதற்கு நாங்கள் பல பரிசோதனைகளை நடத்துகிறோம். இதில் [illegible] சோதனையில் தேறும் [illegible] துணிகளுக்கு 'டெரீன்' [illegible] வழங்குகிறோம்.

எனினும், 'டெரீன்' ட்ரேட்மார்க்கை தொங்கவிடப்பட்ட சில துணிகளே தாங்கிவர வேண்டும் என்று கருதுகிறோம். 'டெரீன்' இழையின் துணிகளை தகுதியும் சிரத்தை யுள்ள சில ஆலைகளே தயாரிக்கின்றன. நாகரீகத்திற்குப் புது உருவம் தரும் அந்த ஆலைகள் டிசைன்களிலும் கலர்களிலும் புதுப்புது பாணிகளை உங்களுக்கு வழங்கு கின்றன. அதைப் போலவே முக்கியமாய் வாய்ந்தது, அந்த ஆலைகளின் துணிகள் எங்களுடைய தரத்தின் கடுமையான பரிசோ தனைகளில் வெற்றி பெற்றிருக்கின்றன.

TERENE

CHAITRA-CAFI-457 TAM


பாடுவோம் பாப் மியூசிக்!
கதை: தமயந்தி / சாருகேசி
சித்திரம்: ராஜு..
5
தொழிலதிபர் எஸ். எஸ். லிங்கத்தின் வீடு.
யார் வந்திருக்கிறது! மிஸ்டர் மார்க்க சகாயமா? போன் பண்ணியிருந்தால் நானே வந்திருப்பேனே!
வா.. வா.. நீங்கள் அங்கே வந்தால் என்ன, நான் இங்கே வந்தால் என்ன...
உட்காருங்கள். விளம்பரங்கள் எல்லாம் ரெடி. செக்கோடு எடுத்துக் கொண்டு போகலாம் நீங்கள்.
வெரி குட். நான் வந்ததே அதற்குத்தான்.
டேய் பாலாஜி, அந்தச் சித்தாரைக் கொஞ்சம் நிம்மதியாக விட்டு விட்டு இங்கே வாயேன்.
என்னப்பா?
மீட் மிஸ்டர் மார்க்கசகாயம், கந்தர்வ கான சபா காரியதரிசி. மிஸ்டர் மார்க், இது என் பிள்ளை பாலாஜி.
ஹலோ பாலாஜி, ஹவ் டு யு டு?
யாரைப் பார்த்தாலே தெரிகிறது...
சார் உங்கள் பிள்ளை புத்திசாலி. நான் தான் கந்தர்வ கான சபா செக்ரடரி என்று பார்த்தவுடன் அவருக்குத் தெரிந்து விட்டது.
ஹி... ஹி...


பாலாஜி, அந்த விளம்பர மாட்டர், பிளாக்குகள் எல்லாம் என் மேசை மேல் ஒரு பெரிய கவரில் போட்டு வைத்திருக்கிறேன். கொண்டு வா. போ.
மேசை மேலேயா கீழேயா?
என்னடா இது! மேசை மேலேடா பாலாஜி.
அப்பா, ஐ மீன் மேசை தரை மேல் தானே இருக்கிறது? கீழே தரை. மேலே மேசை.
ஆகா, என்ன அலசுகிற அறிவு! என்ன பண்ணுகிறான் சார் உங்க பிள்ளை? தத்துவம் படிக்கிறானா? டாக்டரேட் பண்ணுறானா?
இவன் அளவுக்குத் தத்துவம் சொல்லித் தர இந்தப் பல்கலைக் கழகத்தில் யாருமே இல்லே தெரியுமோ? ஒரு தடவை பாருங்கோ, பெர்ட்ராண்ட் ரஸல் மெட்ராஸுக்கு வந்தப்போ....
பெர்ட்ராண்ட் ரஸலாவது மைசூர் ரஸமாவது! எப்போது அவர் மெட்ராஸ் வந்தார்?....
என்ன! ரஸலே அப்படியே மடக்கிப் பிட்டான் இவன் மடக்கி. எமகாதகப் பயல்.. மேசைன்னு நான் சொல்லப் படாது.... ஹி ஹி...

தொடரும்





1. சோல்ஜெனிட்சின்.
2. போரிஸ் பேஸ்டர்நாக்.

ஆனால் சோல்ஜெனிட்சினுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டபோது சோவியத் சஞ்சிகைகள் அவரை மிகத் தரக் குறைவாகத் தாக்கின.

ஒரு நல்லாட்சியில் பல கருத்துக்களுக்கும் இடம் அளிக்க வேண்டும். ''உன் கருத்தை நான் ஏற்க முடியாவிட்டாலும் அதைச் சொல்லுவதற்காக உனக்கு உள்ள உரிமைக்காக நான் உயிருள்ளவரை போராடுவேன்'' என்றான் ஓர் அறிஞன். கம்யூனிஸ நாட்டில் இதை எதிர்பார்க்க முடியாது.

வேலூர் (சேலம்)
22-7-76 ஆர். புருஷோத்தமன்

வட்டமேஜை:

கருத்துச் சுதந்திரம் தேசத் துரோகமா?

திரு நா. பார்த்தசாரதி அவர்களின் 'புது உலகம் கண்டேன்' என்ற அருமையான பயணக் கட்டுரையை ஆர்வத்துடன் படிக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். கூடியவரை ஒரு தலைப் பட்சப் பாராட்டைத் தவிர்த்தால் இந்தப் பயணக்கட்டுரை மேலும் சிறப்பாக அமையும். கம்யூனிஸத்தின் நடைமுறைகளில் நம்பிக்கை இழந்த போரிஸ் பேஸ்டர் நாக் டாக்டர் ஷிவாகோ என்ற நவீனத்தை எழுதினார். உள்நாட்டு நிறுவனம் அதை வெளியிட மறுக்கவே அது வெளி நாட்டில் பிரசுரமானது. அதற்கு நோபல் பரிசும் கிட்டியது. ஆனால் அவர் அதை மறுத்து விட்டார். நாடு கடத்தப்படாதிருக்க நோபல் பரிசையும் மறுக்க அவரது நாட்டுப் பற்று புரிகிறதல்லவா? நாட்டுப்பற்றுக் கொண்ட அவர் ஏன் தம் நாட்டுக் கொள்கைக்கு எதிராக எழுத வேண்டும்?

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்

என்றானே வள்ளுவன், அந்த நோக்கில்தான்.

நெஞ்சை அள்ளும் வருணனைகள் கொண்டிருக்கும் அந்த நாலில் கம்யூனிஸ எதிர்ப்பு இழையோடிருந்த ஒரே காரணத்தால் அது சோவியத் நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் ஜான் ஸ்டெயின்பெக்கின் அப்பட்டமான முதலாளித்துவ எதிர்ப்பு நூலான The grapes of wrathம் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டிருக்க வேண்டுமே? ஆனால் தடை செய்யப்படவில்லை. 1962ல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டபோது அமெரிக்கா கூக்குரல் எழுப்பவில்லை; மகிழ்ந்தது.

பிரதமர் கட்டிக் காட்டியுள்ள சில 'தவறு'கள் ஒரு துணுக்காகப் பிரசுரமாகியுள்ளன. டாக்டர்கள், வக்கீல்கள், பத்திரிகையாளர்கள் அதில் இடம் பெற்றுள்ளனர். அந்தச் சுவையான பட்டியலில் இவர்களையும் சேர்க்கலாமே :

வியாபாரிகள் தங்கள் தவறுகளை அதிக விலைக்கு விற்கிறார்கள்.

மாணவர்கள் தங்கள் தவறுகளைக் 'காப்பி' யடிக்கிறார்கள்.

திரைப்படத் துறையினர் தங்கள் தவறுகளுக்கு வண்ணம் தீட்டி அரங்கேற்றுகிறார்கள்.

அலுவலக ஊழியர்கள் தங்கள் தவறுகளைக் ('பைல்'களில்) கட்டி வைக்கிறார்கள்.

அரசியல்வாதிகளோ தங்கள் தவறுகளை மேடைகளில் முழுங்குகிறார்கள்.

சென்னை-14
27-7-76 கெ.க. சங்கரன்

இன்று 'கோகுல'த்தைப் படித்தேன். ராஜாஜி தாத்தா பற்றிக் குழந்தைகளுக்குக் 'கோகுலம்' ஆசிரியர் எழுதியதைப் படித்த கிழவனுக்கு எனக்குக் கண்ணீர் மல்கியது.

அந்த வேண்டுகோள் குழந்தைகளுக்கு மட்டும்தானா? ராஜாஜி அவர்களுக்கு நாம் எல்லாருமே குழந்தைகள்தானே!

ஆகவே, கல்கி மூலம் வயதானவர்களும் ராஜாஜிக்குக் காணிக்கை செலுத்தும் வாய்ப்பை அளிப்பீர்களென நம்புகிறேன்.

இராணிப்பேட்டை
20-7-76 கே. ஆர். கலியாணராமன்

ராஜாஜி நினைவுக்கு அஞ்சலி செலுத்த வயதானவர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படும். கல்கி ஆகஸ்டு 15உ இதழில் இந்த வேண்டுகோள் வந்தவுடன் தங்கள் காணிக்கையை அனுப்பி வைக்கவும். ஆர்



திருமதி சியாமளா ராஜகோபால்

(திருச்சி)

தோற்றம் : 4-1-1915 — மறைவு : 4-8-1968

" தெய்வந் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை "

குட்மார்னிங் டாக்டர்:

வலியில்லாத வீக்கம், வளரும் மச்சம்!

நாற்பது வயது மதிக்கத்தக்க அப்பெண்மணி என் எதிரேயிருந்த நாற்காலியில் அமர்ந்து ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஆகியும் தன் உடல் நிலையை வாய்விட்டுச் சொல்லவே மிகவும் கூச்சப்பட்டாள். நான் மிகவும் வற்புறுத்திய பிறகு, ''மார்பில் வீக்கம் கண்டிருக்கிறது. வலி ஏதும் இல்லை. போன மாதத்தை விட இந்த மாதம் வீக்கம் பெரிதாகியுள்ளது'' என்றாள் சுருக்கமாக.

இப்படி மிகவும் கூச்சப்படும் பெண்கள் பலர் இருக்கிறார்கள். தங்கள் உடல் உபாதை களை மூடி மறைத்தே நோயை வளர்த்துக் கொண்டு விடுகிறார்கள், பாவம்!

உடனேயே அந்தப் பெண்மணியின் மார்பகத்தை 'எக்ஸ்ரே' படம் எடுக்க ஏற்பாடு செய்தேன். மார்பகத்திலிருந்து சிறிதளவு தசை எடுத்துச் சோதனை (Biopsy) செய்து கொண்டு வரும்படி கூறிச் சீட்டும் எழுதிக் கொடுத்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்தப் பெண்மணி பரிசோதனையின் முடிவுடன் வந்தாள். என் ஊகம் சரியாகத்தான் இருந்தது.

'மருந்து சாப்பிட வேண்டும்; ஊசி போட்டுக் கொள்ளவும் வேண்டும். அது தவிர, 'ஆழ்ந்த எக்ஸ்ரே' (Deep Xray) சிகிச்சை செய்து கொள்ளவும் வேண்டும்' என்று நான் கூறியதும் அப்பெண்மணி பயந்து விட்டாள். புற்றுநோய் என்று நான் கூறக் கேட்டதும் அதிர்ச்சியே அடைந்தாள்.

''இது நோயின் ஆரம்ப நிலைதான். ஆகையால் குணம் ஆகிவிடும்'' என்று சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தேன்.

''ஆழ்ந்த எக்ஸ்ரே சிகிச்சைக்கு நோய் கட்டுப்படாவிட்டால்....?''

''காமா கதிர் (Gama Rays) சிகிச்சை செய்து பார்க்கலாம். இதற்கு 'கோபால்ட்' (Cobalt Therapy) சிகிச்சை என்றும் பெயர் உண்டு. அதன் பிறகும் நோய் மறையவில்லை என்றால் அறுவைச் சிகிச்சையின் மூலம் மார்பகத்தை நீக்கிவிடும்படி நேரிடலாம். புற்றுநோயின் 'செல்' (cell)கள் அனைத்தையும் உடலிலிருந்து வெளிப்படுத்தி விட்டால் அதன் பின்னர் நோயாளி சாதாரணமாக வாழ்க்கை நடத்தலாம். நுரையீரல் போன்ற உடலின் உட்புற உறுப்புக்களில் புற்றுநோய் கண்டால், 'செல்'கள் முழுவதையும் களைவது எளிதன்று. வெளிப்புற உறுப்புக்களைப் புற்றுநோய் பாதிக்கும்போது அத்தனை ஆபத்து இல்லை.''

''எக்ஸ்ரே சிகிச்சையைவிட காமா கதிர் சிகிச்சை சிறந்ததா?''

''சிறந்தது என்பதல்ல. எக்ஸ்ரேயைவிட காமா கதிர்கள் ஆழ்ந்து பாயும் தன்மை உடையவை.''

''ஒரு பெண்மணியின் மார்பகத்தில் ஏற்பட்ட வீக்கம் புற்றுநோய் காரணமாக ஏற்பட்டது என்கிறீர்களே, வலி இராதா?''

''வலி இருப்பதில்லை; அதனால்தான் பலர் அலட்சியம் செய்து விடுகின்றனர். கன்னத்தின் உட்புறம் — பெரும்பாலும் புகையிலை போடுகிறவர்களுக்கு — புற்றுநோய் வரும். அப்பொழுதுகூடத் துவக்கத்தில் வலி இராது; இரத்தம் வடியாது.''

''மக்கள் எந்தவகையில் முன்ஜாக்கிரதையாக இருக்க முடியும்?''

''பிறக்கும் போதே உடலில் இருக்கும் மச்சம் திடீரென்று வளர்ந்து பெரிதாகத் தொடங்கினால் உடனே மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும். பெண்மணிகளுக்கு மாதவிடாய் காலங்கள் தவிர மற்றக் காலங்களில் வித்தியாசமான திரவப் போக்கு ஏதாகிலும் இருந்தால் அதனை அலட்சியம் செய்தல் கூடாது. நாள்பட்ட புண், வலி இல்லாத ஆனால் வளரும் கட்டி இவை உடலில் தென்பட்டாலும் தாமதம் செய்யாமல் மருத்துவரிடம் செல்ல வேண்டும். புகை பிடித்தல், புகையிலை போடுதல் இவற்றைத் தவிர்ப்பது நலம். சிலருக்கு இனம் புரியாத காய்ச்சல் விட்டுவிட்டு வரக்கூடும். வயிற்றில் புற்றுநோய் இருந்தால் பசி எடுக்காமல் இருக்கும். இம்மாதிரி அறிகுறிகளை உணர்ந்து உடனடியாக உரிய சிகிச்சை பெறுதல் நல்லது.''

டாக்டர் பி. பியூலா கூறக் கேட்டு
எழுதியவர்: ஆர். பி.

படம்: புற்று நோய் மற்றும் அழற்சியைக் குணப்படுத்த கோபால்ட் கதிர்களைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் செலுத்த 'கம்ப்யூட்டர்' சாதனத்தை மேற்கு ஜெர்மன் மருத்துவ நிபுணர்கள் பயன்படுத்துகிறார்கள்! எந்த இடத்தில் கதிர் வீச்சு செலுத்த வேண்டும் என்பதனைப் பட வடிவிலும் கம்ப்யூட்டர் தெரிவித்து விடும்.





சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 20

புதிய வம்சம் உதயம்

அரண்மனை கைப்பற்றப்பட்டபோது ஆனந்தமயமான ஓர் இரவைச் சந்தித்த பூஜியானா, அதிர்ச்சி கலந்த மற்றோர் இரவைச் சந்தித்தாள். அத்தோடு அவளது ஆனந்த வாழ்க்கை மயங்கிக் கிடந்தது.

கார்காலத்துப் புஷ்பங்கள் கோடை காலத்தைச் சந்தித்தது போல், காய்ந்து கிடந்தன அவளது அங்கங்கள்.

அரசியல் மனிதனைத் துணைவனாகக் கொண்ட பேதைக்கு நீடித்த நிம்மதி என்பது ஏது?

அலை அலையாய்ச் சுருண்டு கிடக்கும் அவளது அழகிய கூந்தல் காற்றில் பறந்தபடி காதலனைத் தேடிற்று.

ஆற்றங்கரையில் ஒதுங்கிய நுரை போல் அழகு பொலியும் பால் நிறக் கன்னங்கள் கண்ணீர்க் கோடுகளால் தாலாட்டப் பெற்றன.

கருநீலம் பாய்ந்த குவளை மலர் விழிகள் சித்திரை மேகங்கள் போல் வெளிறத் தொடங்கின.

அந்தியில் வருவான் காதலன் என்று சந்திர ஒளி மின்னும் மேனிக்குச் சந்தன வண்ண ஆடை கட்டி, மந்திரம் பொழியும் மனநிலையோடு முன்னொரு காலும் பின்னொரு காலும் வைக்கும் பூஜியானா தன்னிலைவற்றவளாய்த் தடுமாறிக் கிடந்தாள்.

தட்டிலே பழங்களை வைப்பதும் அவை கெட்டுப் போனதும் கொட்டிவிடுவதுமாய்ச் சஞ்சல நதியில் நீராடினாள்.

இளம் பருவத்து வீணை மீட்டப்படும் வரை இசையை அறியாது. ஒருதரம் மீட்டி ஸ்வரங்களைக் கூட்டியவன், மறுதரம் மீட்ட மறந்து விட்டானானால்,



அந்த ஸ்வரங்களே வீணையின் பகையாகிவிடுகின்றன.

இன்ப நினைவுகள், அதைத் தொடர்ந்து வரும் துன்பத் தனிமை—கண்ணீர் வந்தும் வாராமலும் பெண்ணை அலைக்கழிக்கும்.

கொல்லர் உலைக் களத்துப் பெரு நெருப்புப் போல் அவளது மூச்சே அவளது இதழ்களைச் சுட்டெரித்தது.

அவ்வப்போது, 'குளிக்கவில்லையா மகளே!' என்று தந்தை கேட்டால் அந்த மேனியின் சுடு நெருப்பைத் தணிக்க அவள் நீராடுவது வழக்கம்.

கண்ணாடியின் முன்னிருந்து பொன் நகைகளை அணியும்போது கழுத்து நகையைக் கையில் வைத்துக் கொண்டு ''இதை எங்கு அணிவது?'' என்று மயங்குவாள்.

ஓர் இந்துவின் மனைவியாகி விட்டதால் அவள் குங்குமம் வாங்கி வைத்திருந்தாள்.

சேர மங்கையர் திருமுகத்துக்கே குங்குமம் தெய்விக வடிவம் கொடுக்குமென்றால், பூத மங்கையின் பொன் முகத்துக்குக் காலைச் சூரியனின் வடிவளிக்காதா?

அவள் திலகமிடப் பழகினாள். ஆனால் அதைக் காண வேண்டியவனைக் காணாது ஏங்கினாள்.

செம்பருத்திப் பூப்போன்ற உள்ளங்கைகளைக் கன்னங்களில் வைத்து, முழங்கைகளால் பளிங்கு மேடையில் முட்டுக் கொடுத்துச் சிந்தனை வானில் பறக்கும் அந்தச் சிட்டுக் குருவிக்கு எந்த நேரத்தில் தன் தனிமை தீரும் என்பது தெரியாது.

அரண்மனைச் செய்திகள் அடிக்கடி வரும்; அவை வெறும் அரசியல் செய்திகளே! அந்தச் செய்திகளோடு தன் நாயகனுக்குத் தொடர்பிருப்பதால் மட்டுமே அவற்றில் அவளுக்கு அக்கறை.

'மகுடத்தைக் காணவில்லை என்றால், நானில்லையா அவரை அலங்கரிக்க' என்று எண்ணுவாளே தவிர, 'ஐயோ! மண்ணிழந்தானே நம் மன்னவன்' என்று எண்ணுவதில்லை.

பெண்ணாசையை மிஞ்சிய மண்ணாசையில் ரவிவர்மன் பேயாய் அலைய, தன்னாசையைத் தனக்குள் அடக்கியபடி, பூஜியானா தான் வணங்கும் தெய்வங்களோடு, தன் நாயகன் வணங்கும் தெய்வங்களையும் தியானிப்பாள்.

'பழைய ஏற்பாடு'களிலேயே மதி மயங்கிக் கிடந்த அவளுக்கு அரசியலில் தோன்றிய 'புதிய ஏற்பாடு'கள் மகிழ்ச்சியை அளிக்கவில்லை. ஆனால் அந்த இரவு — உலக வாழ்க்கையில் மையமாகத் திகழும் உடல் உறவை அறிந்து கொண்ட அந்த இரவு — காட்டு வாழ்க்கை நடத்தினாலும் கணவனோடு நடத்த வேண்டும் என்ற ஆசையையே தூண்டிற்று.

இரவுகள் வந்தன; சென்றன. எது இரவு எது பகல் என்று எவராவது சொல்லித்தான் அவள் அறிய வேண்டியிருந்தது.

உணவு நேரங்கள் தந்தையால் நினைவு படுத்தப்பட்டன. அவளுக்கு உள்ளப் பசி இருந்ததே தவிர, வயிற்றுப் பசி புரியவில்லை. .

நிலாக் காலத்து சாம்ராஜ்யத்தைச் சந்தியா காலத்தில் முடித்துக் கொள்ளும் அல்லி மலராகவும், சந்தியா காலத்து சாம்ராஜ்யத்தை · அந்தி நேரத்தில் முடித்துக் கொள்ளும் தாமரை மலராகவும் அவள் மாறி மாறி விளங்கினாள்.


குதிரை களைத்துப் போய், வீரன் இறங்கி விட்டால், போரின் முடிவு அவனுக்கே தெரியும். வீரன் களைத்துப் போய்க் குதிரையில் இருந்தாலும் போரின் முடிவு குதிரைக்கும் தெரியும்.

பூஜியானா இறங்கிச் சென்ற வீரனுக்காக ஏங்கி நிற்கும் புரவி.

இடைரென்று நள்ளிரவிலே அவள் குளிப்பாள்; தன் தனிமையைத் தானே தணித்துக் கொள்வதற்காக மெல்லிய குரலில் பாடுவாள்.

ஊர் அறிந்தது அவள் கதை. தான் பட்டத்து ராணி அல்ல என்பதும் அவள் அறிந்ததே. பட்டத்து ராணியின்மீது இவ்வளவு பந்தம் இருக்காது என்பதும் அவளுக்குத் தெரிந்ததே.

'அந்தப்புரத்து ஆசைநாயகி'



என்று ஊரார் அழைத்தாலும், அந்த வார்த்தைகளிலும் அவள் அமங்கலத்தைக் காணவில்லை.

அவளது ஆசை அல்லும் பகலும் அறுபது நாழிகையும் ரவிவர்மன் தன் அருகிலேயே இருக்க வேண்டும் என்பதே.

தளர்ந்து கிடந்த இடையைத் தன் கைகளாலேயே தழுவியபடி, மலர்ந்து கிடந்த அந்த மகிழம்பூ, வாசம் அறியவும், வண்ணத் தேன் உண்ணவும் தன் வண்டு வரவில்லையே என்று கலங்கிற்றே தவிர, தன் வாழ்க்கையில் ஒரு புகழை எதிர்பார்க்கவில்லை.

ஆடவர் நெஞ்சம் அவ்வப்போது மலரும்; ஆரணங்கின் நெஞ்சமோ மலர்ந்தால் மலர்ந்ததுதான்.

நாடு எவர் கையில் இருந்தால் என்ன? நாயகன் நாயகன் என்றே வாடிற்று அவள் உள்ளம்.

கோடுகளை ஓவியங்களாக்கி விட்டு, அவற்றைக் கோட்டையில் மாட்ட மறந்து போனான் ரவிவர்மன்.

ஓவியம் அழுதது. அந்த ஓவியத்துக்கே புரிந்தது.

அவள் மனத்தின் ராகங்களைக் காவியமாக்கி இருந்தால், காலங்களால் அழியாத கற்பனைப் பெருக்கில் அது மிதந்திருக்கும்.

இத்தனைக்கும் இந்தத் துயரங்கள் நாட்கணக்கிலேதான் போய்க்கொண்டிருந்தன.

இவையே மாதங்களாகி ஆண்டுகளானால் பூஜியானுவின் சடலத்தை எரிக்க அவள் மூச்சே போதும்.


அவளது மனக் கோவிலில் அடிக்கடி கற்பூரம் ஏற்றப்பட்டது; ஒவ்வொரு கற்பூரமும் தனக்கொரு காலத்தை நிர்ணயித்துக் கொண்டு அணைந்துவிட்டது. ஆனாலும் புதிய புதிய கற்பூரங்கள் ஏற்றப்பட்டுக் கொண்டே இருந்தன.

அவளோடு பாடித் திரிந்த பறவைகள் பழகிக் களித்த பூதப் பெண்கள்—வாடிக் கிடந்த அவள் முகத்துக்கு வார்த்தைகளால் மெருகு போட முயன்றனர்.

உலகில் வார்த்தைகளுக்குக் கட்டுப்படாத ஒரே மயக்கம் அதுதானே! ஒரே பருவம் இதுதானே!

அவள் நட்சத்திரங்களோடு பேசினாள்.

சாளரத்துத் திரைச் சீலையைத் தாலாட்ட வரும் காற்றோடு பேசினாள்.



அவளோடு பேசுவதற்கு அவன் வர வில்லை என்றாலும், அவனது ரத்தம் வந்திருந்தது. ஆம்; யூஜியானா கரு வுற்றாள். யோகோபாவுக்கு முதலில் அது தெரியாது.

பெண்மை கருவுறத் தொடங்கினால் தூக்கம் அற்புதமாக வரும்.

மகள் தூங்கத் தொடங்கியபோதே அவள் கருவுற்றிருப்பதைத் தந்தை அறிந்தார்.

அத்தியாயம் 21

திருவிதாங்கோடு உதயம்

சேர நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது.

நீண்ட காலமாகவே, 'சேரலம்' என்றும், 'கேரளம்' என்றும் அழைக் கப்பட்ட மலைநாட்டில் ஒரு புதிய நாடு உதயமாகப் போகிறது.

விக்கிரம சோழன் செய்து வைத்த உடன்படிக்கையின்படி 'திருவஞ்சைக் களம்' என்ற வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பாஸ்கர ரவிவர்மன் மூன்றாம் சேரமானாக ஆள்வதென்றும், திருவி தாங்கோட்டைத் தலைநகராகக்கொண்டு 'வேணா'ட்டை மார்த்தாண்டவர்மன் ஆள்வதென்றும் முடிவாயிற்று.

இது நடந்தது கி.பி. 798ல்.

நாராயண நம்பூதிரி முதலில் இதற் குச் சம்மதிக்கவில்லை. 'திருவஞ்சைக் களத்துக்கு ரவிவர்மன் மன்னனாவதை நம்பூதிரிகள் சபையைக் கலந்து கொள் ளாமல் ஒப்புக்கொள்ள முடியாது' என்று வாதிட்டார்.

மார்த்தாண்ட வர்மனுக்குத் திருவி தாங்கோட்டையும், ரவிவர்மனுக்குத் திருவஞ்சைக் களத்தையும் கொடுப்ப தென்று விக்கிரமசோழன் தான் செய்த முடிவுக்கான காரணத்தை அவருக்கு விளக்கினான்.

கொங்கு நாட்டில் விவஸ்தையற் றிருந்த கவுடதேவன் அப்போது கால மாகி விட்டிருந்ததால், அவனது குமா ரன் மல்ல தேவன் பலம் பொருந்திய மன்னனாகக் கொங்கு மண்டலத்துக்கு முடிசூட்டிக் கொண்டிருந்தான்.

அதுபோலவே ரவிவர்மனால் விடு விக்கப்பட்ட பாண்டிய நாட்டில் வர குண பாண்டியன் கையும் மேலோங்கி இருந்தது.

இந்த இரண்டு நாடுகளும் உண்மை யிலேயே படையெடுத்து வருமானால், அதை எதிர்த்து நிற்கும் சக்தி மார்த் தாண்டவர்மனுக்கு இல்லை.

ஆகவே, சேர நாட்டின் வாரிசு பாத் தியதை யாருக்கு என்பதைவிட, பாது காப்புக்கு யார் தகுதியானவர் என்ப தையே விக்கிரம சோழன் தெளிவாக விளக்கினான். தன் உயிருள்ளவரையில் சேரர், சோழர் மோதல் வராது என்று உறுதியளித்தான்.

விவேகம் நிறைந்த நாராயண நம்பூ திரியும் இதை உணர்ந்தவர்தான். ஆயி னும் அவர் உள்ளத்தில் காயம் ஆறிய பின்னும் ஒருவடு நின்றுகொண்டிருந்தது.

இரண்டு விஷயங்களை அவர் பரி சீலித்தார். ஒன்று, ரவிவர்மனுக்குக் கீழ் தாம் பணி புரிவதா என்பது; இரண்டு மார்த்தாண்ட வர்மனை விட்டு விட்டுத் தாம் இயங்குவதா என்பது.

ரவிவர்மன் நாராயண நம்பூதிரியின் கையைப் பிடித்துக் கொண்டு, "தம் பிரான் சுவாமி, திருவஞ்சைக் களத் துக்கு நான் மன்னனானால் நீங்கள் முடி சூட்டிக் கொண்டிருப்பதாகப் பொருளே தவிர, நான் அரசுரிமை கொண்டுவிட்ட தாகப் பொருளல்ல. மார்த்தாண்ட வர்மனுக்கு வஞ்சியைக் கொடுத்து விட்டு, திருவிதாங்கோட்டை ஏற்றுக் கொள்ள நான் தயார். ஆனால், பல்வேறு இனத்தவர் குடியேறி வாழும் வஞ்சியை நம் இருவரது கூட்டுறவே காப்பாற்ற முடியும். பாண்டிய நாடும், கொங்கு நாடும் மட்டுமே நாம் எதிர் பார்க்கும் பகை நாடுகளல்ல. அரபிக் கடல் கடந்தும் பகை வரக் கூடும். அவற்றைச் சமாளிப்பதற்காகவும் ஆழ் வார் பெருமகன் கட்டிக் காத்த வஞ் சியை அணுக முடியாத மண்டல மாக்கவுமே நான் இந்த மகுடத்தை வேண்டுகிறேன். இவை உங்கள் கைக ளல்ல; கால்கள் என்று எண்ணிக்கொள் ளுங்கள், பழைய ரவிவர்மன் மறைந்து விட்டான். இரண்டாம் சேரமான் பெருமாளின் — குலசேகர ஆழ்வாரின் தோன்றா நிழலான மூன்றாம் சேரமான் பெருமாளையே நீங்கள் காண்கிறீர்கள். நடக்கப் போவது பாகப் பிரிவினையல்ல; திருவஞ்சைக் களத்தைக் காப்பாற்று வதற்கான யாகம். ராஜ தந்திரத்தில் நான் செய்த தவறுகளுக்கு நானே பரி காரம் தேடவே, இதை நான் யாசிக் கிறேன். பாண்டி நாட்டையும் கொங்கு நாட்டையும் சேர நாட்டின் பிடியில் இருந்து விடுவித்தவன் நானே. இனி அவற்றைக் கண்காணிக்கும் சக்தி வஞ் சிக்கு வேண்டும். அதைச் சாதிக்கும் சக்தி எனக்குண்டு என்பதை அறிவீர்கள். என்னை ஊக்குவிக்கக் கூடிய சகல சக்தி யும் உங்களுக்குண்டு என்பதை நானறி வேன். மனம் திறந்து பேசுவதானால் இதுவரை எனக்குப் பிள்ளைப் பேறில்லை

வஞ்சியின் நான்காவது சேரமானாக மார்த்தாண்ட வர்மனே, அவனது குலத்தோன்றலோ தான் வரப்போகிறார்கள். இந்த இடைக்கால ஏற்பாட்டைத் தடை செய்யாமல் ஒப்புக்கொள்ள வேண்டுகிறேன்'' என்றான்.

நாராயண நம்பூதிரிக்கும் அது சரியாகவே பட்டது. ஆயினும் இனம் தெரியாத உணர்ச்சி அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. ஆனால், அந்த உணர்ச்சியை உடனடியாக மாற்றிக்கொள்ள அந்த ஞானியால் முடிந்தது.

இதைப் பற்றி மார்த்தாண்ட வர்மனிடம் பேசலாம் என்று சென்றபோது அங்கே, ''இதில் இரண்டாவது யோசனைக்கே இடமில்லை'' என்று விக்கிரம சோழன் சொன்னது அவர் காதில் விழுந்தது.

அதனால் விவரமாகப் பேச வந்த நாராயண நம்பூதிரிக்கு நிறைய வார்த்தைகள் தேவைப்படவில்லை.

''தம்பிரான் சுவாமியின் சம்மதம்...'' என்று இழுத்தான், மார்த்தாண்ட வர்மன்.

''கொஞ்ச காலத்துக்கு இது சரி என்றே படுகிறது'' என்றார், நாராயண நம்பூதிரி.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றான் மார்த்தாண்ட வர்மன்.

''என் வேலை முடிந்தது'' என்றான் விக்கிரம சோழன் மகிழ்ச்சியோடு.

எப்படி எப்படியோ வந்திருந்த அவர்கள் அனைவரையும் அழகிய ரதங்களில் பரிவாரங்களோடு அனுப்பி வைத்தான் விக்கிரம சோழன்.

அவர்களது பிரிவில் சோழமா தேவி சிந்திய கண்ணீர், ''காவேரி நதிக்கு இது ஆடி மாதம்'' என்பது போலிருந்தது.

'திருவஞ்சைக் களம்' என்ற வஞ்சி கோலாகலமாக அவர்களை வரவேற்றது.

ஆட்கள் வரும் முன்னாலே செய்தி வரும் வேகம் அந்நாளிலும் இருந்தது போலும்!

கோழியர்கோன் செய்து வைத்த உடன்படிக்கை கொடுங்களூர் பகவதி அம்மனாலேயே அங்கீகரிக்கப்பட்டது போல் தோன்றிற்று.

நால்வகைப் படைகளும் அவர்களை எதிர் கொண்டு அழைத்தன.

அங்கதன் புது மாப்பிள்ளை போல் முன்னணியில் நின்றான்.

எல்லையில் இருந்து அனைவரும் அரண்மனைக்குத்தான் செல்வார்கள் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ரவி வர்மனின் ரதம் எரிந்துபோன நம்பூதிரிகள் சபைப் பக்கம் திரும்பி மற்ற ரதங்களுக்கு வழிகாட்டியது ஆச்சரியமாக இருந்தது.

கேரளத்துக் காற்றில் தனது சாம்பலைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி

விட்டபடி, இடுகாடு போல் கிடந்த அந்த இடத்தில் ரவிவர்மன் ரதத்தை விட்டு இறங்கினான்.

இடிபாடுகளுக்கு நடுவே சென்று அந்தச் சாம்பலின் மீது இரண்டு கரங்களையும் வைத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

திடீரென்று, ''கேசவா, ஜகந்நாதா, சங்கரா'' என்ற நம்பூதிரியின் அலறல் கேட்டது.

அவர் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தது.

நூற்றுக் கணக்கானோர் ஒன்றாக எரிந்து போன இடத்தில், ''இது கேசவ நம்பூதிரியின் சாம்பல்; இது ஜகந்நாத நம்பூதிரியின் சாம்பல்; இது சங்கரன் நம்பூதிரியின் சாம்பல்'' என்று எப்படிக் கண்டு பிடிப்பது?

எல்லோருமே அந்தச் சாம்பலைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார்கள்.

அந்தத் துன்பத்தில் மீண்டும் ஓர் ஒற்றுமை.

அவர்கள் அரண்மனைக்கு வந்து சேர்ந்தபோது பந்த பாசங்களில் மிதந்தார்கள்.

திடீரென்று ரவிவர்மனின் கண்களில் கண்ணீர் வந்தது.

எல்லோரும் அவனைக் கூர்ந்து கவனித்தார்கள்.

''பெருமாக் கோதையாரும், செங்கோற்பொறையனும், சேரமான் பெருமாளும் அணிந்து பெருமை அளித்த மணிமகுடம் பறந்து போன பிற்பாடு நாம் அரண்மனையில் கூடியுள்ளோம். தம்பிரான் சுவாமி, இப்போது இரண்டு மகுடங்களுக்கு நீங்கள் பொன் தட்டிக் கொடுக்க வேண்டும்'' என்றான், ரவிவர்மன்.

என்ன நினைத்தோ மார்த்தாண்டவர்மன் மகுடம் வைக்கும் பெட்டகத்தைத் திறந்தான். அங்கே அந்த மணிமகுடம் அப்படியே இருந்தது.

ரவிவர்மன் மெய் சிலிர்த்தது.

''தாயே, பகவதி!'' என்று ஓங்கி ஒலித்தான்.

அதே நேரத்தில் கோவில் மணியும் ஓங்கி ஒலித்தது.

திடீரென்று பகவதி அம்மன் கோவில் பூஜை செய்பவர் உள்ளே ஓடி வந்தார். ''மன்னர் பெருமானே!'' என்று அலறினார்.

ரவிவர்மனும் மார்த்தாண்டவர்மனும் ஏக காலத்தில் ''என்ன? என்ன?'' என்றார்கள்.

''பகவதி அம்மன் திருமுகத்தில் மறுபடியும் சிவப்பு மூக்குத்தி இருக்கிறது!'' என்றார், அவர். (தொடரும்)

□ சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற குமாரி ராஜஸ்ரீ சங்கரனின் நாட்டிய நிகழ்ச்சி கவர்ச்சியும் தரமும் கொண்டு சோபித்தது. வர்ணமாக எடுத்து ஆடப்பட்ட 'பாவயாமி'யில் நவரசங்களையும் காட்டியது அற்புதமாயிருந்தது. குரு சுவாமிமலை திரு ராஜரத்தினம் பெருமைப்படலாம்!

□ பேபி சரளா, பேபி சாரதா இருவருக்கும் நடனம் பயிற்சி அளித்த ஸ்ரீமதி ஜானகி பாஸ்யம் மிகவும் கவனத்தோடு குழந்தைகளுக்கேற்ற பாடல்களையே தேர்ந்தெடுத்திருந்தார். ''தாயே யசோதா''வுக்குக் குழந்தைகள் பிடித்த அபிநயம் அருமை. வர்ணம், தர்மாவதி ராகத்தில், ''...மாமனை, கண்ணனை, என்னிடம் அழைத்தோடி வாடி, ஆருயிர்த் தோழி....' என்று தொடங்கிக் குழந்தைகளின் அபிநயத்தில் அழகு வடிவம் பெற்று அனைவரையும் கவர்ந்தது.

□ குமாரி சுபாகா அண்மையில் சென்னை, சோவியத் கலாசார அரங்கில் நடனமாடினார். ஆனந்தபைரவி வர்ணத்திலேயே நிருத்தியம், பாவம், நளினம் ஆகிய முக்கிய அம்சங்களெல்லாம் சுபாகாவிடம் பொருந்தி இருந்தன. அப்புறம் அபிநயங்களும் தில்லானாவும் சோபிக்கக் கேட்பானேன்? ஸ்ரீ ராமநாதனின் நட்டுவாங்கம் நிகழ்ச்சி களை கட்ட உதவியது.








20-அம்ச திட்டம்

அம்சம்: 9


கைத்தறித் தொழில் வளர்ச்சி—நெசவாளிகளுக்குப் பாதுகாப்பு.



20-அம்ச திட்டம்

அம்சம்: 10


சாதாரண மக்கள் அணியும் துணிகளின் தரத்தை உயர்த்தி வழங்குதல்.



20-அம்ச திட்டம்

அம்சம்: 11

நகர்ப்புற மற்றும் நகர்ப்புறம் ஆகக்கூடிய நிலத்தைச் சமூக உடமை ஆக்குதல்; காலி நிலத்தையும் புதிய குடியிருப்புகளை ஒட்டிய பகுதிகளையும் உடைமையாக்கிக் கொள்வதற்கு உச்சவரம்பு விதித்தல்.



20-அம்ச திட்டம்

அம்சம்: 12

வரி ஏய்ப்பைத் தடுத்தல் — பொருளாதாரக் குற்றங்கள் செய்வோர் மீது புலனாய்வு நடத்திக் கடுமையான தண்டனை விதித்தல்.



வெளியீடு:
இயக்குநர்: செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
தமிழ்நாடு அரசு, சென்னை-600 009

சர்ப்பத்தின் துயரம்!

ஏ.என்.பட்



குட்டிக்கதைகள்

கானகம் வழியாகச் செல்லும்போது இரு நண்பர்கள் ஓர் ஆழமான குழியில் விழுந்து விட்டார்கள். சற்று நேரத்தில் ஒரு சர்ப்பமும் துரதிர்ஷ்ட வசமாக அதே குழியில் விழுந்து விட்டது.

ஒருவன் அதை உடனே கொன்றுவிட வேண்டும் என்றான்.

சர்ப்பம் கெஞ்சியது. ''என்னைத் தூக்கி மேலே குழிக்கு வெளியே வீசிவிடுங்கள். உங்களைக் காப்பாற்ற நான் ஆட்களை அழைத்து வருவேன்'' என்றது.

இந்தக் கோரிக்கையை ஒருவன் ஏற்கவில்லை. மற்றொருவன், பாம்பு சொற்படி கேட்பது நல்லது என்று கருதினான். இருவருக்குமிடையில் சண்டை மூண்டது.

சண்டைக்கிடையில் சர்ப்பமும் அகப்பட்டுக்கொள்ள, ஒருவன் அதனைக் காயப்படுத்தினான். மற்றொருவன் எப்படியோ அதனைப் பற்றித் தூக்கிக் குழிக்கு வெளியே எறிந்து விட்டான்.

காயமடைந்திருந்த நாகத்துக்கு உடனே நகர முடியவில்லை. உடல் சற்றுத் தேறியதும் ஊர்ந்து சென்று கொஞ்சம் தொலைவில் முகாமிட்டிருந்த சில நபர்களைக் குழிப்பக்கமாக ஈர்த்து வந்தது.

ஆனால் அவர்கள் வந்து சேர்ந்து குழியில் கிடந்தவர்களைக் காப்பதற்கு முன்னால் அந்த இருவரும் பசி தாங்காமல் செத்துவிட்டிருந்தனர்.

'அவர்கள் சண்டை போட்டுக் கொள்ளாமல், தன்னைக் காயப்படுத்தாமல் குழிக்கு மேலே எறிந்திருந்தால் பிழைத்திருப்பார்களே' என்று வருந்தியபடியே நாகம் புதர்களுக்கு இடையில் சர சரவென ஊர்ந்து மறைந்தது.

நீதி: (நீங்களே எழுதிக் கொள்ளவும்)

மகிழ்ச்சியின் விலை!



ஒரு மனிதன் தவம் இருந்தான். கடவுள் பிரத்யட்சமானார். ''வரையறை யில்லாத செல்வம் வேண்டும்'' என்று வரம் கோரினான் மனிதன்.

''எதற்கு அத்தனை செல்வம்?'' என்று கடவுள் கேட்டார்.

''எல்லாவித சுக போகங்களையும் அனுபவிக்க.''

''சுகபோகங்கள் உனக்கு என்னத்தை அளிக்கின்றன?''

''மகிழ்ச்சியை.''

கடவுள் புன்னகை புரிந்தார். ''ஒன்றுமில்லாமலேயே மகிழ்ச்சியைப் பெறலாமே'' என்று கூறிவிட்டு மறைந்தார்.

நீதி: (நீங்களே எழுதிக்கொள்ளவும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

புதுமையின் பொலிவுக்கு

ஹமாம்



நறுமணம் சிந்தும் ஹமாம்...
உங்களுக்கும் உங்கள் குடும்ப
முழுமைக்கும் புதுமைப் பொலிவு
வழங்கிடுமாம்... உள்ளத்தில்
குதூகலம் பொங்கிடச் செய்திடுமாம்.

ஹமாம்

அதிக நாள் நீடித்துழைக்கும்
டாய்லெட் சோப்.

டாம்கோ தயாரிப்பு—
வாங்க நல்லது
விலை குறைந்தது...
வேலையோ சிறந்தது.
தி டாடா ஆயில் மில்ஸ் கம். லிட்.

CMTH-15-172TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு

